# பொருளடக்கம்

## I. மாடு, ஆடுகளுக்கு வரும் நோய்கள்


1. வயிறு உப்பிசம்.
2. தீனி தின்னாமை, தெளியாத நிலை
3. மலச்சிக்கல்
4. கழிச்சல்
5. குடற்புழுக்கள்
6. சொக்கிக் கொள்ளுதல்
7. செருமல், ஜலதோஷம்
8. மூக்கடைப்பான்
9. தொண்டை அடைப்பான்
10. கால் காணை, வாய்காணை (கோமாரி நோய்)
11. சப்பை நோய்
12. மடி நோய்
13. காய்ச்சல் / குந்து
14. பருவத்திற்கு வராமல் சினை பிடிக்காமல் இருத்தல் இனப்பெருக்க கால நோய்கள்
15. இளங்கொடி விழாதிருத்தல்
16. கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்
17. சிறுநீர் பிரியாதிருத்தல் மற்றும் சிறுநீரகம் சார்ந்தபிரச்சினை
18. கண் நோய்கள்
19. காது நோய்
20. எலும்பு முறிவு
21. சுளுக்கு, அடிபட்ட வீக்கம்
22. கொம்பு முறிவு
23. புண்கள் / காய்கள்
24. கட்டி / கழலை / சிலந்தி
25. சொறிநோய், தோல் உரிதல்
26. விஷக்கடி
27. வெறிநாய்கடி
28. பேன், உண்ணிகள்
29. சரீர பலம், இரத்த விருத்திக்கு
30. பால் அதிகம் கறக்க
31. குதிரை வலிப்பு நோய்
32. தவளை நோய்
33. கரணை நோய்
34. எல்லா நோய்களுக்கும் ஊறல் மருந்து
35. செம்மறி ஆட்டு நீலநாக்கு நோய்
36. செம்மறி ஆட்டு துள்ளுமாரி நோய்
37. நசியங்கட்டுதல்


## II . கோழி, பறவைகளுக்கு வரும் நோய்கள்


ஆஜீரணம்
வெள்ளைக்கழிச்சல்
இராணிகட் கழிச்சல்
வான் கோழி கழிச்சல்

சுவாச நோய்கள்

கீரிப் பூச்சிகள்

தட்டைப் பூச்சிகள்

காயங்கள்

கோழிப்பேன்கள் / செல்கள்

கோழி அம்மை

III. ஆடு மாடு சுழிகளும், குணங்களும்
IV. மந்திரித்து குணப்படுத்துதல்
V. கால்நடை தீவனம்
VI. செம்மறி ஆடு பராமரிப்பில் மூலிகை வைத்தியம்
VII. பஞ்சகவ்யாவின் மகிமை
VIII. வயதான மாடுகள் இறக்கும் தருவாயில் இருந்தால்.
IX. பாயும் காளைக்கு
X. மாடு சினை பிடித்ததை எளிய முறையில் கண்டுபிடித்தல்

# 1. வயிறு உப்பிசம்

## அறிகுறிகள்

வயிறு உப்பி காணப்படும்; ஒரு நிலையில் நிற்காது; இடது பக்க வயிற்றில் தட்டினால் மத்தள சப்தம் போல் கேட்கும்; வயிற்றிலிருந்து இறைச்சல் சப்தம் வரும்; அடிக்கடி வாயு பிரியும்; மாடு வயிற்று வலியினால் அடிக்கடி படுக்கவும், எழுந்திருக்கவுமாக இருக்கும்; வழக்கம் போல் அசை போடாது; தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் வயிறு அதிகமாக உப்பி மூச்சு விட முடியாமல் சிரமப்படும்.

## காரணங்கள்

பொதுவாக கெட்டுப் போன சாதத்தை அதிகமாக உண்பதாலும் தீவனத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தாலும் இது ஏற்படுகிறது. மாடுகளுக்கு இது சாதாரணமாக நேரிடக்கூடியது. வயிற்றிலுள்ள ஆகாரத்தின் அமில காரங்களால் வாயு உண்டாகிறது. நனைந்த புல்லையும் பச்சைப் புல்லையும் கூடுதலாக உண்பதினாலும் இப்பிரச்சினை ஏற்படுகிறது. வழக்கமில்லாத புதிய இரக தீவனத்தைக் கொடுப்பதினாலும். மாடுகளுக்கு போதிய அளவு சரியானபடி தீனி கிடைக்காத சமயத்தில் மழைக்கு பின் துளிர்த்த இளம்புல்லை அதிகமாக தின்று விடுவதினாலும் இந்த வியாதி உண்டாகிறது. மாடுகளின் வயிற்றில் எப்பொழுதும் சிறிதளவு வாயு இருப்பது வழக்கம். ஆனால் வாயு அளவிற்கதிகமாக உண்டாகிவிட்டால் அவதிப்படும்.



## வைத்திய முறைகள்

o நல்லெண்ணெய் 100 மி.லி. எருக்கன் இலைக்கொத்து ஒன்று சேர்த்துச் சாப்பிட வைத்தால் அரை மணிநேரத்திற்குள் மாடு அசைபோட ஆரம்பித்துவிடும்.

**(கண்ணப்பன், பாரூர், தருமபுரி)**

o வெல்லம் 200 கிராமம் ஏலக்காய்100 கிராம், கல்உப்பு 100 கிராம் மூன்றையும் இடித்து ஒன்றாகக் கலந்து ஒரு நாளைக்கு 2–3 வேளைகள் உள்ளுக்குள் கொடுக்க குணமாகும்.

**(ஆர்.கே. குப்தா, டேராடூன்)**

o வெற்றிலை 10, கிராம் இஞ்சி 20 கிராம், மிளகு 10 கிராம் வெள்ளைப்பூண்டு 10 கிராம் ஆகியவற்றை நன்கு இடித்து 1 லிட்டர் வெந்நீரில் கலக்கி கொடுத்தால் கால்நடைகளுக்க ஏற்படும் செரிமானமின்மை. வாய்வு, வயிற்றுவலி நீங்கும்.

**(சகன்பாய், பரோடா, குஜராத்)**

o இந்துப்பு, மூங்கில் உப்பு, வளையல் உப்பு, கரிஉப்பு, சவுட்டுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சோத்துப்பு, கல்நார், கடல்நுரை, கரும்பெருங்காயம் ஒவ்வொன்றும் 25 கிராம் (இந்த வகையான உப்புகள் நாட்டு மருந்து கடைகளில் விற்பனைக்கு கிடைக்கும்) எடுத்து இடித்து சூரணம் செய்து சல்லடையில் சலித்து பிரண்டைச் சாறு 1லிட்டரில் எடுத்து 25மி.லி.விளக்கெண்ணெய் கலந்து வேளைக்கு ½ லிட்டர் வீதம் இரு முறை கொடுக்கவேண்டும்

**(எம். சுப்பிரமணியன், சின்னேரிபாளையம், பொள்ளாச்சி)**

o புளி 200 கிராம், கல் உப்பு 200 கிராம் இவைகளை ½ லிட்டர் நீரில் கலந்து வடிகட்டி உள்ளே கொடுக்க வேண்டும்

(ஆர். ரெங்கசாமி, இராமகோவிந்தன்காடு, நாகப்பட்டிணம்)

o சுக்கு, மிளகு, பூண்டு ஆகியவை ஒவ்வொன்றிலும் 50 கிராம் வீதம் எடுத்து கருப்பட்டி 1/4 கிலோ சேர்த்து இடித்து உருண்டையாக 1 வேளை உள்ளே கொடுத்தால் சரியாகிவிடும்.

(இ.இராமசாமி. மம்மானியூர், திண்டுக்கல்)

○ இரண்டு வட்டு பனங்கருப்பட்டி, சோற்றுக்கற்றாழை 4 மடல்கள் (முள் நீக்கியது), வாழைப்பழம்10, சோளக்கூழ் ¼ படி ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் ஒன்றாகக் கரைத்து மாட்டுக்கு ஒரே தடவையில் ஊற்ற வேண்டும். ஊற்றிய பின் ½ மணி நேரத்திற்குள் கழிச்சல் ஏற்பட்டு மாட்டுக்கு வயிறு உப்பிசம் சரியாகிவிடும்.

(பெரியவேலுச்சாமி, பழனிகவுண்டன்வலசு, தாராபுரம்)

o நீலி தழை (வண்ணான் அவுரி), ஜாலத்தழை (நஞ்சறுப்பான்), உத்தாமணி (வேலிப்பருத்தி) ஒவ்வொன்றிலும் கைப்பிடியளவு எடுத்து அரைத்து நீராகாரத் தண்ணீர் அரை படியில் கலந்து 2 வேளை புகட்ட வேண்டும்.

( தஞ்சிகான், தாழங்குணம், செஞ்சி, விழுப்புரம்)

o ¼ கிலோ புளியைக் கரைத்து 2 எள்ளுச் செடி இலைகளை இடித்து இரண்டையும் கலந்து ஒரே தடவையில் தரவேண்டும்.

( தங்கச்சாமி தேவர், ஆவாரங்குளம், விருதுநகர்)



o சுக்கு 25 கிராம், மிளகு 10 கிராம், வெற்றிலை 50 கிராம், கொடி பிரண்டை 4 தண்டு இவைகளை உரலில் நன்கு இடித்து வெந்நீர் 1/4 லிட்டரில் கலந்து உப்பு 50 கிராம் சேர்த்து கலக்கி காலையில் உள்ளே கொடுக்க வேண்டும்.

(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி)

o கருஞ்சீரகம் 5 கிராம், வெடியுப்பு 5 கிராம் இத்துடன் 20 மி.லி தேன்விட்டு அரைத்து பப்பாளி இலை தண்டுக்குள் மருந்தை ஊற்ற ஆடு அல்லது மாட்டின் ஆசனவாயின் வழியாக வைத்து நமது வாயால் ஊதவேண்டும்.

பப்பாளி தண்டிற்கு பதிலாக ½ இஞ்ச் விட்டமுள்ள நைலான் குழாய் தண்ணீர் டியூப்களைப் பயன்படுத்தலாம்; முனையில் சிறிது விளக்கெண்ணெய் தடவி சொருகிக் கொள்ளலாம்.

(எ.பி.பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)

o வாதநாராயணன் மரப்பட்டை, முருங்கைப்பட்டை ஆகியவற்றில் 100 கிராம் வீதம் எடுத்து 1 லிட்டர் நீருடன் காய்ச்சி 500 மி.லி கசாயம் செய்து சுக்கு, ஓமம், பெருங்காயம் 5 கிராம் வீதம் இடித்து கலந்து உள்ளே கொடுக்க குணமாகும்.

(வெளியப்பன், காமயக் கவுண்டன்பட்டி, தேனி)

o சுக்கு 50 கிராம், கஸ்தூரி மஞ்சள் 50 கிராம், சீரகம் 50 கிராம், ஈஸ்வர மூலிகை இலை 100 கிராம் மற்றும் சர்க்கரை கொல்லி இலை 100 கிராம் (சிறு குறிஞ்சான்) போன்றவைகளை உரலில் இடித்து உருண்டையாக்கி காலை மாலை இருவேளை சம அளவில் கொடுத்தால் குணமாகிவிடும்.

தொட்டி தண்ணீர் குடிக்க விடக்கூடாது. சுத்தமான நீரை காய்ச்சி பின் ஆறவைத்து குடிக்க கொடுக்க வேண்டும்.

**(பெரியஅய்யாவு, சல்லிக்கோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

o செம்பிரண்டை, வாதாபிரண்டை, நற்சீரகம், பூண்டு, சிவப்பு குண்டுமணி தழை ஆகியவற்றை 50 கிராம் அளவில் அரைத்து உள்ளே புகட்ட வேண்டும் அல்லது வெற்றிலை 10 எண்ணம் கட்டி கற்புரம் 1 சுக்கு 50 கிராம் ஆகியவற்றை அரைத்து கொடுக்க வேண்டும்.

**(ஜெயராமன், செய்யான்குளம், விழுப்புரம்)**

o செம்பிரண்டை கிழங்கு 4, சின்ன வெங்காயம் கால் கிலோ மிளகாய் வற்றல் 2 சேர்த்து இடித்து எலுமிச்சம் பழ அளவு உருண்டை செய்து தினமும் மாலை 3 நாட்களுக்கு உள்ளே கொடுக்க வேண்டும்.

**(பொன்னம்மாள், மம்மானியுர், திண்டுக்கல்)**

o மிளகரணைப்பட்டை, செவக்காடு பூண்டு, மரநெல்லிப்பட்டை, சேற்றுப்புண் பச்சிலை, கல்லத்தி, வெப்பாலைப்பட்டை, கல்லரசன், குருவப்பூண்டு, வேங்கைப்பட்டை, வேப்பம்பட்டை, புங்கம்பட்டை, மாகாலிக்கிழங்கு, சிறய நன்னாரி வேர், பனங்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சந்தனமரப்பட்டை, மருதம்பட்டை, உடுப்பைப் பட்டை, பிரண்டை, மிளகு, சீரகம், ஓமம், பெருங்காயம், வாயுவிடங்கம், மஞ்சள், சுக்கு, நெல்லிக்காய், புளியங்காய், உப்பு குமிழம்பட்டை போன்ற மூலிகைப் பொருட்களை பசுமையாக இடித்து பாறையில் போட்டு விட வேண்டும். இதனை கால்நடைகளுக்கு காட்டினால் அவைகளே தானாக தின்றுவிடும்.



இவ்வாறு செய்த பின்பு கால்நடைகளுக்கு ஒரு நாள் முழுவதும் தண்ணீர் காட்டக்கூடாது. இவ்வாறு வருடத்திற்கு இரண்டு முறை செய்ய வேண்டும்.

**(சாலை வெங்கடேசன், நன்னாரி கிராமம், வேலூர்)**

o பிரண்டை 1 கொத்து, புங்கம்பட்டை 50 கிராமம் மற்றும் பீநாரி மரப்பட்டை 50 கிராமம் இடித்து சாறு வடித்து லிட்டர் விளக்கெண்ணெய் கலந்து கொடுத்தால் சரியாகிவிடும்.

**(பெரியஅய்யாவு, சல்லிக்கொடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

o பெருங்காயம் 10 கிராம், சுக்கு 10 கிராம், மிளகு 10 கிராம், திப்பிலி 10 கிராம், கருப்பட்டி ¼ கிலோ இவை அனைத்தையும் இடித்து வாழை இலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(இராமு, சூராணம், சிவகங்கை)**

o ஒரு கிலோ சிறுதும்பை செடியை எடுத்து நீர்விடாது இடித்து 250 மி.லி.சாறு எடுத்து உள்ளே கொடுத்தால் கழிச்சல் ஏற்பட்டு உப்பிசம் சரியாகும். இந்த வைத்தியத்தை அனுசரிக்கும் சமயம் புரையோடி விடாது மெதுவாக உள்ளே கொடுக்க வேண்டும்.

**( ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி)**

o பேராமுட்டி இலை 100 கிராமம், சீரகம் 50 கிராம் எடுத்து தனியே இடித்து ஒன்றாகக் கலந்து உள்ளே கொடுக்கவேண்டும்.

**(சுப்பையா, பூசாரிபட்டி, திருப்பத்துார்)**

o கார்போக அரிசி 10 கிராம், ஓமம் 10 கிராம், வசம்பு 5 கிராம், பெருங்காயம் 10 கிராம், முடக்கத்தான் இலை ஒரு கைப்பிடி, இஞ்சி 5 கிராம் எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து ஒரு முழு எலுமிச்சம்பழச் சாறு சேர்த்து 200 மி.லி. தண்ணீரில் கலந்து ஒரு வேளைக்குத் தரவேண்டும்.

**(முத்து, மணப்பச்சேரி, கொட்டாம்பட்டி, மதுரை)**

o விளக்கெண்ணைய் 200 மி.லி.யுடன் கட்டி சூடம்2, பெருங்காயம் 5 கிராம் பொடித்து கொடுக்க வேண்டும். (அல்லது) 25 கிராம் சுக்கு தூள், 15 கிராம் மிளகு தூள், 1 லிட்டர் சாராயம் இதனை 5 லிட்டர் நீரில் கொடுக்க வேண்டும். குணமான 2 அல்லது 3 நாட்களுக்கு 20 கிராம் சுக்கு தூளையும், 40 கிராம் சமையல் சோடா உப்பையும் சேர்த்து தீனியிலாவது அல்லது தண்ணீரிலாவது சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது சுக்குத்தூள் 20 கிராம், நிலவேம்பு 20 கிராம், ஓமம்10கிராம், எட்டிக்கொட்டை 5–10 கிராம் இவைகளை நன்றாகப் பொடிசெய்து தீனியில் சேர்த்து 3 முதல் 5 நாள் வரை கொடுக்கலாம்.

**(கால்நடை பராமரிப்பு துறை செய்தி குறிப்பு – 1954, சென்னை)**



# 2. தீனி தின்னாமை, தெளியாத நிலை

### அறிகுறிகள்

சோர்ந்து காணப்படும்; தீவனம், தண்ணீர் சரிவர எடுக்காது; இளைத்துக் கொண்டேயிருக்கும்; கண் குழிந்து இருக்கும்; பால்தரும் மாடுகளின் பால் அளவு குறைந்து விடும்.

### காரணங்கள்

தீவன மாற்றம், காய்ச்சல் அலுப்பு, கட்டுத்தரை மாறுதல், நாவரணை போன்ற காரணங்களால் ஏற்படும்.

### வைத்திய முறைகள்

o 1 கிலோ பிரண்டையை இடித்து இத்துடன் 100 கிராம் மஞ்சள், 100 கிராம் கல் உப்பு சேர்த்து மாட்டின் நாக்கில் தேய்த்து பின்னர் கவளமாக உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**( புல்லாக்கவுண்டர், தொண்டாமுத்தூர், கோவை)**

o செம்பிரண்டை, வெள்ளை புரசம்பட்டை, செருப்படிச்சாரணை, சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து இவை அனைத்தையும் இடிக்க வேண்டும். பின்னர் முள் நீக்கிய சோற்றுக் கற்றாழை ஒருமடல், வேப்பெண்ணைய் 100 மி.லி. சேர்த்து நன்றாகப் பிசைந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(எஸ்.முத்துச்சாமி, குளித்தலை, திருச்சி)**

o சோற்றுக் கற்றாழை மடலின் பக்க முள்ளை நீக்கி இரண்டாகப் பிளந்து உப்பைத் தடவி வெள்ளைத் துணியில் சுற்றி இரவில் வீட்டுக் கூரையில் பனியில் வைத்து விட்டுக்காலை வேளையில் மாட்டிற்குக் கொடுக்க வேண்டும். வாரம் ஒரு முறை தொடர்ந்து 3 வாரங்களுக்கு கொடுக்கலாம்.

பிரண்டை, உப்பு, புளியங்காய், பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து இடித்து அரைத்து பசை போலாக்கி நாக்கின் மேல் வைத்து நன்றாக தேய்த்து விடவும். பின்பு ஒரு துணியால் வாய்பகுதியின் மேல் 2 மணி நேரத்திற்கு கட்டிவிட வேண்டும். பின்பு கட்டை அவிழ்த்து விட வேண்டும். இதனால் மாடு நன்றாக தீவனம் எடுக்கும்.

கமலை ஒட்டி நலிந்த மாடுகளுக்கு வேங்கைப்பட்டை, நூறு வருடம் சென்ற வேப்பமரப் பட்டை, வெள்வேலாம் பட்டை ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்து இவைகளை நீரில் ஒரு வாரம் ஊற வைத்து கிடைக்கும் பீர் மாதிரியான திரவத்தை 3 நாட்கள் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இத்துடன் கருஞ்சீரகம் 10 கிராம், பனை வெல்லம் 250 கிராம் இடித்து இத்துடன் சேர்த்துக் கொடுக்க மாடு உடல் வலிமை பெறும்.

**(ராஜப்பா, தென்கனிக்கோட்டை, தருமபுரி)**

o காட்டுநொச்சி இலை ஒரு கைப்பிடி, குப்பைமேனி இலை ஒரு கைப்பிடி, மஞ்சனத்தி இலை (நுனா) ஒரு கைப்பிடி, பிரண்டை கொழுந்து ஒரு கைப்பிடி, மஞ்சள் 100 கிராம், சீரகம் 100 கிராம், உப்பு 200 கிராம், மிளகாய்வற்றல் 100 கிராம், வெங்காயம் 200 கிராம் இவை அனைத்தையும் இடித்து உருண்டை செய்து மூன்று சம பங்காகப் பிரித்து 3 வேளை உள்ளே கொடுக்க உடல் தேறும்; நன்றாகத் தீனி, நீர் எடுத்துக்கொள்ளும்.

**(வெள்ளமாயத்தேவர், செக்கானூரணி, மதுரை)**



o மாட்டின் நாக்கின் பின்புறத்தில் பச்சை நிற நரம்பு (இரத்தக்குழாய்) தென்பட்டால், பாதித்த மாட்டின் மூக்கின் முனை மினுமினுப்பாகவும், உடல் இளைக்கவும் ஆரம்பிக்கும். வாயிலிருந்து நீர் வடிந்துகொண்டே இருக்கும். நாக்குத் தடித்து இருக்கும், தீவனம் எடுக்காது.

o நாக்கை புரட்டி கரு–ரத்தம் (பச்சை நரம்பு) கொண்ட நரம்பை ஊசியால் குத்தி இரத்தத்தை வெளியேற்றிய பின்பு கல் உப்புத்தூளை புளியுடன் பிசைந்து, நரம்பு குத்திய இடத்தில் தேய்க்க வேண்டும். பின்னர் கீழ்க்கண்ட மருந்தை கவளமாகக் கொடுக்க வேண்டும்.

o சீரகம் 35 கிராம், கருப்பட்டி 175 கிராம், வெந்தயம் 175 கிராம், ஓமம் 20 கிராம் ஆகியவற்றை நன்றாக அரைத்து தேவையான அளவு பசும் பாலுடன் கலந்து அத்துடன் நல்லெண்ணெய் 175 மி.லி. கலக்கி தினமும் 1 வேளை வீதம் 3 நாட்கள் தொடர்ந்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(ஆர். நவநீதகிருஷ்ணன், உத்திரமெரூர், செங்கை)**

o மூன்று மாதங்களிலிருந்து ஒரு வருடம் ஆன கன்றுகள் பாலைக் குடிக்காமலும், புல்லை மேயாமலும் இருக்கும். இதற்கு பசு மாட்டு வெண்ணெயுடன் எருக்கங்கொழுந்து சிறிதளவு எடுத்து அரைத்து சுடு தண்ணீரில் கலந்து வாய்க்குள் ஊற்ற வேண்டும்.

**(ராஜப்பா, தென்கனிக்கோட்டை, தருமபுரி)**

o ஆகாய கருடன்கிழங்கு (கொல்லங்கோவை கிழங்கு) அரை கிலோ, பிரண்டை கொழுந்து கால் கிலோ, சிறிய வெங்காயம் அரை கிலோ, உப்பு 100 கிராம், சீரகம் 50 கிராம், ஓமம் 50 கிராமம், துருவிய தேங்காய் 1 இவை அனைத்தையும் இடித்து மூன்று உருண்டையாகக் கொடுத்தால் தேராத, இரை எடுக்காத மாடு மற்றும் பால் கறக்காத மாடு அனைத்திற்கும் நிவர்த்தி ஆகும்.

**(எல்.சின்னப்பன், காந்தி கிராமம், திண்டுக்கல்)**

o ஆவாரை இலை, துத்தி இலை, பாகல் இலை, முசு முசுக்கை இலை, குப்பைமேனி இலை, தும்பை இலை, கொளுஞ்சி இலை, பிரண்டை சிறிதளவு ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கைப்பிடி யளவு எடுத்துக்கொண்டு, அதை நன்றாக உரலில் போட்டு இடிக்க வேண்டும். அத்துடன் 100 கிராம் வெங்காயம் சேர்த்து இடித்து சிறிது மஞ்சள்தூள் தூவி, நன்றாக பிசைந்து 100 கிராம் அளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும்.

பின்பு மாட்டை பிடித்துக்கொண்டு அதன் நாக்குப் பகுதியில் உப்பு போட்டு நன்றாகத் தேய்த்து உருண்டைகளை எடுத்து ஒரு வேளைக்கு இரண்டு வீதம், காலை, மாலை, இரண்டு வேளையும், இரண்டு நாட்களுக்கு கொடுத்தால் மாடு நன்றாகத் தீவனம் மற்றும் தண்ணீர் எடுப்பதுடன், நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகமாகப் பெறும். மேலும் கால்நடை நன்றாக உடல்வாகுடன் காணப்படும்.

**(விஜயா கணேசன், கோவிந்த நகரம், தேனி)**



o ஈஸ்வர மூலிகை வேர் (தலைச்சுருளி) 50 கிராம் அளவு எடுத்து அரைத்து 2 வேளை நீருடன் சேர்த்து உள்ளே புகட்ட வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O இஞ்சி 10 கிராம், சித்தரத்தை 10 கிராம், சிறுவெங்காயம் 50 கிராம், கருஞ்சீரகம் 5 கிராம் எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து 2 எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து 300 மி.லி. தண்ணீருடன் கலந்து ஒரே தடவையில் உள்ளே கொடுக்க வேண்டும்.

**( முத்து, மணப்பச்சேரி, கொட்டாம்பட்டி, மதுரை)**

## கசாய மருந்து

வயிறு சம்பந்தமான அனைத்து வியாதிகளுக்கும் இந்த கசாய மருந்து ஏற்றது. சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, கடுக்காய், அதிமதுரம், நாவல் கொட்டை, நெல்லி வற்றல், நெருஞ்சி முள், கண்டங்கத்திரி விதை மற்றும் வெந்தயம் ஆகிய ஒவ்வொன்றிலும்20 கிராம் எடுத்து ஒரு மண்பாண்டம் அல்லது செம்பு பானையில் 4 லிட்டர் நீருடன் கலந்து 2 நாட்கள் ஊறவைக்க வேண்டும். மூன்றாவது நாள் மஞ்சனத்தி, வேம்பு, புளி, பனை, தென்னை மற்றும் நெல் உமி போன்றவற்றால் எரித்து 4 லிட்டர் நீர் 2 லிட்டராக வற்றும் வரை காய்ச்சி அடுப்போடு வைத்திருந்து மறுநாள் வெது வெதுப்பாக சூடு செய்து பருத்தித் துணியில் வடிகட்டி கசாயம் எடுத்து சுத்தமான பாட்டிலில் ஊற்றி வைத்துக்கொள்ள வேண்டும்.

காலையில் வெறும் வயிற்றில் 100 மி.லி. அளவு இந்த மருந்தை உள்ளுக்குள் ஊற்ற வேண்டும். மருந்து கொடுத்தபின் 2 மணி நேரத்திற்கு வேறு தீவனம் கொடுக்க கூடாது. இதே போல் இரவு தீனி எடுத்த பின்பு 100 மிலி மருந்தை உள்ளுக்குள் ஊற்ற வேண்டும். இவ்வாறு தொடாந்து 48 நாட்கள் சிகிச்சை அளித்தால் வயிறு சம்பந்தமான பிரச்சினைகள் சரியாகி மாடு நான்கு தீவனம் எடுக்கும்.

**(மகாலிங்கம், தியாகராஜபுரம், விருதுநகர்)**

## மசால் உருண்டை தயார்செய்து கொடுத்தல்

கண்டங்கத்திரி, சிறுதும்பை, குப்பைமேனி, வீலி, பெருதும்பை, உசிலை, துளசி, ஆவாரம்பூ விராலி, மூங்கில் இலை, புளியம்பிரண்டை, துத்தி, முசுமுசுக்கை, கொளுஞ்சி, மஞ்சணத்தி, வேலிப்பருத்தி, நிலவேம்பு, கொய்யா கொழுந்து இலை, வெற்றிலை ஆகியவற்றில் வகைக்கு 50 கிராம் (ஒரு கைப்பிடி அளவு) எடுத்துக் கொண்டு நன்றாகஇடிக்க வேண்டும். திப்பிலி, சீரகம், சோம்பு, பெருங்காயம், வால் மிளகு, சுக்கு, மிளகு, மிளகாய்வற்றல், கசகசா, இலவங்கம், வெந்தயம், ஓமம், மல்லி, மாவிலங்கம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 10 கிராம் எடுத்து இடிக்க வேண்டும். இவைகளுடன் வாழைப்பு 1, கல் அத்திக்காய் 100 கிராம், சோற்று கற்றாழை கால்கிலோ, பிரண்டை அரை கிலோ, சிறுவெங்காயம் அரை கிலோ, தேங்காய் 1, வெள்ளைபூண்டு 100 கிராம், கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம், வெல்லம் 100 கிராம் இவைகளை நீர் ஊற்றாமல் மொத்தமாக ஆட்டி உருண்டைகளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உருண்டைகள் ஒவ்வொன்றும் சுமார் 100 கிராம் அளவு இருக்குமாறு பிடிக்க வேண்டும். ஆடுகளுக்கும், கன்றுகளுக்கும் 50 கிராம் அளவு உருண்டைகளாக பிடித்து வைத்துக்கொள்ளலாம். இந்த உருண்டைகளை



மஞ்சள்தூளில் உருட்டி எடுக்க வேண்டும். இதனை 4 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கலாம். கால்நடைகளுக்கு காலை மாலை 3 நாட்கள் வரை கொடுத்து வர வேண்டும். இது மாடுகளின் இளைப்பு, அடைப்பான், வயிற்றுக் கிருமி ஆகியவற்றை நீக்கப் பயன்படும். இந்த மசால் உருண்டையை போடுவதற்கு முன்பு நாக்கை இழுத்து பிடித்து நாக்கின் அடிப்பாகத்தில் உள்ள பச்சை நிற இரத்த நாளங்களை ஒரு ஊசியால் குத்தி அசுத்த இரத்தத்தை வெளியேற்ற வேண்டும். பிறகு உப்பு, புளி கலந்து நாக்கின் மீது நன்றாகத் தேய்த்து விட வேண்டும்.

## கடைபிடிக்க வேண்டியன

குடிநீர் போதுமான அளவு குடிக்கக் கொடுக்க வேண்டும். குடிநீர் குடித்த பின்பும் மேலும் நீர் குடிக்க நாக்கில் சோத்து உப்பை தேய்த்து விட வேண்டும். இங்ஙனம் 2–3 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

**(மூக்கன், மேலஉரப்பனூர், திருமங்கலம், மதுரை)**

மேற்கண்ட முறையை கடைபிடித்து இதுவரை சுமார் 10,000–த்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளுக்கு கொடுத்து நல்ல பலன் பெற்றதை நாங்கள் பார்த்துவருகின்றோம். சேவா மூலம் கொடுத்த பயிற்சியில் பல மாணவர்களுக்கு இதனை கற்றுக் கொடுத்து அவர்களும் தங்கள் இடங்களில் கொடுத்து பார்த்ததில் நல்ல பலன் கிடைத்த அனுபவத்தை எங்கள் சேவா பணியாளர்களுடன் பகிாந்துள்ளனர். – ஆசிரியர்.

O மஞ்சள், ஓமம், கஸ்துாரி மஞ்சள், அரிசி, திப்பிலி, வால்மிளகு, வலம்புரிக்காய், சீரகம் ,கருஞ்சீரகம் ஆகிய ஒவ்வொன்றிலும் 20 கிராம், சின்ன வெங்காயம் 1 கிலோ, சதகுப்பை 10 கிராம், கிராம்பு 20 கிராம், எலம் 20 கிராம், மல்லி 20 கிராம், கச்சக்குமட்டி வேர் 1 பிடி, மூங்கில் துார் கிழங்கு1, தேங்காய் 2 இவற்றை இடித்து நல்லெண்ணெய் அரை லிட்டரில் பிசைந்து எலுமிச்சம்பழ அளவு உருண்டையாக ஒரு நாளைக்கு இரண்டு வீதம் 5 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**(முத்துராஜ், குருந்தம்பட்டி, வேடசந்துார், திண்டுக்கல்)**

O புளியம்பிரண்டை கிழங்கை 4 எண்ணம் எடுத்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். இம்முறையை 3 நாட்களுக்கு காலையில் பின்பற்ற வேண்டும்.

**(சுப்பையா, பழனிகவுண்டன் வலசு, தாராபுரம், ஈரோடு)**

O 100 கிராம் சீனாக்காரம் நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். இது பசியை துாண்டும். இதனை கன்று ஈன்ற பிறகு 8 – 10 நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். நோயிலிருந்து தேறிய பிறகும் இதனை கொடுக்கலாம். 100 மி.லி. நல்லெண்ணெய், ஒரு கொத்து எருக்கன் இலைகள் உள்ளுக்குக் கொடுப்பது செரிமானம் உண்டாகும்.

**(அப்துல்ரசாக், மதுரை)**



O சின்னித்தழை (Acalypha fruiticosa) இரண்டு கைப்பிடி அளவு எடுத்து இத்துடன் உப்பு20 கிராம், சுக்கு 10 கிராம், சோற்றுக்கற்றாழை சோறு (4 மடல்களிலிருந்து எடுக்கப்பட்டது) இவை அனைத்தையும் நன்கு அரைத்து 2 உருண்டை பிடித்து மாட்டிற்கு இரண்டு வேளைகள் போட்டேன். இதற்கு பின் நன்கு நீர் குடிக்க ஆரம்பித்து தீவனமும் எடுத்தது.

பால் 2 நாட்களில் 4 லிட்டர் கூடிய பின் ஒரு வாரத்தில் பழைய 7 லிட்டர் பால் தரும் நிலைக்கு வந்து விட்டது.

**(பெ.விவேகானந்தன் , விராட்டிபத்து, மதுரை)**

# 3. மலச்சிக்கல்

## அறிகுறிகள்

காலநடைகளின் சாணம் கல் போல் இறுகலாக இருக்கும். மாடு சாணத்தை கொஞ்சம் கொஞ்சமாக புழுக்கை போல திணறிக் கொண்டு போடும் அல்லது சாணம் போடாமலேயே இருக்கும்.

தீனி தின்னாமலும், அசை போடாமலும் குறுகிப்போயும், சோர்வாக காணப்படும். சில கால்நடைகளுக்கு வயிறு வலியுமிருக்கும்.

## காரணங்கள்

செரிமானக் கோளாறினாலும், நீர் சத்து இல்லாத வறத்தீவனம் அதிகமாக உண்பதாலும் உண்டாகிறது. இது மாடுகள் தங்களுக்கு பிடித்தமான ஆகாரம் கிடைக்கும் பொழுது அளவுக்கு மிஞ்சித்தின்று விடுவதாலும் ஏற்படுகிறது. மேலும் கால்நடைகளுக்கு வறத்தீவனம் அதிகமாக கொடுத்து போதியளவு தண்ணீர் கொடுக்காமலிருந்தாலும் இது உண்டாகும்.

## வைத்தியமுறைகள்

O நாய்ப்பாகை இலை 100 கிராம் அரைத்து அரை லிட்டர் பாலுடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ஜெயகாந்தன், சேர்வார்விடுதி, பட்டுக்கோட்டை)**

O இலவம்பஞ்சு கைப்பிடியளவு, 100 மி.லி. விளக்கெண்ணெய் –யுடன் குழைத்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். பிறகும் சாணம் வெளியேறாவிட்டால், வெது வெதுப்பான நீரில் சோப்பைக் கரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ரா. அழகர்சாமி, கோடாங்கிப்பட்டி, போடிநாயக்கனூர், தேனி)**



O விளக்கெண்ணெய் 200 மி.லி. அல்லது 100 கிராம் ஆமணக்கு முத்து அரைத்து கால்படி தண்ணீரில் கலந்து கொடுக்க எருக்கட்டி நோய் தீரும். அல்லது மருதம் பட்டையையும் 50 கிராம், சீரகத்தையும் சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும். அல்லது ஆமணக்கு முத்து 150 கிராம் அரைத்து கால் படி நீரில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும். அல்லது நிலவாகை இலை 100 கிராம் அரைத்து சீனி 100 கிராம் சேர்த்து நீரில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும்.

**( அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O விளக்கெண்ணெய் 100 மி.லி. உள்ளே ஊற்ற வேண்டும். அல்லது பழம்பாசி தழை 2 கைப்பிடி அளவு அரைத்து விளக்கெண்ணெய் 200 மி.லி.யுடன் கலந்து உள்ளே புகட்ட வேண்டும். அல்லது குப்பைமேனி இலை 2 கைப்பிடி அளவு இடித்து சோற்றுக் கற்றாழையின் ஒரு மடல் சோறுடன் சேர்த்து புகட்ட வேண்டும்.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு , மதுரை)**

O போராமுட்டி இலை 50 கிராம், சீரகம் 25 கிராம் இரண்டையும் அரைத்து ஒரே தடவையில் கொடுக்க வேண்டும்.

**( சுப்பையா, பூசாரிபட்டி, திருப்பத்தூர், சிவகங்கை)**

O சோற்றுக்கற்றாழை சோறுடன், வீலி இலை 20 கிராம், எள் இலை 20 கிராம் கலந்து இடித்து 200 மி.லி. இளநீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(முத்து, மணப்பச்சேரி, கொட்டாம்பட்டி, மதுரை)**

O அவுரி (சென்னா) இலைகளை நிழலில் உலர்த்தி சூரணம் செய்து ஒரு வேளைக்கு 20 கிராம் வீதம் எடுத்து கருப்பட்டி 100 கிராமுடன் சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும்.

O மஞ்சள் கிழங்கு 100 கிராம் எடுத்து 1 லிட்டர் குடிநீரில் கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயத்தை 1 நாளைக்கு ஒரு முறையாக 1–3 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**(அப்துல் ரசாக், மதுரை)**

O ஒரு லிட்டர் சுடு தண்ணீரில ¼ கிலோ உப்பு சேர்த்து அத்துடன் 20 கிராம் சுக்கு பொடி சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும். மாட்டிற்கு வயிற்று வலி இருந்தால் இத்துடன் 20 கிராம் மிளகு தூளையும் சேர்த்து கொடுக்க வேண்டும். இந்த மருந்து கொடுத்து 12 மணி நேரத்திற்குள் பேதி ஆகாமல் இருந்தால் விளக்கெண்ணைய் 200 – 400 மி.லி. உள்ளே புகட்ட வேண்டும்.

**(கால்நடை பராமரிப்பு துறை, செய்தி குறிப்பு – 1954, சென்னை)**



# 4. கழிச்சல்

## அறிகுறிகள்

சாணம் தண்ணீராக இருக்கும் ; துர்நாற்றமாக இருக்கும் ; சாணம் பீச்சி அடிக்கும்; தாகம் அதிகமாக எடுக்கும் செரியாத தீவனம் சாணத்துடன் கலந்து வரும்; வால் மற்றும் பின்னங்கால்களில் கழிந்த சாணம் ஒட்டிக் கொண்டு காணப்படும் நாளுக்குநாள் மாட்டின் உடல் மெலிந்துபோகும்.

## காரணங்கள்

கால்நடைகள் சாப்பிடும் தீவனத்தில் மாற்றம் **ஏ**ற்படும் போதும் மழை பெய்தவுடன் தழைக்கும் புதிய புல், புண்டுகளை தின்பதாலும் கழிச்சல் உண்டாகும். குடலில் பூச்சிகளின் பாதிப்பு இருந்தாலும், உடல் உஷ்ணத்தினாலும், செரியாமையினாலும் அசுத்தமான நீரை குடிப்பதாலும் சில சமயங்களில் வெக்கை, தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டாலும் கழிச்சல் உண்டாகும்.

## கடைபிடிக்க வேண்டிய தடுப்பு முறைகள்

- கெட்டுப்போகாத தீவனம் மற்றும் நல்ல குடிநீர் கிடைக்க வழி செய்ய வேண்டும்.
- மழைக் காலம் அல்லது பனிக்காலங்களில் காலை மேய்ச்சல் 10 மணிக்கு மேல் ஆரம்பிக்கலாம். ஏனெனில் பனித்துளிகள் 10 மணிக்கு மேல் மறைந்துவிடும்.
- நாற்றமுள்ள கழிச்சலுக்கு, குடற்புழு நீக்கி மருந்து கொடுக்க வேண்டும்.
- வெக்கை (தொத்து நோய்) வரும் முன்னர் தக்க தடுப்பு முறையை கையாளலாம்.

## வைத்திய முறைகள்

O பழம்பாசித்தழை ஒரு கைப்பிடி அளவு, வேப்பங்கொழுந்து கைப்பிடி அளவு எடுத்து அத்துடன் சின்ன வெங்காயம் 5–7 எண்ணிக்கை அளவு எடுத்து இரண்டையும் நன்றாக அரைத்து மாட்டுக்கு உள்ளே கொடுக்க வேண்டும்.

**(முருகதாஸ், அம்பாத்துரை, திண்டுக்கல்)**

O வேப்பங்கொழுந்து, கொய்யாகொழுந்து, மாதுளங்கொழுந்து ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து 100 கிராம் வெல்லம் சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(மா.சின்னக்கண்ணு, ஆலங்குடி, புதுக்கோட்டை)**

O கொள்ளுக்காவாளி (கொளுஞ்சி) தழையை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து 100 கிராம் வெல்லம் சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(வடிவேலு, சங்கீதமங்கலம், விழுப்புரம்)**

O சுக்கு 10 கிராம், உலர்ந்த நெல்லிக்காய் 20 கிராம், சர்க்கரை 20 கிராம் இந்த மூன்றையும் அரைலிட்டர் நீருடன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு முறை கொடுக்கலாம்.

கோடைகாலத்தில் கழிச்சல் கண்டால் வில்வ பழத்தைக் காயவைத்துப் பொடிசெய்து, கஞ்சாச்செடிவிதை, கருவேலம் பிசின் வகைக்கு 10 கிராம் எடுத்து வெல்லம் 50 கிராமுடன் சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு காலை மாலை இரண்டு வேளை வீதம் 3 நாட்கள்வரை தொடர்ந்து கொடுத்து வர குணமாகும்.

**(ஆர்.கே.குப்தா, கைச். ஆர்,சிஞ், டேராடூன்)**



O இலுப்பைத் தழை ½ கிலோ எடுத்து இடித்து சாறெடுத்து ஊற்ற வேண்டும் அல்லது ஆத்தி இலையை கொடுக்கலாம் அல்லது முழு வரகை 2 படி அவித்து மாட்டுக்கு வைக்க வேண்டும். அல்லது ஊமத்தங்காயை சுட்டு மேல்தோலை எடுத்துவிட்டு நீர் விட்டு அரைத்து மாட்டுக்கு ஊற்றவேண்டும். இதற்கும் குணமாகாவிட்டால் இம்மாட்டிற்கு 'குடல்வாதம்' என்று தெரிந்து கொள்ளலாம்.

**(நாராயணன், அன்னமங்கலம், பெரம்பலூர்)**

O கொள்ளுகாவாளி (கொளுஞ்சி இலை) 2 கைப்பிடி அளவுடன் தேங்காய்த் துருவல், சீரகம், மிளகாய் வற்றல் ஆகியவற்றை 10 கிராம் வீதம் சேர்த்து அரைத்து உருண்டையாக உருட்டி 3 நாட்கள் காலை, மாலை தொடர்ந்து கொடுக்க குணமடையும்.

**(ரா. அழகர்சாமி, கோடாங்கிபட்டி, போடிநாயக்கனூர், தேனி)**

O அதிமதுரம், வசம்பு, சுக்கு, ஓமம், மிளகு, வெந்தயம் ஒவ்வொன்றும்10 கிராம் அளவு சேர்த்து அரைத்துக் கொடுக்க வேண்டும்.

கொம்பம்பாலை இலையை அரைத்து அரை லிட்டர் சாறுடன் ஒரு எலுமிச்சை பழத்தை பிழிந்து 2 நாட்கள் கொடுக்க கழிச்சல் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O பெருநெருஞ்சி (யானை நெருஞ்சி) இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து 200 மி.லி. நீருடன் பிசைந்து ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் 2 நாட்கள் கொடுத்தால் நிவர்த்தி கிடைக்கும்.

**(எஸ்.பி.கிருஷ்ணசாமி, மேலச்சொக்கநாதபுரம், போடி, தேனி)**

O 1/2 கிலோ துவரை விதையை 1.5 லிட்டர் நீரில் வேகவைத்து நீரை பாதியாக வற்ற வைக்க வேண்டும். பின்பு அதைக்க குளிரவைத்து ஒரே தடவையில் குடிக்க கொடுக்க வேண்டும் .

**(ராஜப்பா, எருமத்தனப்பள்ளி பயில்காடு, தருமபுரி)**

O 1/4 கிலோ பருத்தி விதையையும், நாலைந்து பழுத்தபூவரச இலையையும் எடுத்து நீர்விட்டு அவித்துக் கொடுக்க வேண்டும்.

**(சாமுவேல், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி)**

O வீலி இலை ¼ கிலோ, சின்ன வெங்காயம் 200 கிராம், சீரகம் 50 கிராம் இவைகளை புளிச்சத்தண்ணீரில் ஊற வைத்து இடித்து ஒரு நார்த்தங்காய் அளவு உருண்டையாக்கி ஒரு வேளைக்கு 3 உருண்டைகளை உள்ளுக்கு கொடுக்க வேண்டும். இதேபோல் 3 நாட்கள் ( மறு நாளும், அடுத்தநாளும்) காலை 7 மணிக்கு மாட்டிற்கு கொடுக்க வேண்டும்.

O பால்குடித்த கன்று கழிந்தால் 50 கிராம் கசகசா, ஒரு மாதுளம்பிஞ்சு சேர்த்து அரைத்து கொடுத்தால் 2 அல்லது 3 நாளில் கழிச்சல் நிற்கும்.

**(ஆர்.இராமு.இலுப்பகுடி,சிவகங்கை)**



O ஒரு வருடத்திற்குள் உண்டான கன்றுக் குட்டி மாடுகள் கழிந்தால், சித்தரத்தை 50 கிராம், மாசிக்காய் இரண்டு, வெள்ளைபூண்டு 50 கிராம் அனைத்தையும் அம்மியில் வைத்து அரைத்து மூன்று வேளை வெந்நீரில் கலந்து கொடுக்க நீர்கழிச்சல் நோய் தீரும்.

**(ம.காளியப்பன், வ.புதுப்பட்டி, திருவில்லிபுத்தூர், விருதுநகர்)**

O இளங்கன்றுகள் அஜுரணக் கோளாறு காரணமாகப் பாதிக்கப்படும் சமயம் வயிற்றை சுத்தப்படுத்த 100 மி.லி. விளக்கெண்ணைய் உள்ளுக்குள் கொடுக்கப்பட்டு சாணம் கழிக்கப்பட வேண்டும். பின்பு 25 கிராம் கல் உப்பு, 25கிராம் சுக்கு தூள், 25 கிராம் மிளகுத்தூள், 25 கிராம் நிலவேம்புதூள் மூன்றும் கலந்து இரண்டு பங்காக பிரித்து காலை, மாலை நீருடன் கலந்து உள்ளே புகட்ட வேண்டும். ஒரு வேளைக்கு 50 கிராம் வீதம் 2 வேளை கொடுக்க வேண்டும்.

**(வெங்கடராமையா, கணகபுரா, கர்நாடகா)**

O ஆவாரந்தழை ½ கிலோ எடுத்து 25 கிராம் சீரகத்துடன் சேர்த்து உரலிலிட்டு மசிய ஆட்டி அதனுடன் ணீ லிட்டர் மோர் கலந்து உள்ளுக்கு ஊற்ற வேண்டும். (அல்லது)

O மாம்பட்டையின் உள்பகுதி ½ கிலோ எடுத்து அத்துடன் மேல் தோல் நீக்கிய வாழைப்பூ 25கிராம், சீரகத்துடன் உரலிலிட்டு ஆட்டி உள்ளுக்குள் ஊற்ற வேண்டும்.

(அல்லது)

O அகத்திக்கீரை ½ கிலோ, சின்ன வெங்காயம் 1 கிலோ இரண்டையும் வேகவைத்து ஆட்டி, நீருடன் கலந்து உள்ளுக்குள் ஊற்றினால் கழிச்சல் குணமாகும். அல்லது நாவல்பட்டையை

உரலிலிட்டு இடித்து ½ லிட்டர் அளவு மோர் அல்லது நீரில் கரைத்து உள்ளுக்கு ஊற்றினாலும் கழிச்சல் கட்டுப்படும்.

**(ந.கோவிந்தன், செல்லியம்பாளையம், காரிப்பட்டி, சேலம்)**

O ½ கிலோ கொய்யா இலையை வேக வைத்து கிடைக்கும் கசாயத்தை இரு வேளைகள் கொடுக்க வேண்டும்.

**(பியாசாக் சுக்கரன்தாபோஜ், தாய்லாந்து)**

O கல்லத்திக்காய், ½ படி, சீரகம் 50 கிராம் மற்றும் வெங்காயம்100 கிராம், வெந்தயம் 50 கிராம் இடித்து நீராகாரம் 1 படி சேர்த்து காலை மாலை இரண்டு வேளை கொடுத்தால் 2 நாளில் குணமாகிவிடும்.

**(பெரிய அய்யூாவு, சல்லிக்கோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O ஆவாரங்கொழுந்து 1கைபிடி அளவு எடுத்து அரைத்துக் கொண்டு அதனுடன் சீரகம் 25 கிராம், வெங்காயம் 150 கிராம் ஆகிய இரண்டையும் சேர்த்து அரைத்து ¼ லிட்டர் மோரில் கலந்து 1 அல்லது 2 தடவையாக குடிக்க கொடுக்க வேண்டும் அல்லது வாழைப்பூ 1, வெங்காயம் 150 கிராம், சீரகம் 50 கிராம் இடித்து உருண்டையாக உருட்டிக் கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம்,எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O சின்னித் தழை 100 கிராம், பழம்பாசித் தழை 100 கிராம், சீரகம் 25 கிராம், வாழைப்பூ ஆகியவற்றை அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(சுப்பையா, மோதுபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்)**



O பீநாரிசங்கு இலை, கருங்கொன்றை இலை, ஆனை நெருஞ்சி இலை சம அளவு அரைத்து 2 எலுமிச்சைபழ அளவு உருண்டை செய்து கொள்ள வேண்டும். இதை நீராகாரத்தண்ணீர் 1/2 படியுடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். காலை, மாலை, வேளைகளில் கொடுக்க 2 நாட்களில் சரியாகும்.

**(தஞ்சிகான், தாழங்குணம், செஞ்சி தாலுகா, விழுப்புரம்)**

O துத்தி இலை 1படி, அத்திக்காய் 5, வாழைப்பூ 1, சீரகம் 25 கிராம் இவற்றை இடித்து எலுமிச்சம் பழ அளவு உருண்டைகளாக்கி 2 உருண்டை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(வினைதீர்த்தான், குளத்துார், வேடசந்துார், திண்டுக்கல்)**

O கருங்காலித் தழை, கொய்யா இலை, பழம்பாசி இலை இவை மூன்றையும் 1கைபிடி அளவு வீதம் எடுத்துக்கொண்டு சுக்கு 10 கிராம், மிளகாய் 5 கிராம், சீரகம் 25 கிராம், சுடுநீரில் அரைத்து உள்ளேகொடுக்க வேண்டும்.

**தவிர்க்க வேண்டியவை :** பனியில் மாட்டைக் கட்டகூடாது. மழையில் நனையவிடக்கூடாது.

**(பொன்னம்மாள்,மம்மானியுர், திண்டுக்கல்)**

O மஞ்சள் 50 கிராம், ஒவ்வாதழை (சிறுவாகா) 200 கிராம், நாவல் கொட்டை 200 கிராம் சேர்த்து இடித்து 100 மி.லி.தயிரில் கொடுக்க வேண்டும்.

**(வெற்றிவேல்,சிறுகளப்பூர்,திருச்சி)**

O பற்படாகம் ஒரு கைப்பிடி, சீரகம் 10 கிராம், மஞ்சள் சிறுதுண்டு இவற்றை அரைத்து இரண்டு வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(இராமசாமி, மம்மானியுர், திண்டுக்கல்)**

O அவரை இலை ஒரு கைப்பிடி, சின்ன வெங்காயம் 10 கிராம், விடத்தழை ஒரு கைப்பிடி ஆகிய அனைத்தும் அரைத்து அரிசி கழுவிய நீரில் கலந்து 2 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(முத்துராஜ், குருந்தமபட்டி, வேடசந்தூர், திண்டுக்கல்)**

## துர்நாற்றத்துடன் கழிந்தால்

O துர்நாற்றத்துடன் எற்படும் கழிச்சல் பொதுவாக குடற்புழுக்களால் எற்படும், துர்நாற்றம் தொடர்ந்து இருந்தால் அடுப்புக்கரி 150 கிராம், சுண்ணாம்பு 50 கிராம், வெல்லம் 50 கிராம் கலந்து இடித்து பொடிசெய்து உள்ளுக்குள் கொடுக்கலாம். அடுத்து குடற்புழு நீக்கி மருந்து கொடுக்கவேண்டும்.

**( அப்துல்ரசாக், மதுரை)**

O கருவேலம்பட்டை 200 கிராம், இலவங்கப்பட்டை 10 கிராம், இவைகளை 1 லிட்டர் நீரில் சிறிய துண்டுகளாக நறுக்கி நன்றாகக் காய்ச்சி கசாயம் வடித்து 2 வேளை தரவேண்டும்.

**(வெளியப்பான், காமயகவுண்டன் பட்டி, தேனி)**



O அல்லிக்காய், நாவல் மரப்பட்டை, உதியமரப்பட்டை இவைகளை அரைத்து ஒன்று (அல்லது) இரண்டு வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(ஜெயராமன், செய்யாங்குளம், விழுப்புரம்)**

**நீராகக் கழிந்தால்**

O பழம்பாசித் தழை 250 கிராம், மாதுளம் பிஞ்சு 5, கொய்யாபிஞ்சு 5, சீரகம் 50 கிராம், வெந்தயம் 50 கிராம், ஆகியவற்றை அரைத்து எருமை மோரில் கலந்து ஒரே வேளையில் காலையில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(சுபானந்தன் , குடிப்பட்டி, மதுரை)**

## இரத்தக் கழிச்சல்

O கருவேலம்பட்டையை 100 கிராம் இடித்துக் கருப்பட்டி ½ கிலோ கலந்து கொடுக்கவேண்டும்.

O மாதுளை இலை, தென்னங்குரும்பை, சப்போட்டா பிஞ்சு இவைகளில் எதவாது ஒன்றை 100 கிராம் அளவு எடுத்து அரைத்துக் கொடுக்கலாம்.

O அரசம்பட்டைகையகல அளவு, வெந்தயம் 50 கிராம் சேர்த்து அரைத்து உள்ளுக்குத் தரலாம்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O கன்றுகளின் சீதபேதிக்குச் சுக்கு 50 கிராம், கொய்யா கொழுந்து 150 கிராம் கலந்து இடித்து கொடுக்க வேண்டும்.

**(அசோக் குண்டே, குளோரியாப்பண்ணை, பாண்டிச்சேரி)**

O மாட்டுச் சாணத்தில் இரத்தம் கலந்து வந்தால் வாழைப்பூ 1, துத்தித் தழை 250 கிராம், பழம்பாசித் தழை 250 கிராம், தவிடு 200 கிராம் மேற்கண்ட நான்கையும் அரைத்து உருண்டையாகக் கலந்து ஊட்ட வேண்டும். இதனை இருவேளை கொடுக்க வேண்டும்

**(ஔவையன், ரெட்டியாபட்டி, நத்தம், திண்டுக்கல்)**

O சாணத்துடன் இரத்தப்போக்கு இருந்தால் அல்லது கழிச்சலுக்கு, குண்டுமணி இலைகளை ஒரு கைப்பிடி அளவு அரைத்துக் காடியில் (புளிச்சநீரில்) கரைத்து கொட்டத்தில் மூன்று வேளை கொடுக்க உடனே நிவர்த்தியாகும்.

**(எம். சடையன், அய்யம்பாளையம், திண்டுக்கல்)**

O சாணியில் ரத்தம் கலந்து வரும். கோமியத்திலும் இரத்தம் காணப்படும். இதற்கு வாழைச்சாறு (¼ படி), கிளுவைப்பட்டை (கையகலம்), அத்திப்பட்டை (கையகலம்), கடுக்காய் 5 எண்ணம் இவைகளை அரைத்து கொதித்த நீராகாரத்தில் பிழிந்து ஒரு கொட்டத்தில் மாட்டிற்கு உள்ளுக்குள் ஊற்ற வேண்டும். ஒரு வேளையில் குணமாகவில்லையெனில் மறுமுறை ஊற்றலாம்.

**(நாராயணன், அன்னமங்கலம், பெரம்பலூர்)**



O காரைச்செடி வேரை பட்டை உரித்து நன்கு அரைத்து சீரகம் 5 கிராம், சின்ன வெந்தயம் ¼ கிலோ இரண்டையும் தனித்தனியே அரைத்து மாக்கொழுந்து, நாவல் கொழுந்து, மற்றும் இலுப்பை மரக் கொழுந்து மூன்றையும் அரைத்து அனைத்தையும் ஒன்றாகக் கலந்து ஒரே தடவையில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(தங்கச்சாமி தேவர், ஆவாரங்குளம், விருதுநகர்)**

O வெங்காயம் 100 கிராம், சீரகம் 10 கிராம், தலைச்சுருளி வேர் 20 கிராம் அரைத்து ஒரு நாளைக்கு 2 வேளை கொடுக்க வேண்டும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்கலாம். இதற்கு பின்னர் வெடிக்காத தென்னம்பாளை பூவை இடித்து மாட்டிற்கு கொடுக்கலாம்.

**(கருப்பையா, கீழத்தானியம். மானாமதுரை, சிவகங்கை)**

O ஆவாரம் வேர் 3 கிலோ, புதுப்பானையில் இட்டு 3 குவளை தண்ணீரில் நன்கு வேகவைத்து (ஒரு குவளை தண்ணீராக வற்றும் வரை) 3 வேளை கொடுக்க வேண்டும்.

**(வெற்றிவேல், சிறுகளப்பூர், திருச்சி)**

O அத்திப்பிஞ்சு அல்லது அத்தி மரப்பட்டை இடித்து புளித்த நீர் அல்லது மோருடன் கலந்து இரவு வைத்திருந்து மறுநாள் காலை மாலை 1 லிட்டர் அளவு 2 வேளை உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

**( வெளியப்பன், காமயகவுண்டன்பட்டி, தேனி)**

O வாழைப் பூ வின் கடினமான இதழ்களை அகற்றிவிட்டு அதனுடன் ஆவாரங்கொழுந்து ஒரு கைப்பிடி எடுத்து சேர்த்து இடித்து மோரில் கலந்து குடிக்கக் கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O காரை இலை 200 கிராம், கரு வரகு 200 கிராம் எடுத்து உரலில் இட்டு நன்றாக இடித்துக் கொள்ள வேண்டும். பின் இத்துடன் பசு மோர் 1 லிட்டர் கலந்து 1 வேளை மட்டும் ஊற்றி விட வேண்டும். மருந்து கொடுத்த 3 மணி நேரத்திற்கு மேல் அரை தீவனம் வைக்கோல் மட்டும் போட வேண்டும். சுடு தண்ணீர் கொடுக்கக் கூடாது. கழிச்சல் நிற்கவில்லை என்றால் மாலை நேரமும் 1 வேளை மட்டும் ஊற்றிவிடவேண்டும்.

O வெந்தயம், சீரகம், கசகசா, கடுக்காய் பூ ஆகிய ஒவ்வொன்றிலும் 50 கிராம் எடுத்து பொடி செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இளம் தென்னம்பாளை ஒன்று கீழாநெல்லி, வீலி தழை, பழம்பாசி இலை, விடத்தழை கொழுந்து, கருங்கட்டுக்கொடி, ஆவாரங்கொழுந்து மாம்பட்டை, கிளுவைப் பட்டை ஆகிய ஒவ்வொன்றிலும் கைப்பிடியளவு எடுத்து இடித்து அரைத்து பசும்பால் அரை லிட்டர் அல்லது தயிர் அரை லிட்டர் அல்லது இளநீர் அரை லிட்டரில் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளை கொடுக்க வேண்டும்.

**(குமார், இ. கோவில்பட்டி, திண்டுக்கல்)**

O இரத்தக் கழிச்சலுக்கு வெள்ளை குண்டுமணி தழை 100 கிராம் எடுத்து அத்துடன் வெந்தயம் 20 கிராம் சேர்த்து அரைத்து நீராகத் தண்ணீருடன் உள்ளே புகட்ட வேண்டும்.



O கழிச்சலுடன் ஊழை கலந்து வந்தால், பழம்பாசி 200 கிராம், வெள்ளை கட்டுக்கொடி 100 கிராம் ஆகியவற்றை அரைத்து கால்படி நீருடன் கலந்து காலை, மாலை 2 வேளை வீதம் இரண்டு நாட்கள் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபரம், மதுரை)**

## கன்று கழிச்சல்

### அறிகுறிகள்

கழிச்சல் மற்றும் காய்ச்சல் இருக்கும் கண்ணில் குழிவிழும் சோர்வாக படுத்திருக்கும் பால்குடிக்காது மற்றும் இரை எடுக்காது.

### காரணம்

அதிகப்பால் குடிப்பதாலும், மண்ணை திண்பதாலும், குடற்புழு மிகுதியாலும், அசுத்தமான நீரை குடிப்பதாலும் கழிச்சல் உண்டாகின்றது.

### வைத்திய முறை

O வசம்பு இலை 2, சுக்கு 50 கிராம், கொய்யா கொழுந்து 200 கிராம் சேர்த்து அரைத்து கொடுக்க வேண்டும்.

O கன்று சுழிச்சலுக்கு ஆர்செனிக் ஆல்ப் 200 சி ( Arsenic Alb 200c) கனஎன்ற மருந்தை 2 மணி நேர இடைவெளியில் 5 தடவை கொடுத்தால் நீராகக்கழியும் கன்றுக்கு நல்லது. மெர்குரியஸ் கார்

200 சி ( Mercuriuscor 200c)என்ற மருந்தை ஒரு நாளைக்கு 4 தடவையாக 2 நாட்கள் கொடுத்தால் இரத்தம் கலந்து கலந்து வரும் கழிச்சல் நிற்கும்.

**(ரோஸ்பாய் மலீக், ரொகா, மகாராஷ்டிரா)**

## கடைபிடிக்க வேண்டியன

தாய்ப்பால் இல்லாவிடில், பிற மாட்டுப் பாலை காய்ச்சி சூடாகவே கொடுக்க வேண்டும்.

## ஆடு கழிச்சல்

மழைக்காலத்தில் – கார்த்திகை, மார்கழி மாதங்களில் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு கழிச்சல் எற்படும். இதனால் ஆடுகளில் சில இறக்க நேரிடும். இதற்கு ‘எண்ட்ரோடாக்சிமியா’ என்று கூறுவர்.

O பற்படாகம் புல் 100 கிராம், சீரகம் 50 கிராம் அரைத்து நீருடன் கலந்து இருவேளை கொடுக்க வேண்டும்.

**(பி. இராமசாமி, மம்மானியூர், திண்டுக்கல்)**

O தொட்டடாற்சிணுங்கி இலை, தென்னங்குரும்பை, விடத்தழை, சீரகம் இவற்றை அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து 2 வேளை வீதம் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(அழகு, அருக்கம்பட்டி, திண்டுக்கல்)**



O ஆடு கழிச்சலுக்கு செருப்படி சாரணை, பழம்பாசித்தழை, முருங்கைத்தழை, கொய்யாக் கொழுந்து, கத்திரி தழை, கருமபூலாந்தழை, மாதுளம் பிஞ்சு, அத்தி, வாழைப்பூ ஒரு பூவில் பாதியளவு, சீரகம் இவைகளை இடித்து காலையில் மோரில் அல்லது புளிச்சத்தண்ணீரில் 50 மி.லி. கலந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு 3 வேளை கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம், சிறுமாம்பட்டி, கடவூர், தரகம்பட்டி, கரூர்)**

O கொய்யா கொழுந்து, வீலி இலை ஆகியவற்றில் ஒவ்வொன்றும் 20 கிராம் வீதம் எடுத்து மாதுளம் பழத்தோல், சீரகம் ஆகியவை 10 கிராம் வீதம் கலந்து நன்றாக அரைத்து 500 மி.லி. நீருடன் கலந்து காலை, மாலை புகட்ட வேண்டும்.

**(சுபானந்தன், குடிப்பட்டி, மதுரை)**

**குறிப்பு** : பொதுவாக மாடுகளுக்கு கழிச்சலுக்கு கொடுக்கப்படும் வைத்தியமுறையை ஆடுகளுக்கும் பின்பற்றலாம். மருந்தின் அளவில் பாதியளவு ஆடுகளுக்கு கொடுக்க வேண்டும்.

# 5. குடற்புழுக்கள்

## அறிகுறிகள்

மாடு மெலிந்து இளைத்து காண்பபடும்; துர்நாற்றத்துடன் கூடிய வயிற்றோட்டம், விட்டு விட்டு வயிற்றோட்டம் காணப்படும். வயிறு உப்பி இருக்கும்; இரை எடுக்காது; உடம்பிலுள்ள ரோமம் பெரியதாக இருக்கும்: சாணியில் சில சமயம் சிறுபுழுக்கள் காணப்படும்.

## காரணங்கள்

கால்நடைகளுக்கு நாக்குப்பூச்சி, நாடாப்புழு, கொக்கிப்புழு, உருண்டைப் புழு போன்ற குடற்புழுக்கள் தண்ணீர், தீவனம், மேய்ச்சல் தரை மூலமாகவும், பூச்சிகள், நத்தைகள் போன்றவைகளாலும் பரவுகின்றன. மேய்ச்சல் தரையில் பூச்சிகளின் இளம் முட்டைகள் இருந்து அவற்றை கால்நடைகள் உணவாக உட்கொள்ளும்பொழுது உள்ளே சென்று குடற்புழுக்கள் உருவாகின்றன.

## வைத்திய முறைகள்

O வேலிப்பருத்தி இலை 50 கிராம், சிறியாநங்கை 50 கிராம் ஆகியவற்றை அரைத்து 100மி.லி வேப்பெண்ணையுடன் கலந்து காலை மாலை இரண்டு வேளை கொடுக்க வேண்டும்.

**( பாலன்,கடவூர், கரூர்)**

O வசம்பு , வெள்ளைபூண்டு, ஆடுதிண்ணாப்பாலை, குப்பைமேனி, பேய்குமட்டி இலை ஆகியவற்றில் ஒவ்வொன்றும் 25 கிராம் வீதம் எடுத்து அரைத்து சுடு தண்ணீருடன் கலந்து ஒரே வேளையில் உள்ளே கொடுக்கவேண்டும்.

**(ஜெயகாந்தன், திருச்சிற்றம்பலம், தஞ்சாவூர்)**



O சதாவரி வேரை (தண்ணீர் விட்டான் கிழங்கு) 15 கிராம் அளவு எடுத்து அரைத்து அரை லிட்டர் நீரில் கலந்து அதிகாலையில் கன்று களுக்குக் கொடுக்க குடற்புழுக்கள் நீங்கும்.

**( கிரீத் பட்டேல், அகமதாபாத்)**

O சூபாபுல் விதைகளை 50 –100 எண்ணிக்கையளவு எடுத்து நீர்விட்டு உரலில் ஆட்டி 200 மி.லி. அளவு நீர் சேர்த்து வெள்ளாடுகளுக்குக் கொடுக்க சாணத்துடன் குடற்புழுக்கள் இறந்தும், உயிருடனும் வெளியேறிவிடும். இம்முறை பிலிப்பைன்ஸ் நாட்டில் பழக்கத்தில் உள்ளது.

**(வளரும் நாடுகளின் வானொலி வலைப்பின்னல் இதழ் –தொகுப்பு)**

O கொக்கிப் புழுவிற்கு 8–10 கொட்டைப்பாக்குகளை நீரில் ஊற வைத்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். நாடாப் புழுவிற்கு மாதுளை மரப்பட்டையும், வேரும் 100 கிராம் அளவிற்கு இடித்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(அசோக்குண்டே, பிள்ளையார்குப்பம்,பாண்டிச்சேரி)**

O வேப்ப இலை, பூ பட்டை மற்றும் பப்பாளி விதை ஆகியவற்றில் 100 கிராம் வீதம் எடுத்து அரைத்து இளம்சூடான வெந்நீரில் கலந்து காலை, மாலை என மூன்று வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**( ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O பூசணி விதை 100 கிராம் அரைத்து 5 நாட்களுக்கு கொடுத்து வர, தட்டைப்புழுக்கள் நீங்கிவிடும்.

**(கோமதி நாயகம், புளியங்குடி, திருநெல்வேலி)**

O வேப்பங்கொழுந்து 50 கிராம் அரைத்து 50 மி.லி. விளக்கெண்ணெய் கலந்து கொடுக்கப்படுவதால் ஆடுகளின் வாய் மற்றும் வயிற்றுப் புண்களும் குணமடைகின்றன. குடற்புழுக்களும் அழிக்கப்படுகின்றன.

**(பி. அபிமன்னன்,செக்கானூரணி. மதுரை)**

O ஆடுகளுக்கு எலுமிச்சைப்பழம் 6, பழையபுளி ஒர கைப்பிடி, ஆமணக்கு இலை 5 ஆகிய அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து உள்ளே கொடுத்தால் புழுக்கள் சாணத்துடன் வெளிவந்து விடும்.

**( ஆர். நவநீதகிருஷ்ணன், உத்திரமேரூர்,செஞ்கை)**

O கடலைமாவு 200 கிராம் இளம் சூடான வெந்நீருடன் கலந்து தினமும் ஒரு வேளை வீதம் 5 நாட்கள் வரை தொடர்ந்து கொடுக்கவேண்டும். அல்லது வேப்ப எண்ணெய் 250 மி.லி. மூன்று நாள் தொடர்ந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O மஞ்சள் கலரில் பூ பூக்கும் சரக்கொன்னை மரத்தின் இலையை சுமார் 200 கிராம் அளவில் எடுத்து அரைத்து உள்ளே கொடுக்கவேண்டும்.

**(சுந்தரசுவாமிகள், கிணத்துக்கடவு, கோவை)**



O செண்டுமல்லி எனப்படும் துளுக்கசாமந்தி பூவை ஒன்று எடுத்து அரைத்து கால் லிட்டர் மோரில் கலந்து 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**(மாதம்மா, தரிக்கரை, கர்நாடகா)**

O கொட்டைப்பாக்கு, நில வேம்பு, மலைவேம்பு, இலை, குப்பைமேனி, ஆடுதிண்ணாபாளை, சிறு குறிஞ்சான் ஆகியவற்றில் வகைக்கு 10 கிராம் வீதம் அரைத்து இளம் சூடான வெந்நீரில் கலந்து இரவு ஒருவேளை வீதம் 3 நாட்களுக்கு தொடாந்து உள்ளே கொடுக்கவேண்டும்.

**(பாண்டிச்சேரி கால்நடை வைத்திய கருத்தரங்கு –25.03.1999)**

O பீநாரிசங்கு ஒரு கைபிடி அளவு, மலை வேம்பு காய் 25 கிராம் இவற்றை அரைத்து 500 மி.லி. நீருடன் கலங்து உள்ளே கொடுக்கவேண்டும்.

**(கு.செல்வராஜ், சின்னவண்டாரி, மதுரை)**

O பெருந்தும்பை இலையை 100 கிராம் அரைத்து நல்லெண்ணெய் 200 மி.லி.யுடன் கலந்து புகட்ட வேண்டும்.

**(வெளியப்பன், காமயகவுண்டன் பட்டி, தேனி)**

O வேப்பெண்ணெய் 150 மி.லி. மஞ்சள் பொடி 20 கிராம், பொடிசெய்த கருஞ்சீரகம் 20 கிராம், இளநீர் அரை லிட்டர் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து அதிகாலையில் உள்ளே புகட்டவேண்டும்.

**(பெரிய வேலுச்சாமி, பழனிக்கவுண்டன்வலசு, தாராபுரம், ஈரோடு)**

O தலைச்சுருளி வேர் (ஈஸ்வர மூலிகை) 2 அங்குலம் அளவு எடுத்து அரைத்தது 100 மிலி நீரில்கலந்து புகட்டவேண்டும். (அல்லது) வரிக்குமட்டி இலை, பிரண்டை, தும்பை, துளசி, வெள்ளருகு, முசுமுசுக்கை, தலைச்சுருளி இவை ஒவ்வொன்றிலும் ஒரு கைப்பிடி எடுத்துக் கொண்டு உப்பு 50 கிராம் ஆகியவற்றை மொத்தமாக அரைத்து காலை, மாலை மற்றும் மறுநாள் காலை என 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்கவேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி.கிருஷ்ணாபுரம்,மதுரை)**

O ஆடு திண்ணாபாளை இலை 2 கைப்பிடி அளவு அரைத்து சாறு எடுத்து விளக்கெண்ணெய் 100 மி.லி.யுடன் கலந்து ஒரு வேளை கொடுக்க வேண்டும்.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O ஊழான் தண்டு அரை அடி நீளம் வெட்டி பின் அதை ஊதவேண்டும். அதிலிருந்து வரும் சாறை 100 மி.லி. எடுத்து, மஞ்சள்துாள் 20 கிராம் சேர்த்து கலந்து கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன்,பேடரல்லி, தருமபுரி)**

O விரலி மஞ்சள் அரை துண்டு, வெள்ளளருகு 1 செடி, மிளகு 20 எண்ணம் இவைகளை அரைத்து புகட்ட வேண்டும்.

**( பழனிவேலு,அரசங்குடி, திருச்சி)**



O வரிக்குமட்டி சாறு, சோற்றுக் கற்றாழைச் சோறு, ஆடுதிண்ணாப்பாளை இலைச்சாறு, வேப்பெண்ணெய், வகைக்கு 25 மி.லி. வீதம் எடுத்து 50 கிராம் கருப்பட்டி சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி,விருதுநகர்)**

O கொல்லங்கோவை கிழங்கு 2 பங்கு, தலைச்சுருளி வேர் 2 பங்கு, சிறியாநங்கை இலை 1 பங்கு, இந்த மூன்றையும் நிழலில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு 60 கிராம் வீதம் தினமும் 3 வேளை வீதம் 3 நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்கவேண்டும்.

**(சாமிக்காளை, சல்லிகோடாங்கிபட்டி,பாலமேடு, மதுரை)**

O புங்க விதைகளை 300 கிராம் எடுத்து அரைத்து 2 லிட்டர் நீரில் கலந்து மூன்றில் ஒரு பங்காக வற்றும் வரை காய்ச்ச வேண்டும். இதனை பெரிய மாடுகளுக்கு ஒரு முறை மட்டும் கொடுக்கலாம். சினை பிடித்து கர்ப்பமாக இருக்கும் மாடுகளுக்கு இதனை கொடுக்ககூடாது. இம்முறை தாய்லாந்து நாட்டில் கடைபிடிக்கப்படுகிறது.

**( ஆசியா கண்ட கால்நடை மூலிகை வைத்திய கையேடு – 1994.)**

## ஆடுகளின் குடற்புழுக்களுக்கு

O நிலவாகை, குப்பைமேனி, கொட்டைப்பாக்கு 10 கிராம் வீதம் நன்றாக அரைத்து இளம் சூடான வெந்நீர் 2 லிட்டருடன் கலந்து ஒரு ஆட்டுக்கு 200 மி.லி. வீதம் புகட்ட வேண்டும்.

**(சுபானந்தன், குடிப்பட்டி, மதுரை)**

O ஈசுவர மூலிகை, கொல்லங்கோவை கிழங்கு, சிறு குறிஞ்சான், விஷமல்லி, சிறியாநங்கை இலை அனைத்தும் சம பங்கு எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். சுமார் 1 கிலோ பொடிக்கு 50 கிராம் மிளகு துாளாக்கி சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். இதனை 10 லிட்டர் நீரில் கலந்து 100 மி.லி. வீதம் ஆடுகளுக்கு கொடுத்தால் குடற்புழுக்கள் கழிச்சல், விஷக்கடி, காய்ச்சல், போன்ற வியாதிகள் குணமாகும்.

**(வெள்ளை, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**



# 6. சொக்கிக் கொள்ளுதல்

### அறிகுறிகள்

வாயில் நீர் வடியும்; சோர்வாகக் காணப்படும்; மூச்சுத்திணறல் ஏற்படும்: இரை எடுக்காது.

### காரணங்கள்

சில நேரங்களில் ஆடு, மாடுகள் சோளப்பயிர், கம்பு, ஆமணக்கு மரவள்ளி போன்ற பயிர்களின் பிசினுள்ள இளம் கொழுந்தை தின்பதால் மாடுகளுக்கு வயிறு உப்பும்; சொக்கிக் கொள்ளும்; மற்றும் மயக்கம் ஏற்படும். இந்த சமயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆடு, மாடுகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

## வைத்திய முறைகள்

o எருக்கஞ்செடியின் இளம் இலை, பூக்களுடன் கூடிய நுனிக் கொத்து எடுத்து மெதுவாக வாயினுல் உள்ளே விட்டு தொண்டை வரை செல்லும் படியாக இரண்டு மூன்று தடவை செய்யவேண்டும்.

**(அய்யாத்துரைக்கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

o இரண்டு அல்லது மூன்று இளம் இலைகள, பூக்களுடன் கூடிய எருக்கஞ்செடியின் நுனிக்கொத்து அல்லது பாலாதழை அரை கிலோ எடுத்து இடித்து உருண்டையாகப் பிடித்து உள்ளே புகட்டிவிடவேண்டும். அல்லது தேங்காய் எண்ணெய் 250 மி.லி. பழம்புளி 200 கிராம், சர்க்கரை 250 கிராம் அளவ எடுத்து ஏதேனும் ஒன்றை மட்டுமோ அல்லது மொத்தமாகவோ 1 லிட்டர் நீருடன் கரைத்து உடனடியாக உள்ளுக்குள் ஊற்றி விட வேண்டும்.

**(கோவிந்தன், செல்லியம்பாளையம், சேலம்)**

O மழைக்காலங்களில் ஆலங்கட்டி எனப்படும் பனிக்கட்டி மழை விழும்போது, அதை எடுத்து ஒரு பாட்டிலில் போட்டு பாதுகாப்பாக வைக்க வேண்டும். சொக்கும் கால்நடைகளுக்கு அந்த நேரத்தில் இந்த பாட்டிலில் பிடித்து பாதுகாப்பாக வைத்திருக்கிற பணி நீரை கால்நடைகளுக்கு உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் சொக்குதல் குணமாகிவிடும்.

**(ஜானகி ராமன், செம்மணந்தல், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம்)**



# 7. செருமல், ஜலதோஷம்

## அறிகுறிகள்

மூச்சுவிடமுடியாமல் சிரமப்படும்; மூக்குப் பகுதி தரையோடும் மரத்திலும் தேய்க்கும். சளியுடன் கூடிய காய்ச்சல் இருக்கும் ; தீவனம் சரியாக எடுக்காமல் இருக்கும் ; உடலின் வெப்பநிலை அதிகமாக இருக்கும் ; மூக்கிலிருந்தும், கண்களில் இருந்தும் சளி தண்ணீர் போல் வந்துகொண்டிருக்கும்.

## காரணங்கள்

மூக்குத் தண்டு உலர்ந்துவிடுவதாலும், புரையேறுவதாலும், சுவாச மண்டலத்தில் நோய் உண்டாவதாலும், கால்நடைகள் ஒரே இடத்தில் அதிகளவில் அடைத்து வைக்கப்படுவதாலும் இந்த நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

## வைத்தியமுறைகள்

O பொன்னாங்கண்ணி கீரை 100 கிராம், பெரியாநங்கை இலை 100 கிராம் இரண்டையும் அரைத்து ஒரு நாளைக்கு இரண்டு தடவை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். ( அல்லது)

கண்டங்கத்திரி காய் அரைத்து ஒர் இரவு வெள்ளாட்டு கோமியத்தில் ஊற வைத்து பிழிந்து இரண்டு சொட்டுக்கள் வீதம் மூக்கில் விட வேண்டும். சிறுகாமுட்டி வேர் 25 கிராம் அளவிற்கு அரைத்து நீருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். ( அல்லது)

கல்லத்திக்காய் 250 கிராம், சீரகம் 100 கிராம், வெங்காயம் 200 கிராம் மூன்றையும் இடித்து 3 நாட்களுக்கு காலை வேளையில் கவளமாகக் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O வெள்ளை எருக்கம் பூ மொட்டு 50 கிராம், விராலி, தழை 50 கிராம், வீலி தழை 100 கிராம், மூங்கில் இலை 100 கிராம், மிளகாய் வற்றல் 100 கிராம், வெங்காயம் 250 கிராம், வேப்பெண்ணெய் 200 மி.லி. ஆகியவற்றுடன் பேறுகால சாமான்கள் மொத்தத்தில் 250 கிராம் சேர்த்து அரைத்து இரண்டு பங்காக பிரித்து கவளமாக உருட்டி காலை மாலை உள்ளே கொடுக்க வேண்டும். இதனை கொடுக்கும் முன்னர் மாட்டை குளிப்பாட்டி விட வேண்டும்.

**(நாராயணசாமி, சீப்பாலக்கோட்டை, தேனி)**

O மூங்கில் இலை அரை கிலோ முதல் 1 கிலோ வரை பறித்து வந்து காலை அல்லது மாலை நேரங்களில் கால்நடைக்கு தீவனமாகக் கொடுக்க வேண்டும். இவ்வாறு 3 முதல் 4 நாட்கள் கொடுத்து வந்தால் மாட்டின் செருமல் கட்டுப்படும். (உடனடியாகப் பறிக்கப்பட்ட பசுமையான மூங்கில் இலைகளையே பயன்படுத்த வேண்டும்)

**(பி.பேயாண்டி, கே.புதுமங்கலம், செக்கனுாரணி, மதுரை)**

O செம்பூலாம்பட்டையுடன், ¼ கிலோ கடுகு சேர்த்து 4 லிட்டர் நீருடன் வேகவைத்து பாதியாக வற்றியதும் வடித்து 2 லிட்டர் கசயாத்தை 3 நாட்களுக்கு உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(குப்பையா கவுண்டா், சித்தான்டபுரம், அஞ்சட்டி, தருமபுரி)**

O வேரில்லா கொத்தானுடைய (புல்லுருவி) கொடியை இடித்து அரை லிட்டர் சாறு எடுத்து வெங்காயம் 4, சீரகம் 25 கிராம் சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் 3 நாட்களுக்குத் தொடர்ந்து கொடுக்க வேண்டும். (புல்லுருவி கொடியானது பசுமை



நிறத்தில் வேம்பு, நுனா போன்ற மரங்களில் படர்ந்து இருக்கும்) அல்லது

O மூங்கில் இலை ஒரு கைப்பிடியளவு (100 கிராம்) அதனுடன் பச்சை காடை இறகு 3 சேர்த்து தீவனத்துடன் கொடுக்க வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O மிளகரணை வேர் 10 கிராம், ஆடாதோடை இலை 100 கிராம், தூதுவளை 100 கிராம், கண்டங் கத்திரி இலை 100 கிராம், துளசி இலை 200 கிராம் ஆகியவற்றை நிழலில் உலர்த்தி, சித்தரத்தை 50 கிராம், மிளகு 50 கிராம், திப்பிலி 50 கிராம் ஆகியவற்றை இடித்து சூரணமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பனை மரப்பட்டையில் இளம் பச்சையாக 100 கிராம் எடுத்து 2 லிட்டர் நீருடன் கலந்து காய்ச்சி 200 மி.லி.யாக வற்றியதும் மேற்கண்ட சூரணம் 15 கிராம் கலந்து 3 வேளை புகட்ட சரியாகும்.

**(வெளியப்பன், காமயகவுண்டன்பட்டி, தேனி)**

O ஆணைநெருஞ்சி இலை 100 கிராம், சீரகம் 10 கிராம், வெங்காயம் 200 கிராம் ஆகியவற்றை இடித்து பாலுடன் அரைத்து காலை மாலை மற்றும் மறுநாள் காலை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(மு. தங்கச்சாமிதேவர், ஆவாரங்குளம், காரியாபட்டி, விருதுநகர்)**

O மிளகு 20 கிராம் எடுத்து பசும்பாலில் அரைத்து ஒரு வேளை வீதம் 3 நாட்களுக்கு தொடர்ந்து உள்ளே கொடுக்க வேண்டும்.(அல்லது)

பிஞ்சு நார்த்தங்காய் 4 எண்ணம் எடுத்து ஒவ்வொன்றையும் 4 துண்டுகளாக்கி ஒரே வேளையில் புகட்ட வேண்டும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**

O மூக்கரட்டை சாரணை சமூலம் 100 கிராம் விரலி மஞ்சள் 2 அங்குலம், அம்மான் பச்சரிசி சமூலம் 100 கிராம் மணத்தக்காளி இலை 100 கிராம் ஆகியவற்றை மொத்தமாக இடித்து 250 கிராம் கருப்பட்டி சேர்த்து பிசைந்து காலை மற்றும் மாலை 2 வேளை புகட்ட வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O கல்பனை 10 கிராம், விராலிதழை 10 கிராம், மாவிலங்கப்பட்டை 20 கிராம், வில்வ இலை 20 கிராம் மற்றும் கடைச்சரக்கு (பேறுகாலச்சாமான்கள் வகைக்கு சுமார் 5–10 கிராம் வரை) எடுத்து இடித்து இஞ்சி 100 கிராம் சேர்த்து அரைத்து ஒரு வேளை மட்டும் உள்ளுக்குள் கொடுக்கவேண்டும்.

**(மாரியப்பன், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

O சுக்கு, மிளகு, ஓமம், மட்டி பெருங்காயம், பூண்டு ஆகிய ஒவ்வொன்றும் வகைக்கு 50 கிராம் வீதம், சித்தரத்தை 10 கிராம், முடக்கத்தான் இலை கைப்பிடியளவு ஆகியவற்றை இடித்து 50 மி.லி. வேப்பெண்ணெயில் பிசைந்து உருட்டி ஒரே தடவையில் கொடுக்க வேண்டும். குடிப்பதற்கு கொதித்து ஆறிய நீரை கொடுக்க வேண்டும்.

**(க.குமார், இ.கோவில்பட்டி, நிலக்கோட்டை, திண்டுக்கல்)**



O கருப்பு கடுகை பொடித்து, சிறிதளவு நீருடன் கலந்து, மைபோலாக்கி இந்த பசையை மேல்பூச்சாக மார்பு பாகத்தின் இரு பக்கங்களிலும் தடவி விட வேண்டும். இதனை 3–4 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும் ( அல்லது)

O புதிதாக பறித்த ஆடாதோடை இலை, முருங்கை இலை, துளசி இலை ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம் எடுத்து, விரலி மஞ்சள் கைப்பிடியளவு துண்டுகள் எடுத்து சிறு துண்டுகளாக வெட்டி அனைத்தையும் ஒன்றாக கலந்து நூல்துணியில் பொட்டலமாக கட்டிக் கொள்ள வேண்டும்.

இதே போல் மேலும் இரண்டு பொட்டலம் கட்டி வைத்துக் கொண்டு நீராவியால் ஒரு பொட்டலத்தை சூடாக்கி எடுத்து மாட்டின் மார்பு பகுதியில் 20–30 நிமிடங்கள் ஒத்தடம் கொடுக்க வேண்டும். அந்த நேரத்தில் அடுத்த பொட்டலம் நீராவியால் சூடாக்கிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பொட்டலமாக மாற்றி மாற்றி ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் 2 நாட்கள் செய்ய வேண்டும். மற்றும்

மேற்கண்ட இலைகளுடன் 1 லிட்டர் நீர் சேர்த்து காய்ச்சி வடித்து ஆறியதும் காலை மாலை என 5 நாட்கள் உள்ளே தரவேண்டும்.

O அரச மர இலையை நிழலில் உலர்த்தி இடித்து எடுத்த சூரணம் 50 கிராம் எடுத்து சமஅளவு மஞ்சளுடன் கலந்து ஒரு நாளைக்கு இருமுறை வீதம் கொடுத்து வந்தால், நாள்பட்ட செருமல் மற்றும் நுரையீரல் குழாய் வீக்கம் சரியாகும்.

**(அப்துல் ரசாக், மதுரை)**

# 8. மூக்கடைப்பான்

## அறிகுறிகள்

மூக்கிலிருந்து நீர் வடிந்து கொண்டிருக்கும் ; சலமும் இரத்தமும் கலந்து வெளியேறும்; மூக்கில் கட்டி மற்றும் புண்கள் காரணமாக மூச்சுவிட சிரமப்படும் ; மாடுகள் திணறுவதுடன் குறட்டை போன்ற சபதத்தை உண்டு பண்ணும்.

## காரணங்கள்

மூக்கில் புற்று போன்ற கட்டிகள், புண்கள் தோன்றுவதால் ஏற்படுகிறது. இரத்தத்தில் வாழும் ஒருவித பூச்சிகளினால் உண்டாகின்றது. பூச்சிகள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் போது உருவாகிறது. சேறு உள்ள இடங்களில் காணப்படும் நத்தைகள் மூலம் இந்நோய் பரவ வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

## வைத்தியமுறைகள்

O கண்டங்கத்திரி பழம் 10 எண்ணம் எடுத்து ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிளந்து துணியில் பொட்டலமாகக் கட்டி 250 மி.லி. வெள்ளாட்டு கோமியத்தில் போட்டு இரவில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் பொட்டலத்தை எடுத்து மூக்கடைப்பான் உள்ள கால்நடைகளில் ஒவ்வொரு மூக்கிலும் 3 முதல் 4 சொட்டுகளாக காலை, மாலை மற்றும் மறுநாள் காலை என 3 வேளை பிழிந்து விட வேண்டும்.

சிறுகாமுட்டி வேரை ஒரு கைப்பிடி அளவு இடித்து நீரில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**



O ஆடு, மாடுகளுக்கு மூக்கடைப்பானுக்குக் கண்டங்கத்திரிச் சாறு பிழிந்து மூக்கில் 2 அல்லது 3 சொட்டுக்கள் விட வேண்டும்.

**(எம். சடையன், சித்தரேவு, அய்யம்பாளையம், திண்டுக்கல்)**

O பெருந்தும்பை, மஞ்சள்பொடி, அரப்பு (உசிலை இலைப்பொடி) கண்டங்கத்திரிப்பழம் இவையனைத்தும் 25 கிராம் வீதம் எடுத்து அரைத்து விளக்கெண்ணெயுடன் காய்ச்சி மாட்டின் மூக்கில் காலை மாலை 3 சொட்டுகள் வீதம் 3 நாட்கள் தொடர்ந்து விட வேண்டும்.

**(தி. லெட்சுமணன், குருவார்பட்டி, விளாத்திகுளம், தூத்துக்குடி)**

O பாப்பார முள்ளிக்காய் (கண்டங்கத்திரி) விதையை எடுத்து தூளாக்கி 50 மி.லி நல்லெண்ணெயுடன் கலந்து மாட்டின் மூக்கில் மூன்று நாட்கள் பிழிந்து விட புரையேறுதல் மற்றும் பிற காரணங்களினால் ஏற்பட்ட மூக்கடைப்பு நீங்கும்.

**(கோவிந்தன், செல்லியம்பாளையம்,சேலம்)**

O சதகுப்பை விதை 100 கிராம், இஞ்சி 100 கிராம், வால் மிளகு 50 கிராம் மற்றும் திப்பிலி 50 கிராம் நன்றாக இடித்து வெந்நீரில் கலந்து காலை மாலை 2 வளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O இலுப்பை புண்ணாக்கு 50 கிராம் எடுத்து வெள்ளாட்டுப் பால் 50 மி.லி யில் சேர்த்து இரவில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் சுத்தமான பருத்தி துணியில் மேற்படி கலவையை வைத்து பொட்டலமாகக் கட்டி கால்நடையின் தலையை மேலே தூக்கிப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு மூக்கிலும் 10 சொட்டுகள் வீதம் விட வேண்டும். மருந்து ஊற்றிய பின் கால்நடைகளை நிழலில் கட்ட வேண்டும். (அல்லது)

O குப்பைமேனி இலை ஒரு கைப்பிடி அளவு (25 கிராம்) மிளகு 5, சிறுவெங்காயம் 3 ஆகியவற்றை நன்றாக இடித்து சுடுநீரில் கலந்து ஒரு துணியில் கட்டி மூக்கில் 5 சொட்டுகள் வீதம் காலை, மாலை மற்றும் மறுநாள் காலை என 3 வேளைகள் விட வேண்டும்.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு,மதுரை)**

## நாசிப்புற்றுக்கு

O ஒட்டடை, சுண்ணாம்பு, மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் மிளகாய் விதையைத் தூவி மூக்கினுள் வைத்து 3 வேளை நன்றாக அதக்கிவிட வேண்டும். அப்போது புற்று கரைந்து இரத்தம் வரும். அதன் பின்பு 3 வேளை வேப்பெண்ணெய், மஞ்சள், கட்டிக் கற்பூரம் ஆகியவற்றை அரைத்துக் கட்டிவிட புற்று நீங்கிவிடும்.

**(ஜெயராமன், செய்யாங்குளம், விழுப்புரம்)**

O மிளகாய்த் தூள் 50 கிராமுடன், இலுப்பை இலை 50 கிராம், நெய் 100 மி.லி. சேர்த்து அரைத்து ஒரு இரும்புத்துண்டை சூடு செய்து மேற்கண்ட மருந்தை முறித்துக் கொடுக்க வேண்டும். இந்த மருந்தை 3 வேளைக்கு கொடுக்க வேண்டும்.

**(எ.ஆர். நாராயணன், ஆய்மூர், நாகப்பட்டிணம்)**

O கண்டந்திப்பிலி 50 கிராம், சதகுப்பை 50 கிராம் சாம்பிராணி 25 கிராம், ஓமம் 50 கிராம், அடப்பங்கொழுந்து 50 கிராம், எருக்கம் மொக்கு 100 கிராம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து இரண்டு வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(ஜெகந்நாதன், ஆய்மூர், நாகப்பட்டிணம்)**



O வரகு வைக்கோல் அரை கிலோவை 2 லிட்டர் நீரில் நன்றாக காய்ச்சி கசாயம் இறக்கி வைத்துக் கொண்டு 100 கிராம் நூலிலை செடியை (அத்தாள்பொருதி) அரைத்து மேற்கண்ட கசாயம் 100 மி.லி.யுடன் கலந்து காலை மாலை என 3 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**(தஞ்சிகான், தாழங்குளம், செஞ்சி, விழுப்புரம்)**

# 9. தொண்டை அடைப்பான்

## அறிகுறிகள்

கால்நடைகளை இந்நோய் தீடிரென தாக்குகிறது; மிக அதிகக்காய்ச்சல் காணப்படும் ; கண்கள் சிவந்து இருக்கும் மூக்கிலிருந்து கோழை போன்ற திரவம் வடியும் ; தொண்டை, தாடை, கழுத்துப் பகுதிகள் வலியோடு கூடிய சூடான வீக்கம் காணப்படும்.

நாக்கு வீக்கமாகி மூச்சுத்திணறல் இருக்கும் ; முதலில் சாணம் கட்டி பின் கழிச்சல் காணப்படும் ; வாயில் உமிழ் நீருடன் நுரை போன்று வழியும் ; நோய் முற்றிய நிலையில் கால்நடைகள் இறக்க நேரிடலாம்.

## காரணங்கள்

இந்நோய் பாக்டீரியா, கிருமிகளால் உண்டாகிறதென கூறப்படுகிறது. மழை காலத்திற்கு பின் பனிக்காலத்திற்கு முன் இந்நோய் தோன்றி பரவுகின்றது.

## வைத்திய முறைகள்

O பீநாரி (பெருமரம்) மரப்பட்டை, இலை இவைகளை வகைக்கு 500 கிராம் வீதம் எடுத்து, ஊமச்சங்கூடு, தரைப்பூண்டு ஆகியவைகளை வகைக்கு 100 கிராம் வீதம் சேர்த்து இடித்துச் சாறு பிழிந்து 50 மி.லி. வீதம் 3 வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(சங்கன், காசம்பட்டி, திண்டுக்கல்)**



O பீநாரி (பெருமரம்) மரத்துப்பட்டை, கொழுந்து 1 கிலோ எடுத்து புளிச்ச தண்ணீரில் போட்டு இடித்து சுக்கு, மிளகு, திப்பிலி, வெற்றிலை ஒவ்வொன்றும் 10 கிராம் வீதம் அரைத்து 3 தடவை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(தாழமுத்து, வனத்தாய்புரம், தேனி)**

O கிளுகிளுப்பை என்னும் நரி மிரட்டி இலைச் சாறு அரை லிட்டருடன், மஞ்சள் தூள் 10 கிராம் சேர்த்து கலந்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

O பசு நெய் பெரிய மாட்டுக்கு 600 மி.லி. கன்றுக்கு 200 மி.லி. அளவு இலேசாக சூடேற்றி உள்ளுக்கு ஊற்ற வேண்டும்.

**(துரைச்சாமி, டி.களத்தூர், திருச்சி)**

O கருநொச்சி இலை, வேப்பிலை, அருகம்புல், துளசி ஒவ்வொன்றிலும் 100 கிராம் அளவு எடுத்து இவைகளை வெள்ளாட்டுப் பாலுடன் கலந்து நன்றாக அரைத்து ஒரு முறை கொடுத்தால் தொண்டை அடைப்பு சரியாகிவிடும்.

O நஞ்சுமுறிச்சான் இலை 100 கிராம், எலும்பொட்டித்தழை 50 கிராம் ஆகியவற்றை அரைத்துப் பச்சரிசிக் கஞ்சியுடன் உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ஜெயராமன், வண்டிபாளையம், விழுப்புரம்)**

O ஆவாரங்கொழுந்து 250 கிராம், ஆவாரம் மொக்கு (பூ) 250 கிராம், வெள்ளைப்பூண்டு 250 கிராம் மூன்றையும் இடித்து அம்மியில் அரைத்து 3 வேளை தரவேண்டும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

**(எ.இராஜா, வாசுதேவநல்லூர், திருநெல்வேலி)**

# 10. கால்காணை, வாய்காணை (கோமாரி நோய்)

இந்நோய் ஆடு, மாடு, போன்ற கால் குளம்புள்ள விலங்கினங்களுக்கு ஏற்படுகின்றது. இந்நோய் கலப்பின மாடுகளுக்கு எளிதாக தாக்கி விடும். நாட்டு மாடுகளில் இந்நோயினால் அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை.

## அறிகுறிகள்

கால்குளம்புகளில் கொப்புளங்களும், புழு வைத்த புண்களும் காணப்படும்.

அசை போட்டுக்கொண்டே இருக்கும்; உமிழ் நீர் வடிந்து கொண்டிருக்கும்.

கால்நடையின் வாயின் மேல் நாக்கிலும், உதடு மற்றும் ஈறுகளிலும் கொப்புளங்கள் தோன்றி புண்களாக மாறிவிடும்.

உடலில் காய்ச்சல் இருக்கும் ; தீனி சரியாக எடுக்காது; பால் அளவு திடீரென குறைந்து விடுகிறது; காணை உள்ள மாடுகளின் பாலை கன்றுகள் பருகிவிட்டாள் உடனே இறக்க நேரிடுகிறது. கால்களை உதறிக் கொண்டிருக்கும், நொண்டி நடக்கும்.

## காரணங்கள்

கோமாரி நோய் தொற்று கிருமிகளால் ஏற்படும் வியாதியாகும். மழைக்காலங்களில் இந்நோய் கால் குளம்புகளில் தோன்றி கால்நடைகள் நாக்கினால் அவற்றை நக்கும் போது வாய்ப்பகுதிக்கும் பரவி விடுகிறது. சேற்றுப் பகுதியில் மேய்ப்பதற்கு பதிலாக மலைகளில் மேய்ந்தால் இந்நோய் வருவதில்லை.



## வைத்திய முறைகள்

O நிலக்கடம்பு இலை (தரை புகையிலை) 250 கிராம் மஞ்சள் 50 கிராம், கட்டிக் கற்பூரம்25, கிராம் 250 ஆகியவற்றை அரைத்து காணை உள்ள கால்களில் வைத்து ஒரு துணியால் கட்டி விடவேண்டும். கொசு மற்றும் ஈ மொய்க்காமலிருக்க அதற்கு மேல் வேப்பெண்ணெய் தடவ வேண்டும்.

**(மூர்த்தி, ஆயர்பாடி, கோட்டக்கரை, பாண்டிச்சேரி)**

O குப்பைமேனி இலை, சிறு தும்பை இலை சம அளவு எடுத்து விரலி மஞ்சள் 4, கட்டி கற்பூரம் 10 மற்றும் சிறிது முடிக்கருக்கினை சேர்த்து அரைத்து வேப்பெண்ணெய் கலந்து களிம்பாக செய்து கால் குளம்புகளில் தடவி வர வேண்டும்.

**(இராமு, இலுப்பக்குடி, சிவகங்கை)**

O வாய் கோமாரிக்கு வேப்பிலை மற்றும் மஞ்சளை அரைத்து நீருடன் கலந்து மூன்று நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும். வாய்ப்புண் ஆறும் வரை நன்றாகக் காய்ச்சிய கம்பங்கூழ் உணவாகக் கொடுத்து வர வேண்டும். இந்நோய் ஊரில் பரவும் சமயம், நோய் வராத மாட்டுக்கு காட்டுக் கம்பு இடித்து கஞ்சி காய்ச்சி கொடுத்து வந்தால் இந்நோய் பரவாது.

**( அழகர்சாமி, கோடாங்கிபட்டி, போடி, தேனி)**

O வரகுப்புல்லையும், கொன்றை இலையும் சேர்த்து தலைப்பகுதியில் வாயின் முன்புறத்தில் காலை, மாலை என 2 நாட்கள் புகை மூட்டம் போட வேண்டும். இந்நாட்களில் நோய் கண்ட மாட்டை தொழுவத்தில் தனியாகக் கட்டி வைக்க வேண்டும். உணவாகக் கேப்பைக் கஞ்சியும் ஆறிய வெந்நீரும் கொடுக்க வேண்டும். கால் கோமாரிக்கு குளம்புகளின் இடைவெளியில் உள்ள புண்களுக்கு வேப்பெண்ணெயை தினம் மூன்று வேளை தடவ வேண்டும்.

**(ந. கண்ணப்பன், பாரூர், தர்மபுரி)**

O ஓமம் 50 கிராம், சதகுப்பை 15 கிராம் ஆகியவற்றை 1லிட்டர் நீருடன் சேர்த்து கால் லிட்டராக வற்றும் வரை கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் ஆறவைத்து நோய் குணமாகும் வரை கொடுத்து வரவேண்டும்.

புதினாச்செடி, மஞ்சள், கொட்டைப்பாக்கு, வெற்றிலை ஒவ்வொன்றிலும் 25 கிராம் வீதம் அரைத்து 3 நாட்களுக்கு தினமும் உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ஆர். கே. குப்தா, டேராடூன்)**

O காணைநோய் கண்ட கால்நடையின் உமிழ்நீருடன் கூடிய வாய் நுரையை காணை வராத மாட்டின் வாயில் தடவ வேண்டும். இவ்வாறு செய்வதால் காணை நோய் பரவுவது தடுக்கப்படுவதாகவும், நோயில்லாத மாட்டுக்கு நோய் பரவி உடனடியாக குணமாகி விடுவதாகக் கூறப்படுகிறது.



O காணை கண்ட மாட்டின் வாய்ப்பகுதியில் வேப்ப இலையும் மஞ்சளும் அரைத்து பூச வேண்டும். வேப்பெண்ணெய்யை கால் குளம்புகளில் தடவ வேண்டும். இத்துடன் போராக்ஸ் 300’ என்ற ஹோமியோபதி மருந்துடன் 100 மி.லி. கிளிசரின் கலந்து காணை நோய் கண்ட மாட்டிற்கு கொடுக்க வேண்டும்.

**(அசோக்குண்டே, பிள்ளையார்குப்பம், பாண்டிச்சேரி)**

O வண்ணான் அவுரி இலை (நீலித்தழை) வெள்ளை குங்கிலியம், சங்கங்குப்பி, கருப்பு குங்கிலியம் ஆகிய ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம் சேர்த்து அரைத்து சிறு சிறு உருண்டை மாத்திரைகளாக செய்து வைத்துக் கொண்டு, ஒரு வேளைக்கு 10 மாத்திரை வீதம் 3 வேளைக்கு வாழைப்பழத்தில் வைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். மாத்திரையை உள்ளுக்குள் கொடுக்கும்போது நாக்கை பலமாக இழுக்கக் கூடாது.

மாத்திரை கொடுக்கும் முன் 10 கிராம் படிகாரத்தை 300மி.லி. நீரில் சூடு செய்து இக்கரைசலால் வாயிலுள்ள புண்களை கழுவி விட வேண்டும்.

**(எஸ். எ. ஜெயகாந்தன், சித்துக்காடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.)**

O இந்நோய் கண்ட மாடுகளைத் தனியாகக் கட்டி வாழைப்பழங்களை விளக்கெண்ணெய்யில் இரவு நேரங்களில் ஊறவைத்து காலையில் புகட்ட வேண்டும். பன்றி மாமிசத்தை இரவு நேரங்களில் சமைத்துக் குழம்பாகக் காய்ச்சிக் காலையில் சாமை சாதத்துடன் கலந்து ஊட்டுதல், மீன், கருவாடு ஊறவைத்த நீரை கால் குளம்பில் ஊற்றுதுல் போன்றவை கடைபிடிக்க வேண்டும்.

**(ஜி.ராமதாஸ், காந்திகிராமம், திண்டுக்கல்)**

O குளத்துச் சேற்றில் மாட்டை மிதிக்கவிட்டுப் பின்னர் கால் பாகத்தில் மண்ணெண்ணெய் தடவி காயவைத்து விடவேண்டும்.

**(சே.சஞ்கன், காசம்பட்டி, நத்தம், திண்டுக்கல்)**

O வேப்பந்தழை, கருவாட்டுத்தூள், மஞ்சள் கலந்து புகை மூட்டம் செய்து புகைவாடையை நோய்கண்ட மாட்டிற்கும், தொழுவத்திலும் காட்டவேண்டும்.

வசம்பும், அகத்தியிலையும் சேர்த்து அரைத்து வாயிலும், நாசியிலும், குளம்பிலும் தடவிவர வேண்டும். பழைய புளியுடன் நல்லெண்ணெய்யுடன் பிசைந்து வாயில் தடவவேண்டும். கருவாடு கழுவின தண்ணீரைக் குளம்புகளில் விடலாம். சுக்கு நரிப்புல், இலுப்பைப் பிண்ணாக்கு. எருக்களை, வேலிப்பருத்தியிலை, வேப்ப இலை, சந்தனக் கட்டை இவைகளையெல்லாம் அரைத்து நீரில் கலக்கி உள்ளுக்குள் புகட்டி உடம்பிலும் பூச வேண்டும்.

**(கருப்பணன், சோமையனூர், கோவை)**

O ஆடுகளுக்குக் காணநோய் வந்தால் இரை திண்ணாது. வாயில் நீர் வடியும். இதற்கு மலைவாழைப் பழம் 2 மற்றும் நல்லெண்ணெய் 50மி.லி. சேர்த்து 3 நாட்கள் தொடர்ந்து கொடுத்து வர குணமாகின்றது.

**(சே.சஞ்கன், காசாமபட்டி, நத்தம், திண்டுக்கல்)**

O காணை நோய் வருமுன் தடுப்பதற்கு பிஞ்சு மாவடு 100 கிராம் அரைத்து காலை மாலை என 2 வேளைக்கு உள்ளே கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுத்து வந்தால் பிற மாடுகளிலிருந்து நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.



O நோய் வந்த கால்நடைகளுக்கு தலைச்சுருளி வேர் 15 கிராம் இடித்து நீருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(கருப்பையா, கீழதானியம், மானாமதுரை, சிவகங்கை)**

O மாவிலங்கம்பட்டை 100 கிராம், மஞ்சள்தூள் 25 கிராம், தேங்காய் ஒன்று சேர்த்து அரைத்துக் கொடுக்க வேண்டும்.

**(ஜெயராமன், செய்யாங்குளம், விழப்புரம்)**

O மலை வாழைப் பழம் 2, விளக்கெண்ணெய் 150 மி.லி. ஆகியவற்றை பிசைந்து ஊட்ட வேண்டும். மாட்டுத் தொழுவத்தைச் சுத்தமாகக் கழுவி பினாயில் தெளிக்க வேண்டும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**

O வாழைப்பழம் 5, நல்லெண்ணெய் 100 மி.லி. யுடன் பிசைந்து ஒருவாரத்திற்கு உள்ளே புகட்டவேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O சாதிக்காய் ஒன்று, மாசிக்காய் ஒன்று இவைகளை இடித்து நீரில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும் (அல்லது)

பலாமர இலை 200 கிராம், வேப்பம்பட்டை 300 கிராம் எடுத்து 5 லிட்டர் நீர் கலந்து ஒரு மணிநேரம் காய்ச்சினால் 3 லிட்டராக வற்றி விடும். இதனை மாட்டிற்கு அரை லிட்டர் வீதம் உள்மருந்தாக இருவேளை கொடுக்க வேண்டும். இதனை நோய் வரும் முன்பும் கொடுத்து நோய் வராமல் பாதுகாக்கலாம். சுமார் 30 – க்கு மேற்பட்ட பசுக்களில் பரிசோதிக்கப்பட்டு குணமாகியுள்ளன.

**(கோவிந்தசாமி, பாப்பவலசு, கொடுமுடி, ஈரோடு)**

O சேரன்கொட்டை பருப்பு 50 கிராம் அரைத்து நல்லெண்ணெய் 250 மி.லி. யுடன் கலந்து காய்ச்சி ஆற வைத்து கால்காணை உள்ள இடத்தில் தடவ வேண்டும்.

O வாய்காணைக்கு வரிகுமட்டிச் சாறு 100 மி.லி. சோற்று கற்றாழைச் சோறு 100 மி.லி., ஆடுதிண்ணாப்பாளை சாறு 100 மி.லி.. வேப்பெண்ணெய் 50 மி.லி. ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு 50 கிராம் கருப்பட்டியை முதலில் தின்னக் கொடுத்துவிட்டு 15 நிமிடம் கழித்து மருந்துக் கலவையைக் கொடுக்க குணமாகும்.

**( ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O வெந்தயம், சீரகம். சிறுவெங்காயம் ஆகிய ஒவ்வொன்றிலும் 50 கிராம் எடுத்து அரைத்து 50 மி.லி. நல்லெண்ணெயுடன் சேர்த்து உள்ளே புகட்ட வேண்டும்.

O தும்பை இலை ஒரு கைப்பிடி அளவு, குப்பைமேனி ஒரு கைப்பிடி அளவு, மஞ்சள் 10 கிராம், உப்பு 1 கைப்பிடி அளவு ஆகியவற்றை நன்றாக அரைத்து காணை உள்ள இடத்தில் பூச வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O 3 லிட்டர் சுடு நீரில் ஒரு ஸ்பூன்கல் உப்பு அரை ஸ்பூன் சோடா உப்பு சேர்த்து கரைத்து காலையிலும், மாலையிலும் கால் குளம்புகளை கழுவி விடவேண்டும். மற்ற மாடுகளுக்கு ஊரில் காணை நோய் பரவும் சமயம் இம்முறையை 15 நாட்கள் நமது மாட்டிற்கு கடைபிடித்து வந்தால் காணை நோயிலிருந்து காப்பாற்றலாம்.



O காணை வந்த மாட்டின் பாலை கன்றுகள் குடித்தால் கன்றுக்கு நோய் பரவி இறந்துவிடும். எனவே பாலை கறந்து காய்ச்சி, ஆற வைத்து கன்று குட்டிகளுக்கு மதிய வேளையில் புகட்ட வேண்டும்.

**(லீலா, ஜெய நகர், சிமோகா, கர்நாடாகா)**

O ஊரில் காணை நோய் மாடுகளுக்கு பரவி வரும் சமயம் நோய் காணாத மாடுகளுக்கு தினமும் தண்ணீரில் உப்பும், வேப்பம்பட்டையும் சேர்த்து கொதிக்க வைத்து கால் குழம்பு பகுதியையும், வாய் பகுதியையும் நன்கு கழுவி விட வேண்டும். இதற்கு பின் 200 கிராம் துளசி இலை, விராலி மஞ்சள் 3, கல் உப்பு 10 கிராம் அரைத்து தினமும் ஒரு வேளை வீதம் கவளமாக 3 நாட்களுக்கு தொடர்ந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(திருமதி. பொன்னுமுத்து, தேவாணிபட்டி, சிவகங்கை)**

O படிகாரம் 25 கிராம் எடுத்து தூள் செய்து அரை லிட்டர் நீரில் கலந்து அதை வாய், கால் குளம்பு முதலிய இடங்களிலுள்ள புண்களை நன்றாகக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதன்பின் வேப்பெண்ணெயை புண்களின் மேல் பூசிவிட வேண்டும். (அல்லது) கருவேலம்பட்டையை நீருடன் காய்ச்சி கசாயம் செய்து, வாய் மற்றும் கால் குளம்பு பகுதிகளில் கழுவி விட செய்யலாம்.

**( கால்நடை பராமரிப்பு இலாகா, செய்தி குறிப்பு –1954, சென்னை)**

O மாட்டிற்கு ஒரு முட்டையை உடைத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து ஒரு நாளைக்கு ஒரு தடவையாக 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும். வாய்பகுதியில் மஞ்சள் 10 கிராம், போராக்ஸ் 10 கிராம் இரண்டையும் வெண்ணெய்யில் பிசைந்து பூச வேண்டும். கால்பகுதியில் மயில்துத்தம், ஆலம் (படிகாரம்) என்ற இரண்டையும்

4 – 5 சதகரைசலாக்கி 3– 4 முறை பூசிவிட வேண்டும். (40 கிராம் தூளை 1 லிட்டர் நீரில் கலந்து கரைசலாக்கலாம்) இதை குணமாகும் வரை கடை பிடிக்க வேண்டும்.

**(ஆர்.கே.குப்தா, டேராடூன்)**

O காணை வந்தமாட்டின் கால் குளம்புகள் வெது வெதுப்பான உப்புக் கரைசலில் கழுவ வேண்டும். பழைய, தோல் செருப்பை எரித்து கிடைக்கும் சாம்பலுடன், அதே அளவு கடலை எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்து புண் ஆறும் வரை குளம்புகளில் தடவ வேண்டும்.

**(கிரீத் பட்டேல், அகமதாபாத்)**

O காணை வரும் முன் தடுப்பதற்கு ரஸ்டாக்ஸ் 200 வது வீரியம் அல்லது **காலிஐயோடேட்டம்** 200 வது வீரியம் என்ற ஸோமியோபதி மருந்தில் 4 மாத்திரை வீதம் இரண்டு வேளை கொடுக்க வேண்டும்.

**(நீலகண்டன், வண்டியூர், மதுரை)**




# 11. சப்பை நோய்

சப்பை நோய் நல்ல நிலுவையிலுள்ள இளங்காளைகள், கிடேரிகளை தாக்குகின்றது. இந்நோய் மழை காலத்திலோ அதற்கு பின்போ வருகிறது. மேய்ச்சல் தரையில் மண்ணில் நோய் கிருமிகள் பரவி விடுவதால் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மீண்டும் மீண்டும் இந்நோய் ஏற்படுகிறது. எனவே நோய் பரவிய மேய்ச்சல் தரைகளை நன்றாக உழுது விட வேண்டும்.

## அறிகுறிகள்

வீக்கம் இருக்கும் இடத்தை கண்டறிந்தவுடன் அதனைச் சுற்றி சுண்ணாம்பினால் வட்டமிட வேண்டும்; சிலமணி நேரம் கழித்து வீக்கமானது வட்டத்தை விட்டு பெரிதாகி காணப்பட்டால் சப்பை நோய் உள்ளது என்பதை அறியலாம்.



திடீரென்று உடலில் வெப்பம் அதிகமாகி காய்ச்சல் கண்டு மாடு இறந்து விடும். தொடை, தோல் சப்பை, கழுத்துப் பகுதிகளில் சூடான, இறுக்கமான வலியோடு கூடிய வீக்கம் காணப்படும். வீக்கம் வந்த பகுதிகளில் உள்ள தோல் காய்ந்து, கருப்பாகி வீங்கியுள்ள இடத்தை அழுத்தினால் 'நறநற' என்ற சப்தம் கேட்கும்.

கால்கள் நடக்க முடியாமல் நொண்டும் ; தீவனம் தின்னாமலும், நீர் குடிக்காமலும் இருக்கும். மார்பு பகுதி வீங்கி தலை, கண், நாடி மற்றும் உடல் முழுவதும் குளிர்ச்சியாக இருக்கும்.

### காரணங்கள்

மழைக்காலங்களில் பரவும்; நோய்வாய்ப்பட்ட மாடுகளில் இருந்து சாணத்தின் மூலம் பரவும்.

## வைத்தியமுறை

O கொடிவேலிவேர் 10 கிராம், எருக்கங்காய் 5 (சுட்டது), கவிழ்தும்பை 100 கிராம், சிறுகுமட்டி இலைகிராம், பேய் தும்மட்டி 100 கிராம், வெற்றிலை 5, மிளகு 25 கிராம், சுக்கு 50 கிராம் போன்றவற்றை அரைத்து வைத்து இரண்டு பங்காக்கி காலை, மாலை, 2 வேளைக்கு சுடு நீரில் கலந்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(இராமுத்தேவர்,பொன்னம்படுகை, வருசநாடு, தேனி)**

O பேய்பீர்க்கை இலை, பீநாரிச் சங்கு இலை, கோவை இலை ஆகியவற்றை கைப்பிடியளவு சேர்த்து இடித்து கால்படி சாறு எடுத்து அத்துடன் இடித்து பொடி செய்த சுக்கு, மிளகு, பெருங்காயம் 10 கிராம், இரண்டு கோழி முட்டை மற்றும் வேப்பெண்ணெய் 50 மி.லி. கலந்து 3 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(குமார், இ.கோவில்பட்டி, திண்டுக்கல்)**



O தென்னம்பாளை பூ, அரிசியை எலுமிச்சம்பழ அளவு அரைத்து 100 மி.லி. பசும்பாலில் துவைத்துப் பிழிந்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(எம். சடையன், சித்தரேவு, திண்டுக்கல்)**

O புற்றுமண், புழுங்கல் அரிசி 150 கிராம், வெள்ளை நத்தை கூடு 4 எண்ணிக்கை, கோழிமுட்டை 1, மஞ்சள் துண்டு 1இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து சப்பை வீங்கி உள்ள இடத்தில் அழுத்திப் பார்த்து இதைப் பத்து போட வேண்டும். உள்மருந்தாக வெற்றிலை 4, ஓமம் 5 கிராம், சாம்பிராணி, 5 கிராம், மிளகு 10 கிராம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(எ.ஆர். நாராயணசாமி, ஆய்மூர், நாகப்பட்டிணம்)**

O திருகுகள்ளிப்பால், கொடிகள்ளிப் பால், அத்திப்பால், ஆலம்பால் மற்றும் எருக்கம்பால் ஒவ்வொன்றும் 10 முதல் 15 சொட்டுகள் வரை ஒரு சிறு எவர்சில்வர் பாத்திரத்தில் எடுத்து அத்துடன் 50 மி.லி. நல்லெண்ணெய் மற்றும் கேப்பை மாவு (ராகி மாவு) 50 கிராம் ஆகியவற்றை குழைத்து கால்நடைகளில் சந்து பகுதியில் சிறிய வட்டமாக பொட்டு வைக்க வேண்டும் (மேற்கண்ட அளவு மருந்து சுமார் 50 மாடுகளுக்கு போதுமானது).

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O சப்பை நோய்க்கு க்ரோடலஸ் ஹாரிடஸ் 200 வது வீரியம் என்ற ஹோமியோபதி மருந்தை நோய் வந்த சமயம் அல்லது அதற்கு முன் கொடுத்தால் நோய் தீரும்.

**(நீலகண்டன், வண்டியூர், மதுரை)**

# 12. மடி நோய்

## அறிகுறிகள்

மடிவீங்கி சூடாக இருக்கும்; திடீரெனபால் குறையும் ; தீனி சரிவர உண்ணாமல் இருக்கும் ; பசுவிற்கு அதிக காய்ச்சல் காணப்படும் ; மடியை தொட்டால் வலிதாங்காமல் உதைக்கும் ; காம்பிலிருந்து பால் நீர்த்தும், இரத்தம் கலந்தும், திரிந்தும் வரும் ; கவனிக்காமல் விட்டுவிட்டால் மடி கெட்டியாகி பால்சுரப்பது நின்றுவிடும்.

## காரணங்கள்

அதிக பால்தரும் கலப்பின மாடுகளில் இந்த நோய் வருகிறது. இது பால்மடியில் ஏற்படும் தொற்றுக் கிருமி சாந்த நோயாகும்.

சுகாதாரமான முறைகளை கடை பிடிக்காமல் இருப்பதால் கட்டுத்தரையில் தொற்று கிருமிகள் பரவி மடிக்காம்பு மூலமாக உள்ளே சென்று விடுகின்றன.

கறவையாட்கள் மூலம் ஒரு மாட்டிலிருந்து மற்ற மாட்டிற்கு இந்நோய் பரவுகிறது. கலப்பின மாடுகளின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு காரணமாக எளிதாக நோய் பரவுகிறது.

## நோயின் தடுப்பு முறைகள்

பால் கறப்பற்கு முன்பும், பின்பும் கறவையாட்கள் தங்கள் கைகளையும், மடி காம்புகளையும் இளஞ்சுடு நீர் அல்லது சோப்பு கொண்டு கழுவிட வேண்டும்.

வாரத்தில் இரு முறை சுண்ணாம்பு கல் ஊறவைத்த தெளிந்த நீரை குடிநீருடன் கலந்து கொடுக்க வேண்டும்.



ஆரம்ப நிலையில் இந்நோய் கண்ட மாடுகளுக்கு கொத்த மல்லி தழை கால் கிலோ அளவு ஒரு நாளைக்கு இருமுறை புகட்டுதல் நல்லது. சுமார் 5 லிட்டர் சுடு தண்ணீரில் கால் கிலோ உப்பு சேர்த்து இத்துடன் 50 கிராம் சுக்கு தூள் கலந்து குடிக்க வேண்டும்.

## வைத்திய முறைகள்

O பேய்பீர்க்கு இலை தேவையான அளவ எடுத்து நன்றாக அரைத்து 3 நாட்களுக்கு மடி முழுவதும் பூசி விட வேண்டும். தலைச்சுருளிவேர் (ஈஸ்வரமூலிகை) இடித்து பொடி செய்து 10 கிராம் வீதம் காலை, மாலை என 3 வேளைகள் 200 மி.லி. நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O அப்பக்கோவை, பொன்னாங்கண்ணி, சிறுபொரும்பி, சித்தா முட்டி இலைகளை ஒவ்வொன்றும் 50 கிராம் அளவு சேர்த்து அரைத்து 50 கிராம் வெண்ணெயில் கலந்து பால்காம்பு மற்றும் மடியில் தடவ வேண்டும்.

**(எம்.சுப்பிரமணியன், சின்னேரிபாளையம், பொள்ளாச்சி, கோவை)**

O அப்பக்கோவை தழையை 50 கிராம் அளவு எடுத்து இத்துடன் வசம்பு 10 கிராம், மஞ்சள் 10 கிராம் அளவு சேர்த்து அரைத்து மாட்டு காம்பு, மடியில் தடவி விட்டால் மடியில் இரத்தம், சீழ் வடிதல் போன்றவை உடனே நின்றுவிடும்.

**(சின்னச்சாமி, முத்துக்கவுண்டனூர், பொள்ளாச்சி, கோவை)**

O சிறு பொரும்பி (பூக்கள் மஞ்சளாகவும், காய்கள் நீண்டு காய்க்கும் குற்றுச்செடி) தழையை 100 கிராம் எடுத்து இத்துடன் 100 கிராம் வெங்காயம், 5 மஞ்சள் கிழங்கு சேர்த்து அரைத்து தடவ வேண்டும்.

**(மோகன்ராஜ், பழனிகவுண்டனூர், கிணத்துக்கடவு, கோவை)**

O வேலிப்பருத்தி இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து கசக்கிப் பிழிந்து, அச்சாறில் சிறிதளவு சுண்ணாம்பும், 3 சொட்டு எருக்கம் பாலும் விட்டு நன்றாகக் கலக்கி காலையும், மாலையும், மடி மற்றும் காம்பின் வீக்கம் வற்றும் வரை தடவ வேண்டும்.

**(கோவிந்தன், செல்லியம்பாளையம், சேலம்)**

O மாடு கன்று போட்ட பின் சில நாட்களில் மடிகட்டும். இதற்கு வெண்ணெயும் வெங்குசான் கல்தூள் இரண்டையும் கலந்து மடியின் மீது காலை, மாலை தடவ வேண்டும். (வெங்குசான் கல் என்பது பளபளவென காணப்படும் வெண்நிறக்கல். இதனை இடித்து பொடி செய்து துணியில் சலித்து வைத்துக் கொண்டு மடி நோய்க்கு உபயோகப்படுத்த வேண்டும்).

**(முனியப்பா, தென்கனிகோட்டை, தருமபுரி)**

O மருதாணி இலை (கைப்பிடி) கரையான் புற்று சேறு 2 பங்கின் அளவு சேர்த்து அரைத்து நீரில் கொதிக்க வைத்து 3 நாட்கள் மடியில் தடவ வேண்டும். இது கட்டிக்கும், புறப்பாட்டுக்கும் குணமளிக்கக் கூடியது.

**(ஆறுமுகம், பொன்னாகுளம், சிவகங்கை)**



O தும்பைஇலை, உசிலை, கோவை இலை, வேப்பம்பட்டை ஒவ்வொன்றும் 25 கிராம் அளவு எடுத்து அரைத்து கடலை எண்ணெயில் கலந்து மூன்று வேளை மடியில் தடவ வேண்டும்.

**(பெருமாள் கவுண்டர், தாதசோலைபட்டி, மணப்பாறை, திருச்சி)**

O வேம்பு இலை 40 கிராம், சீத்தா இலை 40 கிராம், மருதாணி, இலை 40 கிராம் கலந்து அரைத்து மடியில் தடவ வேண்டும். வேம்பு மரப்பட்டை மற்றும் இலைகளிலிருந்து கசாயம் செய்து காம்புகளின் மீது தடவி வருவது சிறந்த கிருமி நாசினியாக செயல்படும்.

**(அசோக் குண்டே, பிள்ளையார்குப்பம், பாண்டிச்சேரி)**

O ஒரு சிரட்டையில் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நாமக்கட்டியை உரசி கிடைக்கும் களிம்புடன் சிறிது மஞ்சள்தூள் சேர்த்து பசுவின் மடிக்கட்டில் தடவினால் மடியில் இருக்கும் வீக்கத்தைக் கட்டுப் படுத்தலாம்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O பாக்கை இடித்துப் பொடிசெய்து, தென்னைமட்டை சாறுவிட்டு லேசாக சூடாக்கி மடியில் பூசிவர வேண்டும்.

**(சாமுவேல், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி)**

O கொதிக்கும் நீரில் நீலகிரி தைலம் கலந்து வரும் ஆவியை மடியில் முழுவதும் படுமாறு காட்ட வேண்டும். பின்னர் இராம தும்மட்டி இலை 1 கிலோவுடன், வெங்காயம் அரை கிலோ சேர்த்து இடித்துச் சாறு எடுத்து இத்துடன் 20 கிராம் சந்தனம் வில்லை கலந்து மடியின்மீது முழுவதும் பூசிவிட வேண்டும்.

**( வெளியப்பன், காமய கவுண்டன்பட்டி, தேனி)**

O பீநாரிச்சங்கு இலையை சூடு செய்து துணியில் கட்டி ஒத்தடம் தர வேண்டும். பின்பு எலுமிச்சம் பழச்சாற்றில் உப்பு, சாக்பீஸ் தூள் கலந்து மடியில் பத்து போட வேண்டும். அல்லது தொட்டாற் சிணுங்கி இலையை உப்பு சேர்த்து அரைத்தும் மடிமேல் தடவலாம்.

**(மாரியப்பன், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

O புளிச்சகீரை, வெள்ளெருக்கு பூ 2 எண்ணம், சின்ன வெங்காயம் 20 கிராம் இவற்றை தண்ணீர் விடாமல் அரைத்து மடியின்மேல் பூச வேண்டும்.

**(வினைதீர்த்தான், குளத்துார், வேடசந்துார், திண்டுக்கல்)**

O கல்பனை, விராலி இலை, மாவிலங்கம்பட்டை, வில்வ இலை மற்றும் கடைச் சரக்கு (பேறுகால சாமான்கள் வகைக்கு சுமார் 5 – 10கிராம்) சாமான்கள் சேர்த்து மஞ்சள் கிழங்குடன் அரைத்து உள்ளே தர வேண்டும்.

**(மாரியப்பகோனார், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

O புண்ணாக்குக்கீரை (முட்டி பூண்டு) 1 கைப்பிடி அளவு, வேப்பம்பிசின் 10 கிராம், பச்சை மஞ்சள் அல்லது விரலிமஞ்சள் 2 அங்குலம் இந்த மூன்றையும் சேர்த்து அரைத்து பின் நாட்டுக்கோழி முட்டையுடன் சேர்த்து காலை, மாலை மற்றும் மறுநாள் காலையாக 3 வேளை மடியில் பத்துப் போட வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O விரலி மஞ்சள் 2 துண்டு மற்றும் சாக்பீஸ் 2 எடுத்து 2 எலுமிச்சம்பழ சாறு விட்டு அரைத்து காலை, மாலை 2 வேளை மடியில் பத்துப் போட வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**



O ஆரம்ப காலத்தில் ஒரு மாட்டிற்கு திடீர் நடுகாம்பு மடி மட்டும் வீக்கத்துடன் இருந்தது. இதற்கு பைட்டோலோகா 200 வது வீரியம் (Phytolocca ) என்ற மருந்தை 3 மணி நேரத்திற்கு ஒரு முறை 4 தடவை கொடுத்தேன். சரியாகிவிட்டது. மடிவீக்கம் முற்றிய நிலையில் சிவந்து, சூடாகவும், வலியுடனும் இருந்தால் பெல்லடோனா 200 வீரியம் (Belladona 200 ) என்ற மருந்தை தரவேண்டும்.

**(ரோஸ்பாய் மலீக், ரெஹா, மகாரஷ்டிரா)**

# 13. காய்ச்சல் / குந்து

## அறிகுறிகள்

நான்கு கால்களும் நடுங்கும்; உடல் புல்லரிக்கும்; உடம்பு அதிகமான வெப்பமாக இருக்கும் ; வாய், கண்களிலிருந்து நீர் வடியும் ; சிறுநீர் சிவப்பு மஞ்சள் நிறத்திலிருக்கும் ; தீவனம் தின்னாது; சாணம் போடாது.

## காரணம்

தொற்று கிருமிகளால் ஏற்படும் நோயாகும்.குந்து நோய் வரும்போது ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டிற்கு எளிதில் பரவி விடுகின்றது.

## வைத்திய முறைகள்

O சுக்கு, மிளகு, ஓமம், மட்டி பெருங்காயம், பூண்டு ஆகிய ஒவ்வொன்றும் 50 கிராம் சித்தரத்தை 10 கிராம், முடக்கத்தான் இலை கைப்பிடியளவு ஆகியவற்றை இடித்து 50 மி.லி. வேப்பெண்ணெயில் பிசைந்து உருட்டி ஒரே தடவையில் உள்ளே கொடுக்க வேண்டும். குடிப்பதற்கு கொதித்து ஆறிய நீர் கொடுக்க வேண்டும்.

**(க.குமார், இ.கோவில்பட்டி, திண்டுக்கல்)**

O நல்லெண்ணெய் 150 மி.லி. , மிளகு 50 கிராம், சுக்கு 25 கிராம், பெருங்காயம், சின்ன வெங்காயம், கேழ்வரகுக்கூழ் ஆகியவற்றுடன் ஒன்றாகக் கலந்து ஒரே வேளையில் ஊற்றி விட வேண்டும்.வெளிப்பூச்சாக அதன் சாணத்தை முழங்காலுக்குக் கீழே பூசி விட வேண்டும்.

**(பெரிய வேலுச்சாமி, பழனிக்கவுண்டன்வலசு, தாராபுரம், )**



O நாட்டுக் கோழி முட்டை ஒன்றை உடைத்து வாயில் ஊற்றி விட வேண்டும். நுணா (மஞ்சனத்தி) இலை, அதன் மரப்பட்டை ஆகியவற்றை கோழி முட்டை அளவிற்கு அரைத்து பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**

O சத்திசாரணை கிழங்கு, கொடிவள்ளிக் கிழங்கு, முடக்கத்தான் இலை ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து அத்துடன் சீரகம், பூண்டு, சதகுப்பை, சோம்பு, மல்லி ஆகியவற்றில் வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து மிளகாய் வற்றல் 4 எண்ணம் சேர்த்து இடித்து பொடி செய்து 1லிட்டர் தண்ணீரில் நன்கு வேக வைத்து அந்த தண்ணீரை மாடுகளுக்கு 2 வேளை குடிக்கக் கொடுக்க வேண்டும்.

**(வெள்ளை, சல்லிக்கோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O நொச்சி, துளசி, ஓமம், மிளகு, ஆடாதொடை, பனங்கற்கண்டு ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு சேர்த்து அரைத்து காலை மாலை 2 வேளை உள்ளே தர வேண்டும்.

**(கருப்பையா, கீழதானியம், மானாமதுரை, சிவகங்கை)**

O ஓமம் 10 கிராம், பெருங்காயம் 10 கிராம், புகையிலை ஒரு துண்டு, மிளகாய், வற்றல் 4 சேர்த்து இடித்து வெற்றிலை 4–ல் வைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(முத்துக்குமார், குருந்தம்பட்டி, திண்டுக்கல்)**

O நல்ல துளசி 2 கைப்பிடியளவு (100 கிராம்), மிளகு 100 கிராம், சிறு வெங்காயம் 200 கிராம் ஆகியவற்றை மொத்தமாக இடித்து காலை, மாலை மற்றும் மறுநாள் காலை என 3 வேளை உருண்டையாக்கி உள்ளே புகட்ட வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O முடக்கத்தான் இலைச்சாறு அரை லிட்டருடன் வசம்பு 10 கிராம், பெருங்காயம் 10 கிராம் போட்டு, காய்ச்சி ஆறவிட்டு கால்படி சாறை மாட்டுக்கு குடிக்க கொடுக்க வேண்டும். மீதிச் சாறை ஒரு வெள்ளைத் துணியில் தொட்டு, உடல் முழுவதும் சூடு பறக்க தேய்த்துவிட வேண்டும்.

**(அழகர்சாமி, கோடாங்கிபட்டி, தேனி)**

O மஞ்சள் 50 கிராம், ஓமம் 100 கிராம், பாறை உப்பு (rocket salt)200 கிராம் கலந்து நாக்கின் மேல் 3 நாட்கள் தடவ வேண்டும்.

**(ஆர்.கே.குப்தா, டேராடூன்)**

O கொழுஞ்சி செடியை வேருடன் பிடுங்கி ஆட்டி 100 மி.லி. நல்லெண்ணெயில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும்.

**(புல்லாக்கவுண்டர், தொண்டாமுத்தூர், கோவை)**

O பேய்குமட்டிக் காய் 2 எண்ணம், வெல்லம் கால் கிலோ சேர்த்து இடித்து உள்ளே கொடுக்க வேண்டும். கொத்தமல்லிதழை ஒரு கட்டு (250 கிராம்) மற்றும் முள்ளங்கி 2 கிலோ ஒரு நாளைக்கு 3 வேளை வீதம் 3 நாட்களுக்குத் தொடர்ந்து தின்னக் கொடுக்க வேண்டும்.

**(பில்லக்கா, நல்லராலப்பள்ளி, தருமபுரி)**



O புளியம்பட்டை அரை கிலோ எடுத்து இடித்து 1 லிட்டர் தண்ணீருடன் கலந்து அரை லிட்டராக வற்றும்படி வேகவைத்து ஆறியதும் உள்ளே கொடுக்க வேண்டும்.

( அல்லது)

கோழிக்குஞ்சு இறகு, தலைச்சுருளி, தும்பை, குப்பைமேனி ஆகியவற்றில் 50 கிராம் வீதம் எடுத்து அரைத்து வேப்பெண்ணெய் 100 மி.லி.யில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(வெள்ளைச்சாமி, எருமைக்குளம், புல்வாய்க்கரை, விருதுநகர்)**

O ஒரே பேர் கொண்ட வயதிற்கு வராத 3 பெண்களை முறத்தில் அடுப்புச் சாம்பல் எடுக்கச் சொல்லி தலையிலிருந்து வால் வரை மாட்டை சுற்றி 3 தடவை புடைத்தால் சரியாகிவிடும். அதோடு குண்டுமுத்து கொடியை கழுத்தைச் சுற்றி கட்டிவிட வேண்டும். வெந்நீர் ஆற வைத்து கொடுக்க வேண்டும். எக்காரணங் கொண்டும் மாட்டை தொடக்கூடாது.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O வேப்பம்பிண்ணாக்கு 100 கிராம், வேப்பமரப்பட்டை அல்லது வேப்பம் பழத்தோல் 250 கிராம், தும்பை 50 கிராம், முடக்கத்தான் 50 கிராம், ஓமம் 10 கிராம், சதகுப்பை 10 கிராம் ஆகியவற்றை ஒரு மண்சட்டியில் போட்டு தீயிட்டு வரும் புகையை தலைப்பகுதியில் படுமாறு காட்ட வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O கொள்ளுப்பயறை ஆவி வெளியேராமல் அவித்து நோய் கண்ட மாட்டின் தலைப்பகுதியில் ஆவிபடுமாறு காட்ட வேண்டும். பின்பு அடுப்பில் எரித்த சாம்பலை கால் அளவிற்கு எடுத்து மாட்டின் உடம்பின் முழுவதும் நன்றாகப் பூசிவிட வேண்டும். ஒரு நாளைக்கு 3 முறை என 5 நாட்கள் தொடர்ந்து பூச வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O பசுவிற்கு காய்ச்சல் வந்தால் காளையின் கோமியத்திலும், காளைக்கு வந்தால் பசுவின் கோமியத்திலும் வெள்ளைக் குண்டுமணி இலை, வேலிப்பருத்தி இலை ஆகியவற்றை வகைக்கு 100 கிராம் வீதம் சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

அவரைக் கொட்டை (மொச்சைப் பயறு), பச்சரிசி, உளுந்தம்பருப்பு, கொள்ளு ஆகியவற்றை நன்றாக ஊறவைத்து, ஆட்டி உள்ளே உணவாகக் கொடுக்க வேண்டும்.

**(இராஜப்பா, தென்கனிக்கோட்டை, தருமபுரி)**

O மீன் கருவாட்டுத்தூள், பாய்கோரை, பெண்களின் சிக்கு முடி இவைகளைச் சேர்த்து புகைமூட்டம் செய்து புகை காட்ட வேண்டும். பின்பு குண்டு மணிக் கொடியை மாட்டின் கழுத்தைச் சுற்றி கட்டிவிட்டு வெற்றிலை, சீரகம், பெருங்காயம் ஆகியவற்றை அரைத்து 3 அல்லது 4 நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

O வெப்பாலை இலை, நொச்சி இலை, தும்பைஇலை, துளசி இலை ஒவ்வொன்றிலும் 50 கிராம் வீதம் எடுத்து உசிலம்பட்டை, வால்மிளகு, வலம்புரிக்காய், சுக்கு, மிளகு, பூண்டு, சீரகம் ஆகியவற்றில் 25 கிராம் வீதம் எடுத்து நன்றாக அரைத்து 3 வேளை உள்ளே கொடுக்க வேண்டும். மருந்து கொடுப்பதற்கு முன்பு முதல்



நாள் இரவு வேப்பெண்ணெயுடன் கோழிமுட்டை கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(சின்னு, கார்வாடி, திருச்சி)**

O சரக்கொன்னை இலை, வரகு புல் ஆகியவற்றில் அரை கிலோ வீதம் எடுத்து எரித்து புகை மூட்டம் போட்டு மாட்டுக்கு காட்ட வேண்டும்.

**(சுந்தரசாமி, முத்துக்கவுண்டனூர், கோயம்புத்தூர்)**

O கோழிமுட்டை 5 எண்ணம், கடலை எண்ணெய் 200 மி.லி. சாராயம் 200மி.லி. ஆகியவற்றை உள்ளே கொடுக்க வேண்டும். வேப்பமுத்து, கருவாட்டுத்தூள், காவாட்டம் புல் ஆகியவற்றை எரித்து புகைமூட்டம் செய்து வயிறு மற்றும் முகத்தில் படுமாறு காட்ட வேண்டும். தீவனமாக காய்ந்த தட்டை, வைக்கோல், பச்சரிசிக் கஞ்சி தரலாம். பசுந்தீவனம் கொடுக்கக்கூடாது.

**(நாராயணன், அன்னமங்கலம், பெரம்பலூர்)**

O பன்றி இரத்தத்தைத் தோய்த்த துணி, கோழி எச்சம், மனிதர் தலைமுடி, மஞ்சள்தூள் ஆகியவற்றை நெருப்பு தணலில் போட்டு அதிலிருந்து வரும் புகையை நோய் கண்ட மாடு நுகருமாறு செய்ய வேண்டும். குடிக்க வெந்நீர் தர வேண்டும். பச்சை புல் போடக்கூடாது.

**(ஜி.ராம்தாஸ், காந்திகிராமம், திண்டுக்கல்)**

## திமிரி காய்ச்சல்

### அறிகுறிகள்

செருமலுடன் வாயில் நுரையுடன் கூடிய நீர் வடியும்; அதிக மஞ்சள் நிறத்தில் சிறநீர்விடும் ; வறண்ட சாணம் போடும் ; முன்னங்கால்கள் சந்து ஆட்டம் கொடுக்கும்.

### வைத்திய முறைகள்

O கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, நறுக்குமூலம், கூர்வேல், கருஞ்சீரகம், ஓமம், வால்மிளகு, பெருங்காயம், வெற்றிலை, கொல்லங்கோவைக் கிழங்கு, குப்பைமேனி, கடலை அவரை (ஈசவிதைக் காய்) ஆகியவற்றில் வகைக்கு 50 கிராம் வீதம் எடுத்து இடித்து இளஞ்சூடான வெந்நீரில் கலக்கி ஒரு வேளை மட்டும் கொடுக்க வேண்டும்.

**குறிப்பு:** வைக்கோல், கேப்பைக்கூழ் அல்லது பச்சரிசிக்கஞ்சி மட்டும் ஒரு வாரத்திற்கு கொடுத்து வர வேண்டும்.

**( தா.நோவா. குப்பண்ணாபுரம், மானூர், திருநெல்வேலி)**

## ஜன்னி காய்ச்சல்

### அறிகுறிகள்

ஜன்னி கண்ட கால்நடைகள் கழுத்தை நீட்டாமல் மடக்கிக் கொண்டு அல்லது ஒருபுறமாய் சாய்த்துக் கொண்டு இருக்கும் ; நான்கு கால்களும் நடக்கமுடியாமல் இருக்கும் ; உடலில் நடுக்கம் இருக்கும். உலர்ந்த சாணம் அல்லது புழுக்கை போல் போடும். தீனி தின்னும், தண்ணீர் குடிக்கும், அசைபோடும்.



### வைத்தியமுறை

O வசம்பு, சுக்கு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை அரைத்து வேப்பெண்ணெயில் சேர்த்து கொதிக்க வைத்து அந்த எண்ணெயை உடம்பு முழுவதும் தேய்த்து விட வேண்டும் (அல்லது)

O சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றில் வகைக்கு 25 கிராம் வீதம் எடுத்து பெருங்காயம் 10 கிராம் சேர்த்து இடித்து சிறு நீரில் கலக்கி உள்ளே கொடுக்க வேண்டும்.

**குறிப்பு:** வேப்பம்பழ விதை, வேப்பமரப்பட்டை, வேப்பஈர்க்கு ஆகியவற்றுடன் தும்பை இலை, ஒவ்வா இலை (சிறுவாகா) ஆகியவற்றை கரி நெருப்பில் போட்டு புகை காட்ட வேண்டும்.

**(எஸ். மாரியம்மாள், கைலாசபுரம், மதுரை)**

O முடக்கத்தான் இலை சாறு அரை லிட்டருடன், வசம்பு, பெருங்காயம் ஆகியவற்றில் 20 கிராம் வீதம் சேர்த்து நன்றாகக் காய்ச்சி ஆறவிட்டு 250 மி.லி. கசாயத்தை உள்ளே குடிக்கக் கொடுக்க வேண்டும். மீதிச்சாற்றை ஒரு வெள்ளைத் துணியில் தொட்டு உடல் முழுவதும் சூடு பறக்க தேய்த்து விட வேண்டும்.

**(இரா. அழகர்சாமி, கோடாங்கிபட்டி, தேனி)**

## குளிர் காய்ச்சல்

O கூழாங்கற்களை ஈரமில்லாத தரையில் பரப்பி அதன் மீது வைக்கோல் போன்றவற்றை போட்டு எரிக்க வேண்டும். கற்கள் நன்றாக சூடாகியவுடன் அதன்மீது நீராகாரத் தண்ணீரில் நனைக்கப்பட்ட சாக்கு ஒன்றை போட வேண்டும். வாதமடக்கி

(தழுதாழை) இலையை அரை கிலோ அளவிற்கு எடுத்து இடித்து சூடாக்கப்பட்ட சாக்கின் மீது போட்டு பொட்டலமாகச் சுருட்டி கால்நடைகளின் உடல் முழுவதும் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் குளிரில் விறைத்துப்போன மாடு மீண்டும் நலமடையும்.

**(முத்துச்சேர்வை, கொரலம்பட்டி, கன்னிவாடி, திண்டுக்கல்)**

## மஞ்சள் காமாலை

O வண்ணான் அவுரி தழையை கால் கிலோ அளவு அரைத்து 10 மி.லி. மோரில் கலந்து தர வேண்டும். இதனை 3 நாட்கள் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(எ.இராஜா, வாசுதேவநல்லூர், திருநெல்வேலி)**

O மஞ்சள் கரிசலாங்கண்ணி, கரிசாலை, பொன்னாங்கண்ணி இலை ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து அரைத்து உள்ளே கொடுத்து வரவேண்டும். இதனை 7 –10 நாட்கள் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**( திருப்பதி ஆசான், கன்னியாகுமரி)**



# 14. பருவத்திற்கு வராமல், சினைபிடிக்காமல் இருத்தல் இனப்பெருக்க கால நோய்கள்

## அறிகுறிகள்

சண்டித்தனமாகக் காணப்படும்; பிறப்பு உறுப்பு வழியாகக் கெட்ட நாற்றம் வீசும். பருவத்திற்கு வராமலிருக்கும் சினை பிடிக்காமலிருக்கும்; சினைப்பிடித்தாலும் பின்னால் கருச்சிதைவு உண்டாகும். காளைகள் மாட்டில் விழாமல் இருக்கும்.

## காரணங்கள்

ஊட்டச்சத்து, தாது உப்புக்கள் குறைபாடுகள்; கர்ப்பப்பையில் நோய் கிருமிகள் இருப்பது; காளையின் விந்தணு குறைபாட்டினால் ; அதிக உஷ்ணத்தினால் ஏற்படும்.

## வைத்திய முறைகள்

O $2^{1/2}$ வயதாகியும் பருவம் வராமல் இருக்கும் கிடேரிக்கு முளைக்கட்டிய கொள்ளு அல்லது முளைகட்டியகொண்டை கடலை 200 கிராம் அளவு ஆட்டி ஒரு வாரத்திற்கு தொடர்ந்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

O ஆணை நெருஞ்சி தழை அரை கிலோ ஆட்டி வாரத்திற்கு ஒரு முறை என இரு வாரத்திற்கு (மொத்தம் இரண்டு தடவை) உள்ளுக்குள் ஊற்ற வேண்டும். இவ்வாறு கொடுத்து வந்தால் கர்ப்பப்பை வளர்ச்சியடைந்து சீக்கிரம் சினைப் பருவம் காணும். பசுக்கள் சினைப் பருவத்தை வெளிப்படுத்தும்போது, சினைக்குவிடும் முன்பு 100 மி.லி. வேப்ப எண்ணெய் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

சினைக்கு விட்டவுடன் மாட்டைக் கழுவி விட்டு ஈரக் கோணிச் சாக்கு கொண்டு போர்த்திட வேண்டும். வேப்ப எண்ணெய் கிருமிப் பூச்சிகளைக் கொன்று கருப்பையை சுத்தப்படுத்தும்.

அடுத்து சினைக்கு விட்ட பின்பு அப்பசுவிற்கு 2 முட்டைகள் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். அல்லது மலை வேப்பங்கொழுந்து 100 கிராம் அரைத்து நீரில் கலந்து அரை லிட்டர் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(ந. கோவிந்தன், செல்லியம்பாளையம், சேலம்)**

O முருங்கை இலையை 200 கிராம் எடுத்து அரைத்து அதனுடன் சிறிது உப்பு கலந்து நீர்சேர்த்து இரவில் கொடுக்க வேண்டும். இவ்வாறு சில நாட்கள் கொடுத்து வந்தால் மாடு பருவத்திற்கு வந்துவிடும். பின் கருத்தரிப்பு வந்து விடும். பின் கருத்தரிப்பு ஊசி போடலாம்.

**(குருசாமி, வில்லிசேரி, கோவில்பட்டி, விருதுநகர்)**

O பாசிப்பயறு, உளுந்தம்பயறு, காணப்பயறு, சுண்டல்கடலை ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து ஊறல் போட்டு முளைக்கட்ட வைத்து குறைந்தது 7 நாட்கள் வரை தொடர்ந்து கொடுத்தால் மாட்டிற்கு முடை அடிக்கும். அப்போது சினைக்கு போட்டால் சினைபிடித்துவிடும்.

சினைபிடித்து கரு கலையாமலிருக்க கரு வாழைக் கிழங்குச் சாறு எடுத்து மாதம் ஒரு தரம் தரவேண்டும். (நாள் ஒன்றுக்கு 2 வேளையும் தரலாம்) சினைபிடித்த 4 வது மாதத்திலிருந்து மாதந்தோறும் கொடுத்து வந்தால் கரு கலையாமலிருக்கும்.

**(துருகப்பா, சௌலங்கா, கர்நாடகா)**



O அரைகிலோ வேப்பம் பிண்ணாக்கை ஊறல் போட்டு மறுநாள் வடிகட்டி மாட்டுக்கு உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இதை 2 அல்லது 3 நாட்களுக்குக் கடைப்பிடிக்கலாம். இதனால் கர்ப்பபை நோய் குணமாகி பின் சினைக்கு போட்டால் சினைதங்கும்.

**(ராமு, நல்லமநாயக்கன்பட்டி, மணப்பாறை, திருச்சி)**

O முள் நீக்கிய சோற்றுக்கற்றாழையின் இரண்டு மடல்களை காலை தீவனத்திற்கு முன்பு 4 நாட்கள் வரை தொடாந்து கொடுக்க வேண்டும். பின்பு இரண்டு கைப்பிடியளவு ஆனை நெருஞ்சி இலையுடன், 10 கிராம் சீரகம், 100 கிராம் சிறிய வெங்காயம் ஆகியவற்றை சேர்த்து நன்றாக இடித்து அத்துடன் முளைக்கட்டிய சுண்டக் கடலை கால்படி சேர்த்து 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்க வேண்டும். மாடு முடை அடிக்கும் நாளில் 100 மி.லி. வேப்பெண்ணெய்யை உள்ளுக்குள் கொடுத்து இரண்டு மணி நேரம் கழித்து காளைக்குப் போட வேண்டும்.

**( முத்துமணி, எஸ்.பாப்பிநாயக்கன்பட்டி, எழுமலை, மதுரை)**

O பொன்னாவரங்கொழுந்து 100 கிராம், பச்சை மஞ்சள் கிழங்கு 4, சோத்து உப்பு கால்படி சேர்த்து அரைத்து, காய்ச்சாத பசுமாட்டுப்பால் கால் லிட்டர் கலந்து உள்ளுக்குள் ஒரு நாள் கொடுக்க வேண்டும்.

**(குப்பையா கவுண்டர், தேன்கனிக்கோட்டை, தருமபுரி)**

O எலுமிச்சை இலை 1 கிலோ அரைத்து இத்துடன் குதிரை சாணம் கைப்பிடியளவு சேர்த்து ஒரு லிட்டர் குளிர்ந்த நீரில் பிசைந்து கிடைக்கும் வழவழப்பான கஞ்சி போன்ற நீரை வடிகட்டி அதனுடன் சுக்கு 100 கிராம், சதகுப்பை 100 கிராம், ஓமம் 100 கிராம் இடித்து

பொடி செய்து சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த கலவையை அமாவாசை அன்று அல்லது மாட்டை சினைக்குப் போட்டு வந்த பின்பு வாயில் ஊற்ற வேண்டும். இதனால் கருதங்கி எளிதில் சினை பிடிக்கும்.

**(குமார், இ.கோவில்பட்டி, திண்டுக்கல்)**

O தென்னம்பாளை, சிறுநெருஞ்சி, வேப்பெண்ணெய் ஆகியவற்றை அரைத்து கா்ப்பப்பை வளர்ச்சி அடைவதற்குக் கொடுக்கவேண்டும்.

**(ஜெயராமன், செய்யாங்குளம், விழுப்புரம்)**

O நீர்குமுளி இலை (அரிவாள் தாங்கி இலை) ஒரு கைப்பிடி அளவு, வெங்காயம் 50 கிராம், சீரகம் 10 கிராம் இவற்றை அரைத்து ஒரு முறை கொடுக்கவேண்டும். சோற்றுக்கற்றாழை 5 நாட்கள் கொடுக்க வேண்டும். தினமும் மாட்டைக் குளிப்பாட்டவேண்டும்.

**(செல்வராஜ், வண்டாரி, சாப்டூர்,மதுரை)**

O ஆடு திண்ணாபாளை இலை 100 கிராமுடன் முற்றிய தேங்காய் ஒன்று திருகி கலந்து, காலை வெறும் வயிற்றில் 5 நாட்களுக்கு புகட்ட வேண்டும்.

**(வெளியப்பான், காமயகவுண்டன் பட்டி, தேனி)**

O பனங்கருப்பட்டி கால் கிலோ, வெங்காயம் கால் கிலோ, சீரகம் 150 கிராம், கத்தக்கொடி இலை 4 கைப்பிடி ஆகியவற்றை உரலில் ஆட்டி உருண்டை செய்து உள்ளே கொடுக்க வேண்டும். இதனை தொடர்ந்து 3 நாட்களுக்கு காலை வேளையில் உள்ளுக்குக் கொடுத்து வர வேண்டும்.

**(பெரிய வேலுச்சாமி, பழனிகவுண்டன் வலசு, தாராபுரம், ஈரோடு)**



O மருதாணி இலை சாறு 100 மி.லி., மலைவேம்பு சாறு 100 மி.லி., வேப்பெண்ணெய் 100 மி.லி. இவற்றைக் கலந்த கலவையில் தோய்த்த இலவம் பஞ்சை (100 கிராம் அளவு) உள்ளே ஒரு நாள் கொடுக்க வேண்டும்.

**(மாரியப்ப கோனார், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

O செம்பிரண்டை கிழங்கு, தண்டு, இலை ஆகியவற்றை சிறு துண்டுகளாக வெட்டி நீருடன் சேர்த்து காய்ச்சி வடித்து 200 மி.லி. கசாயம் புகட்டி கருப்பையை சுத்தம் செய்து பின்பு கருவூட்டம் செய்தால் சினை தங்கும்.

**(சாலை வெங்கடேசன், நன்னாரி கிராமம், வேலூர்)**

O தலைச்சுருளி இலைச்சாறு, கொள்ளு மாவு, வேப்பெண்ணெய், கலந்து தர மாடு பருவத்திற்கு வரும்.

**(மாரியப்பன், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

O சோற்றுக் கற்றாழை 2 மடல், பிரண்டை, கொல்லங்கோவைக் கிழங்கு 1, சிறியாநங்கை கைப்பிடி இடித்து (நீராகாரத் தண்ணீரில்) உருட்டி 3 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(வெள்ளை,சல்லிக் கோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O குப்பை மேனி 3 கைபிடி (200 கிராம்) எடுத்து அரைத்து உள்ளே தர வேண்டும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து உள்ளுக்குக் கொடுத்து வரவேண்டும்.

**( ராமசாமி, ஒரத்தநாடு, தஞ்சாவூர்)**

O அரைகிலோ ஆணை நெருஞ்சி செடியை 1 லிட்டர் காடிநீரில் அலம்பினால் எண்ணெய் போல் வரும். ஆந்த நீரை மாடு பருவத்திற்கு வருவதற்கு 3 நாட்களுக்கு முன்பிருந்தே உள்ளே கொடுத்து வரவேண்டும். பின்பு முடை அடித்ததும் சினைக்குப் போட வேண்டும்.

O சூரத்தவரை இலை 10 கிராம், சீரகம் 50 கிராம் , சிறுவெங்காயம் 100 கிராம் ஆகியவற்றை அரைத்து தினமும் ஒரு வேளை 3 நாட்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O சினைக்கு போட்ட பின் கருக்கலையாமல் இருப்பதற்கு மாடுகளுக்கு தினமும் கருவேப்பிலை இலை 100 கிராம் அளவு தின்னக் கொடுக்க வேண்டும். இதனை குறைந்த பட்சம் 10 நாட்கள் கடைபிடித்து வரவேண்டும்.

**(ஜி.வி.ஹெக்டே, திப்டூர், கர்நாடகா)**

O அமுக்கிராக் கிழங்கு தூளை 25 கிராம் எடுத்து ஒரு பூவன் பழம் மற்றும் ஒரு கோழி முட்டையுடன் கலந்து 3–5 நாட்கள் கொடுக்க மாடு விரைவில் முடை அடிக்கும். இம்முறைக்கு பதிலாக 100 கிராம் அமுக்கிராக் கிழங்கு தூளை 50மி.லி வெள்ளாட்டு பாலுடன் சேர்த்து காலை வேளையில் வெறும் வயிற்றில் 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்க வேண்டும். இத்துடன் 15 நாளைக்கு ஒரு தடைவ 20 கிராம் அளவு பூனைக காலி விதைகளை பொடி செய்து கொடுத்து வந்தால் கர்ப்பப் பையிலுள்ள பூச்சிகள் சாகும்.

**(கம்சகவுண்டர், ரெட்டிபாளையம், ஆரணி, திருவண்ணாமலை)**



O கிடேரிகள் பருவத்திற்கு வர பப்பாளி பச்சைக் காயின் சிறுதுண்டுகளை 4–5 நாட்களுக்கு தீவனத்தில் உள்ளுக்கு கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு சமீபத்தில் பறித்த குருத்துக் கற்றாழை ஒரு மடலின் சதைப்பாகத்தை 3 நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். மற்றும் அடுத்த மூன்று வாரங்களுக்கு 200 கிராம் முளை கட்டிய கடலை கொடுக்க வேண்டும்.

O கர்ப்பப்பையில் புண்ணாகி இருந்தால் வேப்பம் பட்டை 250 கிராம் எடுத்து கசாயம் தயாரித்து ஒரு மாதம் கொடுத்து வர வேண்டும். சினைப்பிடிக்க கிப்யோசோட்டம், காக்குலஸ் (cocculus), ஆரம்–மூர்,நேட் (Arum–mur.nat) டும், கர்ப்பப்பையில் உள்ள கட்டிக்க அபிஸ் மெல்லிபிகா (Apis.mellifica) போன்ற ஹோமியோபதி மருந்தை கொடுக்கலாம்.

**(நீலகண்டன், வண்டியூர், மதுரை)**

## காளை இனவிருத்தி செய்யாமலிருந்தால் (சினைக்கு விழ, மாட்டின்மேல் ஏற)

பொலிகாளைகள் இரண்டு அரை முதல் மூன்று வருடங்கள் ஆகியும் இனப்பெருக்கம் செய்ய விருப்பமின்றி காணப்படும். இதற்கு அரசமர அல்லது ஆலமர பழங்களை காய வைத்து இரண்டு கைப்பிடி அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். இத்துடன் பேரீச்சம் பழம் 4, தேங்காய்1முடி, வாழைப்பழம் 2 சேர்த்து நீர் விட்டு ஆட்டி உருண்டை செய்து அல்லது குடிநீரில் கலந்து கொடுக்க வேண்டும். இதனை ஒரு வாரம் கடைபிடித்துவர வேண்டும்.

**(செல்லபாண்டி நாயக்கர், அருளாச்சி, திருநெல்வேலி)**

# 15. இளங்கொடி விழாதிருத்தல்

## அறிகுறிகள்

பொதுவாக பசு கன்று ஈன்ற 3 முதல் 5 மணி நேரத்திற்கு நஞ்சுக்கொடி வெளியேற வேண்டும். 6 மணி நேரமாகியும் நஞ்சுக் கொடி வெளியேறாமலிருந்தால் கால்களை உதைத்துக் கொண்டு திணறிக் கொண்டிருக்கும்.

## காரணங்கள்

வயதான பசுக்களில் இது அதிகமாகக் காணப்படும், உடல் சத்து குறைவின் காரணமாகவும், கிருமிகள் பாதிப்பி னாலும், ஏற்படலாம்.

## வைத்திய முறைகள்

O எள் 250 கிராம், கருப்பட்டி 400 கிராம் ஆகியவற்றை அரைத்து ஒரே வேளையில் உள்ளுக்குக் கொடுத்தால் 2 மணி நேரத்திற்குள் நஞ்சுக்கொடி வெளியேறிவிடும்.

**(ஜோஸ்பின் அமலாராணி, உடையார்பட்டி, திருச்சி)**

O மலைவேம்பு இலை 200 கிராம், மாங்கொட்டை பருப்பு 100 கிராம் இரண்டையும் அரைத்து நீருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(அசோக்குண்டே, பிள்ளையார்குப்பம், பாண்டிச்சேரி)**



O கரும்புச் சோகை 1 கிலோ எடுத்து அரைத்து நீர்விட்டு கலந்து 250 மி.லி. அளவு சாறு உள்ளே கொடுத்தால் கன்று ஈன்ற 2 மணி நேரத்திற்குள் இளங்கொடி வெளியேறும்.

**(பாடுதி, தாஹோத், குஜராத்)**

O ஒரு படி கம்பு மாவை அரை கிலோ வெல்லத்துடன் கலந்து நீர்விட்டு காய்ச்சி கஞ்சி மாவு போல் கொடுக்கலாம். அல்லது அரை கிலோ வெண்டைக் காயும், 200 கிராம் எள்ளும், 200 கிராம் வெல்லமும் சேர்த்து இடித்து 1 லிட்டர் நீரில் கலந்தும் கொடுக்கலாம்.

**(கால்நடை பராமரிப்பத்துறை செய்தி குறிப்பு – 1954 சென்னை)**

O இரண்டு அல்லது மூன்று வெள்ளைக் குண்டுமணி விதைகளை அரைத்து வேகவைத்து கத்தரிக்காய் அரை கிலோ உடன் கலந்து உள்ளேகொடுக்க வேண்டும்.

**(துதாபாய், அடேசர்கிராமம், கட்ச், குஜராத்)**

O அரசமர இலை சுட்டு இடித்து 50 கிராமுடன், வெல்லம் உள்ளே கொடுக்க வேண்டும்.

**(இரா. ஆழகர்சாமி, கோடாங்கிபட்டி, தேனி)**

O வெள்ளை காக்கநெத்தி வேர் 200 கிராம் நன்றாக அரைத்து, நீர் அரை லிட்டர் வரை சேர்த்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(க. அய்யாவு, நத்தம், திண்டுக்கல்)**

O மூங்கில் இலை 3 கைப்பிடியளவு பச்சையாக தின்னக் கொடுக்க வேண்டும்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O செம்பிரண்டை கிழங்கு 250 கிராம் வரை அரைத்து உள்ளே கொடுக்கவேண்டும்.

**(ராஜப்பா, எருமத்தணப்பள்ளி, தென்கணிக்கோட்டை, தருமபுரி)**

O சந்தன இலை 100 கிராம், வெல்லம் அரை கிலோ , மஞ்சள் 100 கிராம், வசம்பு 10 கிராம், வெங்காயம் 100 கிராம் ஆகியவற்றை நன்றாக அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(சீனி, இராமசாமிபுரம், அருப்புக்கோட்டை, விருதுநகர்)**

O குமழா மர இலை 100 கிராம், பனை வெல்லம் 100 கிராம், கேழ்வரகு மாவு 100 கிராம் ஆகியவற்றை நன்றாக அரைத்து நீராகாரத் தண்ணீர் 1 லிட்டருடன் கலந்து உள்ளே கொடுக்க 11வேண்டும்.

**(மா.காளியப்பன், வ.புதுப்பட்டி, வத்திராயிருப்பு, விருதுநகர்)**

O ஆல்மர இலையை எரித்த சாம்பல் 100 கிராம், வெல்லம், 100 கிராம் ஆகியவற்றை அரை லிட்டர் நீருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(பால்ச்சாமி, வடக்கத்தியானபட்டி, சாப்டூர், மதுரை)**

O நாட்டு உரலிப் பச்சிலை 200 கிராம், எள்ளுச்செடி 200 கிராம், ஆகியவற்றை இடித்து நீராகாரத் தண்ணீருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**



O உசிலை இலைப்பொடி 50 கிராம் எடுத்து நீராகாரத் தண்ணீர் அல்லது மோருடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(வெளியப்பன், காயமயவுண்டன்பட்டி, தேனி)**

O வேரில்லாகொத்தான் (பேய்கொடி) 250 கிராம், வெண்டை செடி 200 கிராம் ஆகியவற்றை இடித்து உள்ளே கொடுக்க வேண்டும்.

(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)

O வெள்ளை காக்கரட்டான் வேர் 10 கிராம், மிளகு 10 கிராம், சேர்த்து அரைத்து வெந்நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**

## கர்ப்பப்பையில் கன்று இறந்தால்

O எள்ளுத் தண்டு அரை கிலோவை கருக்கி விளக்கெண்ணெய் 200 மி.லி.யில் கலந்து நீராகாரத் தண்ணீர் அரை லிட்டருடன் சேர்த்து உள்ளே புகட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் இறந்த கன்று வெளியேறிவிடும்.

**(இராஜேந்திரன், சொக்கதேவன்பட்டி, பெரியகுளம்)**

O எள்ளுச்செடி 10, கருப்பட்டி, 250 கிராம் ஆகியவற்றை இடித்து கர்ப்பையினுள் இறந்த கன்று வெளியேறும் வரை கொடுக்க வேண்டும்.


**(பூமி ராஜ், முக்குடி, அம்பலத்தடி, சிவகங்கை)**

# 16.கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்

கன்று ஈனும் முன்பும், கன்று ஈன்ற பின்பும் கர்ப்பப்பை வெளியில் வரலாம்.

## முதலுதவி

கர்ப்பப்பையில் ஒட்டியுள்ள மண், புழுதியை சீனி கலந்த நீர் கொண்டு கழுவிவிட வேண்டும். பின்னர் ஒரு வாழை இலை கொண்டு கர்ப்பப்பையை தாங்கி ஏந்தி தூக்கி பிடித்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நீர் கட்டியிருந்தாலும் வடிந்துவிடும். பின் மெதுவாக கர்ப்பப்பை தானாகவே உள்ளே சென்றுவிடும்.





## வைத்திய முறைகள்

O இந்நிலையில் உள்ள மாடுகளை பின் பகுதி (இடுப்புப்பகுதி) சற்று உயர்வாகவும், நெஞ்சுப் பகுதி சற்று தாழ்வாக இருக்குமாறு கட்டவேண்டும்.

பின் வெளித்தள்ளப்பட்ட கருப்பையை கையால் உள்ளே தள்ளி உரிய இடத்தில் வைக்க வேண்டும்.

கட்டுக் கொடியை 2 அங்குல வளையமாகச் சுற்றி கருப்பை வாயிலில் வைத்து வளையத்தின் இரு பக்கங்களிலும் நூல் கட்டி வெளியே எடுக்கும் வகையில் தொங்க விட வேண்டும்.

கர்ப்பப்பையின் அறையில் வெளிப்புறத்தில் மூங்கில் தப்பைகளால் கிட்டிபோட்டு வாலுடன் சேர்த்து கட்டிவிட வேண்டும். மூன்று நாட்கள் சென்றபின் தப்பை கிட்டியை கழட்டிவிட்டு கட்டுக்கொடி வளையத்தை இருபுறமும் தொங்கிக்கொண்டுள்ள நூலை எடுத்து மெதுவாக அகற்றி விட வேண்டும்.

உள்மருந்தாக தொட்டால்சிணுங்கி (நின்றால்வாடி/ உள்ளுசிணுங்கி) சமூலம் 2 கைப்பிடி அளவு எடுத்து அரைத்து வெள்ளாட்டுப் பால் 200 மி.லி. யுடன் கலந்து காலை மாலை மற்றும் மறுநாள் காலை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி,தருமபுரி)**

O வாழைப்பழத்தை 25 மி.லி. விளக்கெண்ணெயுடன் பிசைந்து உள்ளே கொடுத்துவர உறுப்புத் தள்ளுதல் அல்லது அடித்தள்ளுதல் விலகும்.

**(ஜேக்கப், நாசரேத் தூத்துக்குடி)**

# 17. சிறுநீர் பிரியாதிருத்தல் மற்றும் சிறுநீரகம் சாந்த பிரச்சனைகள்

## அறிகுறிகள்

சிறுநீர் பிரியாமல் மிகவும் வேதனைப்படும்; சிறுநீர் சிவந்த நிறத்தில் வெங்கடுப்பாக ( காப்பி நிறம்) வெளியாகும்.

குறிப்பாக காளை மாடுகளுக்கும், கிடா ஆடுகளுக்கும் இந்த கோளாறு அதிகம் காணப்படும். இந்நோய் கண்ட கால் நடைகள் அடிக்கடி எழுந்தும், உட்காருவதுமாக, அமைதியின்றி துன்பப்படும்.

ஓர் இடத்தில் இருக்காது. வாயில் துர்நாற்றம் வீசும்; இதை 4–5 நாட்கள் கவனிக்காமல் விட்டால் உடம்பு சூடு அதிகரிக்கும்.

## காரணங்கள்

சிறுநீர் பையில் கரையாத சிறுகற்கள் (கால்சியம், மக்னீசியம், சிலிகான் போன்றவை) சேர்ந்து சிறுநீர் பையில் அடைத்துக் கொள்வதாலும்; அதிக உஷ்ணம் காரணமாக சிறுநீரகக் குழாய், சிறுநீர்பை ஒவ்வாமை ஏற்படுவதாலும்; விதை உறை வீங்குவதாலும், அடிபடுவதாலும், சிறு நீரகம் சார்ந்த வியாதிகளாலும் மூத்திரக்கோளாறு ஏற்படுகிறது. காளைகளுக்கு ஆண்மை நீக்கம் (முடை அடித்தல்) செய்யும் போது ஏற்படும் தவறுதலாலும் இப்பிரச்சினை ஏற்படக்கூடும்.

## வைத்தியமுறைகள்

O முருங்கை இலை 1 கிலோ அளவு எடுத்து அரைத்து கால்நடைகளுக்கு கொடுத்தால் சிறுநீர் நன்றாகப் பிரிந்து வெளியேறும்.



O ஊமத்தை இலையைக் காயவைத்துத் தூள்செய்து 100 கிராம் எடுத்து தேனில் கலந்து கொடுக்க வேண்டும்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O கொத்தமல்லி 10 கிராம், வால்மிளகு 10 கிராம் பொடி செய்து 100 மி.லி. நல்லெண்ணெய் கலந்து கொடுக்கவேண்டும்.

**(வி.ஆர்.ஐயப்பன்,ரெட்டியப்பட்டி, சுக்காம்பட்டி திண்டுக்கல்)**

O இரத்தம் கலந்த சிறுநீர் பிரிந்தால் வில்வ இலை 200 கிராம், பழைய புளி 200 கிராம், சின்னவெங்காயம் 300 கிராம் ஆகிய மூன்றையும் நல்லெண்ணெய் 100 மி.லி. சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும். இவற்றை ஒரு லிட்டர் நீராகார தண்ணீரில் நன்கு கலக்கி மாட்டிற்கு உள்ளே கொடுக்கவேண்டும்.

**(சீனி நாயக்கர், ராமசாமியாபுரம், அருப்புக்கோட்டை, விருதுநகர்)**

O தென்னம்பாளையிலிருந்து உதிர்ந்த குரும்பை 2, சீரகம் 25 கிராம் இவைகளை நன்கு இடித்து நீர்விட்டு கலந்து உள்ளே ஊற்ற வேண்டும்.

**(வீரையா, மேட்டுப்பட்டி, சிவகங்கை)**

O தொட்டாற் சிணுங்கி செடி 100 கிராம் எடுத்து 1 லிட்டர் நீருடன் காய்ச்சி வடித்த கசாயம் 500 மி.லி. உள்ளே கொடுக்க வேண்டும்.

**(கிரீத் பட்டேல், அகமதாபாத்)**

O வெள்ளைப் பூக்களைக்கொண்ட காரணை வேர் (சாரநெத்தி) ஒரு கிலோ அளவிற்கு எடுத்துக்கொண்டு அவற்றை 3 லிட்டர் தண்ணீரில் ஒரு லிட்டர் அளவிற்கு வற்றும் வரை கொதிக்க வைக்கவும். பின்பு இதை வடித்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு நாளொன்றக்கு 100 மி.லி. வீதம் 2 அல்லது 3 நாட்களுக்கு உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(கணேஷ்பாய், குஜராத்)**

O நெருஞ்சி காய் 10 கிராம், சாரநெத்தி தழை 5 கிராம், சமையல் சோடா உப்பு 4 கிராம், பாவட்டைஇலை, காய் 5 கிராம், மாவிலங்கம் இலை, பட்டை 10கிராம் இவைகளை சேர்த்து காய்ச்சிய கசாயத்தை மாடுகளுக்கு 200 மி.லி. அளவும் கன்றுகளுக்கு மற்றும் ஆடுகளுக்கு 100 மி.லி. அளவும் ஒரு நாளைக்கு 2 வேளையாக 5 நாட்கள் உள்ளுக்குள் கொடுத்து வர வேண்டும்.

**(கம்போடியா நாட்டு பாரம்பரிய வைத்தியம்)**

O படிகாரத்துாள் 10 கிராம், கருவேலம் பட்டை 10 கிராம் ஆகியவற்றை நன்றாக வறுத்து இடித்து வெல்லம் அல்லது மோருடன் கலந்து காலை மாலை என 3 வேளை கொடுக்கவேண்டும்.

**(பழனிவேலு,அரசங்குடி,திருச்சி)**

O குங்குமப் பூ 5 கிராம், சதகுப்பை 5 கிராம் ஆகியவற்றை அரைத்து வெள்ளாட்டுப்பால் 100 மி.லி. யுடன் கலந்து காலை மாலை இரண்டு வேளைக்குக் கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**



O நெருஞ்சி இலை, சாரணை இலை, சோற்றுப்பு, பாவட்டை இலை, காய், மாவிலங்கம் இலை, பட்டை ஆகியவற்றை வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து இடித்து 2 லிட்டர் நீருடன் சேர்த்து 1 லிட்டராக வற்றும்படி காய்ச்சி வடிக்க வேண்டும். இக்கஷாயத்தை மாடுகளுக்கு 200 மி.லி. வீதமும் கன்றுகளுக்கு 100 மி.லி. வீதமும் காலை மாலை என 5 நாட்கள் வரைதொடாந்து கொடுக்க வேண்டும்

(அல்லது)

O நரிவிளாம்பழம் (நாய்கொட்டை) 4 எண்ணம் எடுத்து ஒரு லிட்டர் நீரில் போட்டு நன்றாக வேகவைத்து வடித்து நாளொன்றுக்கு 1 வேளை வீதம் 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

# 18. கண் நோய்கள்

## அறிகுறிகள்

கண்ணில் நீர் வடியும்; கண்சிவந்து இருக்கும் ; கண்ணில் வெள்ளை விழும் கண்வீக்கமாகக் காணப்படும்.

## காரணங்கள்

காற்றின் தூசியினாலோ, கண்ணில் குச்சி குத்தினால், பூச்சி தாக்கினால், விஷக்கடியினால் எற்படும் அரிப்பபால், மரத்தில் தேய்த்துக்கொள்வதால், அடிபட்டால் மற்றும் பசுந்தீவனக் குறைவினால் ஏற்படும்.

## வைத்திய முறைகள்

O கண் அதிகமாக சிவந்து இருந்தால், கண் வீக்கம் அதிகமாகக் காணப்படும். இதற்கு வெள்ளைத் தைவேளை ஒரு கைபிடி, நல்ல மிளகு ஒன்பது, இரண்டையும் சேர்த்து அரைத்துத் துணியில் வைத்து கண்ணில் பிழிந்துவிட வேண்டும். ஒரு வேளை மட்டும் பிழிந்து விட்டால் போதுமானது. குணப்படவில்லை என்றால் இரண்டாவது தினம் ஒரு வேளை கொடுத்தால் முற்றிலும் கண் குணமாகிவிடும்.

**( நோவா, குப்பனாபுரம், மானூர், திருநெல்வேலி)**

O கண்ணில் பீளை கட்டும், கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வடியும். இதற்கு நந்தியாவட்டப்பூ 10, தும்பை பூ 20, கிராம்பு 5 கிராம் எடுத்து இடித்துத் துணி மூலம் சாற்றை வடிகட்டி கண்ணில் விட்டால் குணமாகும்.

**(நவநீதகிருஷ்ணன், உத்திமேரூர், காஞ்சிபுரம்)**



O மாட்டை சாட்டை கம்பு கொண்டு அடித்துவிடும் சமயம் அல்லது குச்சி குத்திக்கண்ணில் காயம்பட்டு வெள்ளை விழுந்துவிட்டால் மூக்கனசாரநத்தி இலை கைப்பிடி அளவு எடுத்து 10 மிளகு சேர்த்து 3 வேளை கண்ணில் பிழிந்து விட வேண்டும். வெள்ளை அதிகமாய் இருந்தால் இத்துடன் வெங்காயம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**(செ. முனியாண்டி, நல்லதாதுநாயக்கன்பட்டி, மதுரை)**

O ஒரு கை அளவு தை வேளை இலையுடன் சிறிது உப்புகல்லும் சேர்த்து இடித்து சாறு எடுத்து பின் வடிகட்டி அதிலிருந்து 4 சொட்டு கண்ணில் விட இந்நோய் குணமாகும். 3 தடவை இது போல் 4 சொட்டு கண்ணில் விட வேண்டும்.

**(தி. லெட்சுமணன், குருவார்பட்டி, விளாத்திகுளம், தூத்துக்குடி)**

## கண்ணில் வெள்ளைவிழுதல்

O வேப்பங்கொழுந்து மென்று சாறுவிட வேண்டும்.பின் உப்புக்கலந்த மோரை வாயில் வைத்துக் கொப்பளித்து மாட்டுக்கண்ணிற்குள் விடவேண்டும்.

**(திருப்பதி, வேப்பம்பட்டி, பேரையூர், மதுரை)**

O சிறுகீரைத் தண்டைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேன் விட்டுக் குழப்பிக் கண்ணில் இட்டால் பூ(வெள்ளை) மறையும்.

O ராமர்சுள்ளி முள்ளித் தழையை (Acanthus ilicifolius) 20 இலைகளுடன் 10 மிளகு சேர்த்து விழுதாக அரைத்துக் கொண்டு கையில் ஒரு துணியில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன்பு

வாயில் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு போட்டு உமிழ் நீருடன் மென்ற சிவப்புக் கலவையை அவ்விழுதில் துப்பவேண்டும். பின்னர் அத்துணியை முடிந்த அச்சாற்றை மாட்டின் கண்ணில் பிழிய வேண்டும். ராமர் சுள்ளி முள்ளிச்செடியானது முட்களைக் கொண்டதாகும். இது வெள்ளைக் கலரில் பூ பூக்கும்.

**(முத்துச் சேர்வை, கொரலம்பட்டி, கன்னிவாடி, திண்டுக்கல்)**

O முருங்கை சாறு, கீழாநெல்லி சாறு இரண்டையும் மூன்று தினங்களுக்கு கண்ணுக்குள் விடவேண்டும்.

**(இராமு, இலுப்பக்குடி, சிவகங்கை)**

O சிறு குறிஞ்சான் இலை சாறு 2 லிருந்து 4 சொட்டுக்கள் வரை கண்ணில் விட வேண்டும்.

**(சின்னதம்பி, அலங்கம்பட்டி, மேலூர், மதுரை)**

## மாடுகளுக்கு கண் பார்வை மங்கினால்

O வண்டி இழுக்கும் மாடுகளுக்கு இரவில் கண் தெரியாமல் போவதுண்டு. இதற்கு, தினமும் அகத்திகீரையும் வெல்லமும் தீவனமாகக் கொடுத்துப் பார்வை பெறச்செய்யலாம்.

**(அருணாச்சலம் எழுதிய காய்கறித் தோட்டம் (1945) புத்தகம்)**

## கண் கலங்கியிருந்தால்

O பொன் தகரை, கொட்டக்கொழுந்து ( ஆமணக்கு கொழுந்து) கோவை தழை, சுக்கு, ஆணாந்தழை போன்ற தழைகளை



ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்து அரைத்து செம்மறி ஆட்டு பாலில் கலந்து கண்ணிற்குள் 3-4 சொட்டு விட வேண்டும்.

**(பாலன், தரகம்பட்டி, கரூர்)**

O சுள்ளித் தழை, விழும்பித்தழை, அம்மான்பச்சரிசி ஆகியவற்றை கசக்கி தாய்ப்பாளில் கலந்து துணியில் பிழிந்து மூன்று சொட்டுவிடவேண்டும்.

**(சுப்பையா, மோதுபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்)**

O சிறுதும்பை இலை 20 எண்ணிக்கை 2 மிளகு போட்டு இடித்து வெள்ளை துணியில் பிழிந்து கண்ணில் சாறுவிட பூ மாறும், மூன்று நாள் காலையில் கண்ணில் விட வேண்டும்.

**(வெள்ளை, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O கோவை இலைச்சாற்றில் உப்பு கலந்து காலை மாலை கண்ணில் விட வேண்டும். பின்னர் வன முருங்கை இலை ஒரு கைப்பிடி அளவு வெங்காயம் சேர்த்து அரைத்து கண்ணில் சாறு பிழிந்து விட வேண்டும். பின்பு 3 நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் கண்ணில் சாறு விட வேண்டும்.

**(கருப்பையா, கீழதானியம், மானாமதுரை, சிவகங்கை)**

O வெற்றிலை 2 எண்ணிக்கை, புகையிலை சிறிது, பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து வாயில் போட்டு மென்று இரண்டு வேளை பாதிக்கப்பட்ட கண்ணில் துப்ப சரியாகும்.

**(வெள்ளை,சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O கருவிழியில் வெண்புள்ளிக்கு கோவை இலையை சிறிது உப்புடன் கலந்து கண்ணில் பிழிந்துவிடகுணமாகும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**

O சிறிதளவு ஆமணக்கு கொழுந்து, சிறிதளவு சீரகம், வெங்காயம், சிறிதளவு மிளகு சேர்த்து தட்டி கண்ணில் பிழிந்து விட வேண்டும் (அல்லது) சிறிதளவு ஊமத்தை இலையைத்தட்டி ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து ஒரு முறை மட்டும் கண்ணில் பிழிந்து விடவேண்டும்.

**(ஆறுமுகம், எழுவாணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O சிறிது உப்புக் கல்லுடன் சத்தி சாரணை அல்லது பெருமருந்து கொடியை (கருடக்கொடி) கசக்கி கண்ணில் சொட்டு விட வேண்டும்.

**(சாலை வெங்கடேசன், நன்னாரி கிராமம், வேலூர்)**

O கோவை இலை சிறிது எடுத்து இத்துடன் சோற்று கல் உப்பு சேர்த்து கசக்கி துணியில் வைத்து பிழிந்து கண்ணில் விட வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு வேளையாக 3 நாட்கள் விட வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O நந்தியாவட்டை பூவை கசக்கி துணியில் வைத்து கண்ணில் பிழிந்துவிட வேண்டும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**



O ஆரம்பகட்ட நீர் வடிதலுக்கு சில நாட்கள் 'கலிஹைட்ரோசியம்' (kali Hudrocium 200) ம் என்ற மருந்தை ஒரு நாளைக்கு மும்முறையாக நான்கு நாட்கள் கொடுக்க வேண்டும். பின்பு அர்ஜென்டம் நிட் (Argentum nit 30c) என்ற மருந்தை ஒரு நாளைக்கு மும்முறையாக ஒரு வாரம் கொடுக்க நீர் வருவது நின்றுவிடும். பின் சைலிசியா 200சி (silicea 200c)என்ற மருந்தை ஒரு நாளைக்கு ஒரு தடவை வீதம் கொடுத்து வர கண்ணில் பூ விழுந்து முற்றிலும் மறைந்துவிடும், காயம்பட்ட திசுக்களை சைலிசியா உடம்போடு மீண்டும் ஈர்த்துக்கொள்ளும்.

**(ரோஸ்பாய் மலீக்,ரொஹா,மகாராஷ்டிரா)**

# 19. காதுநோய்


## அறிகுறிகள்

காதின் அடிப்பாகம் வீங்கி இருக்கும் ; காதில் துர்நாற்றம் வீசும்; சீழ் போன்ற திரவம் வடியும் ; சிறுகட்டிகள் காணப்படலாம்.

## வைத்தியமுறை

O மருள் தண்டை பிடுங்கி வந்து விளக்கெண்ணெய் தடவி எண்ணெய் தீபத்தின் அனலில் காட்டி பிழிந்து வரும் சாற்றை 5 சொட்டுகள் வீதம் காலை மாலை 3 நாட்கள் காதிற்குள் விட வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**







# 20. எலும்பு முறிவு

## காரணங்கள்

கீழே விழுவதால், அதிக பாரம் ஏற்றிச் செல்வதாலும், விபத்தினாலும், எலும்பு முறிவு ஏற்படும்.

## வைத்தியமுறை



O அத்தாள் பொருதி (எலும்பொட்டி) இலை அல்லது பொன்னாவரை இலையை தேவையான அளவு எடுத்து நைசாக அரைத்து அத்துடன் நாட்டுக் கோழி முட்டையின் வெள்ளைக் கருவை சேர்த்து குழைத்துக்கொண்டு முறிவு ஏற்பட்ட பகுதியை இணைத்து வைத்துக்கொண்டு ஒரு பருத்தி துணியில் மருந்தை வைத்து பூசி முதலில் சுற்றிவிடவேண்டும். 3 – 4 மூங்கில் தப்பகைளை முறிவுள்ள பகுதியை சுற்றிலும் வைத்து அதன் மேல் பசை தடவிய துணியால் சுற்றி கட்டி விட வேண்டும். 7 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை இதே போன்று கட்டுப் போட வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O கோழி முட்டை, நல்லெண்ணெய், உளுந்துமாவு, மஞ்சள் தூள், சோற்றுக் கற்றாழைச்சோறு இவை ஐந்தும் சேர்த்துப் பசைபோலாக்கி, எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் நன்றாகப் பத்துப் போடவும். பின்பு மூங்கில் தப்பைத் துண்டுகளைச் சுற்றி, துணியில் பசையைத் தடவிக் கொண்டு மூங்கில் தப்பையைச் சுற்றிக் கட்டி விட வேண்டும். மூன்று தினங்களுக்கு ஒரு முறை கட்டை கழற்றிவிட்டுப் பின்பு புதுக்கட்டுப் போடவேண்டும். மூன்று கட்டுப் போட்டுவிட்டு, நான்காவது கட்டு 15 அல்லது 20 நாள் வரை கட்டை அவிழ்க்காமல் விட்டுவிட வேண்டும். இங்கு 20 நாட்கள் நாட்களில் முறிந்த எலும்பு நன்றாகக் கூடிவிடும். பின்பு கட்டை அவிழ்த்து விடலாம். பின்பு சில நாட்களுக்கு கட்டு இருந்த பகுதியில் தேங்காய் எண்ணெய் பூசி வர வேண்டும்.

**(தா.நோவா, குப்பண்ணாபுரம், மானூர், திருநெல்வேலி)**

O எலும்பு முறிந்த இடத்தில் முட்டை வெள்ளைக் கருவை வைத்துத் தடவி அதன் மேல் மண் ஓடு. மூன்று மூங்கில் குச்சி வைத்துத் துணியை வைத்துக்கட்டவேண்டும். துணிமேல் பசை வைத்துக் கட்ட வேண்டும். பசை தயார் செய்ய 100 கிராம் புளிய விதைகளை அரைத்துக் கொதிக்க வைத்து ஆற வைக்க வேண்டும்.

சில மாடுகள் கட்டைக் கடித்துவிடும். அப்படிக் கட்டு அவிழ்க்கப்பட்டால் உடனே மாற்றுக் கட்டுப் போட வேண்டும். ஒரு மாதம் கழித்துக் கட்டு அவிழ்க்கப் பட வேண்டும்.

**(இராமசாமி கோனார், சாத்தான்குளம், தூத்துக்குடி)**

O புத்தாஞ்சோறு (கரையான் புற்றின் உள்ளே இருக்கும் புற்று மண்), செம்மறி ஆட்டுச் சாணி இரண்டையும் சேர்த்து கொதிக்க வைத்துக் கால் அடிபட்ட இடத்தில் மூங்கில் தப்பைகளை



ஆத்திப்பட்டை நார் வைத்து கட்டவேண்டும். இந்த இடத்தில் காலை, மாலை, தண்ணீர் தெளித்து விடவேண்டும்.

**(எஸ். முத்துசாமி, கோட்டக்கரை, குளித்தலை, திருச்சி)**

O பிரண்டைச் செடியை நன்றாக அரைத்து முறிவு ஏற்பட்ட இடத்தில் பூசி இறுகக் கட்டிவிட வேண்டும்.

**(மேரிடிசோசா, மலைவாழ் மக்கள் மருத்துவம், மகாராஷ்டிரா)**

O முட்டை, உளுந்தம்பருப்பு இரண்டையும் அரைத்து எலும்பு முறிவின் மீது பூசி, மூங்கில் தப்பை குச்சிகளை அதன்மேல் வைத்து இறுகக் கட்ட 10 நாட்களில் குணமாகி விடும்.

**( கே.சரவணன், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்)**

O அத்திப்பால் அடித்து துணி சுற்றி அதன் மேலும் துவையுமாறு அத்திப் பால் மீண்டும் அடிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் எலும்பு முறிவு சரியாகி விடுகின்றது. எலும்பொட்டி இலையை அரைத்துக் கால் ஒடிந்த இடத்தில் கட்டுவதாலும் சரியாகிவிடும்.

**(அண்ணாத்துரை, சித்தாலப்பக்கம், படூர்,காஞ்சிபுரம்)**

O வெள்வேலம் பட்டையைப் பொடிசெய்து நீருடன் குழைத்து ஒரு துணியில் பூசி தப்பைக் குச்சிகளை முறிவு ஏற்பட்ட இடத்தில் சுற்றிலும் வைத்து கட்டி 10 நாட்கள் நீர் விட்டு நனைத்து வரவேண்டும்.

**(கருப்பணன், சோமையனூர், கோவை)**

O வில்வக்காயை அடுப்பில் சுட்டு இதனை ஆனைக் கத்தாழையுடன் உரலில் ஆட்டி பின்னர் கொதிக்க வைத்து காலில் பத்துப்போடலாம் அல்லது துணியால் கட்டுப் போட வேண்டும்.

**(புல்லாக்கவுண்டர், தொண்டாமுத்தூர், கோவை)**

O வாதமடக்கிப் பச்சிலை அரை கிலோவுடன் வசம்பு ஆறு துண்டுகள், வலம்புரிக்காய் 15, வால்மிளகு 15, சிறிது கருஞ்சீரகம் ஆகிய ஐந்து பொருட்களயைும் இடித்துச் சாறு எடுத்து கஸ்தூரி மெழுகை ஒரு துளிவிட்டு உள்ளுக்கு வழங்கிவிட்டுச் சாறு பிழிந்த சக்கையையே இடித்து நீர்ப்பதத்துடன் எலும்பு முறிந்த இடங்களில் தடவி மூங்கில் தப்பைகளை வைத்துக் கட்டி விட எலும்புகள் ஒன்று சேர்ந்துவிடும்.

**(முத்துச்சேர்வை, குறளம்பட்டி, கன்னிவாடி, திண்டுக்கல்)**

O இலுப்பை எண்ணெய், புங்க எண்ணெய், நல்லெண்ணெய், வேப்பஎண்ணெய், கடுகு எண்ணெய் இவற்றை சம அளவு எடுத்து அதில் குப்பை மேனி, துளசி கைப்பிடியளவு போட்டு காய்ச்சி தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். எலும்புமுறிவு ஏற்பட்ட இடத்தில் மூங்கில் தப்பைவைத்து புளியவிதை பசை (100 கிராம் புளிய விதைகளைக் காய்ச்சி பசையெடுத்துக் கொள்ளலாம்) துணியில் பூசி ஆத்திநார் கொண்டு சுற்றி கட்ட வேண்டும். 3 நாட்கள் கழித்து கட்டுக்கு மேலாக மேற்சொன்ன எண்ணெய்க் கலவையை பூச்சு பூச வேண்டும்.

**(தாழமுத்து, வனத்தாய்புரம், மயிலாடும்பாறை, தேனி)**

O உளுந்து 100 கிராம் தூள் செய்து சலித்து 3 கோழி முட்டையுடன் வெள்ளைக் கரு சேர்த்து பசையாக்கி ஒரு நீண்ட வெள்ளைத் துணியில் பசையை தடவி வைக்கவேண்டும். பின்பு எலும்பு முறிவு ஏற்பட்டதை சரியாக பொருத்தி வைத்து உளுந்தம் பசை தடவப்பட்ட துணியால் சுற்ற வேண்டும். அதன் மேல் துணியால் சுற்றப்பட்ட மூங்கில் தப்பைகளை நான்கு பக்கங்களிலும் வைத்து அதற்கு மேல் பசை தடவிய துணியால் சற்றி கட்டி விடவேண்டும். இதை 10 நாட்கள் கழித்து தண்ணீர் தெளித்து கழற்றிவிட வேண்டும். புளிய இலையை காடி நீரில் வேக வைத்து ஒரு துணியில் இலையை



எடுத்து வைத்து பொட்டலமாக்கி இளம் சூடாக இருக்கும் போது காடி நீரை தொட்டு முறிவான இடத்தில் ஒத்தடம் கொடுக்க வேண்டும். அதன் பின கொடிகள்ளி பாலில் ஒரு பருத்தி துணியால் துவட்டி கட்டுப் போட்டு விட வேண்டும்.

பின்பு ஒரு மண் சட்டியில் 250 மி.லி. நல்லெண்ணெய் ஊற்றி 5 எலுமிச்சம் பழத்தின் சாறு பிழிந்து அடுப்பில் வைத்து காய்ச்ச வேண்டும். அப்போது எண்ணெய் எலுமிச்சம் பழ நிறத்திற்கு வரும்போது இறக்கி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்து ஒரு நாளைக்கு ஒரு முறை என எலும்பு முறிவு சரியாகும் வரை தடவி வர வேண்டும்.

**( ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O எலும்பு முறிவு, மோது கட்டு, வாதம் போன்றவைகளுக்கு எண்ணெய் காய்சுதல்:

இலுப்பை எண்ணெய், புங்கை எண்ணெய் நல்லெண்ணெய், கடுகுஎண்ணெய், மீன்எண்ணெய், குறுக்கு முத்து எண்ணெய், வேப்பெண்ணெய், கடலைஎண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றில் 100 மி.லி. வீதம் எடுத்துக் கொண்டு கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், அதிமதுரப்பட்டை, கடுக்காய். வீரம், பூரம்.ஜாதிக்காய், குங்கிலியம், துத்தம் கடல்நுரை, பச்சை கற்பூரம் ஆகியவற்றில் வகைக்கு 5 கிராம் எடுத்து இடித்து எண்ணெயுடன் சேர்த்து பக்குவமாக காய்ச்சிவடிக்க வேண்டும். இவற்றை எலும்பு முறிவிற்கு கட்டு கட்டியபின் மேல் துவாலையிட வேண்டும். இது கட்டிகள், கரணைகள், மோது கட்டு, புண் போன்ற வற்றிற்கும் பயன்படுத்தலாம்.

**(சின்ன குருசாமிநாயக்கர், டி.இராமநாதபுரம், மதுரை)**

### மூட்டு விலகியிருந்தால்

O மாடுகளின் கால் எலும்புகள் சில சமயங்களில் பாரம் இழுக்கும்போது தடுமாறி மூட்டு விலகிவிடும். இதனால் மூட்டு வலி ஏற்பட்டு மாடு இலேசாக நொண்ட ஆரம்பிக்கும். இதற்கு அரை லிட்டர் நல்லெண்ணெய்யில் 4 கற்பூர வில்லை (சூடம்) போட்டுக் காய்ச்சிப் பின் குளிரவைத்து மூட்டுகளில் 5–10 நிமிடங்கள் வரை அழுத்தித் தேய்த்துவிட வேண்டும். இங்ஙனம் ஒரு நாளைக்கு இருமுறையாக 7 நாட்கள் தேய்த்து வர வேண்டும்.

**(வினாபென் படேல், வல்சாத், குஜராத்)**



# 21. சுளுக்கு, அடிபட்ட வீக்கம்

### காரணங்கள்

மாடுகள் வயல் வரப்புகளில் தடுமாறுவதாலும், நீண்ட தூரம் சுமை ஏற்றி செல்வதாலும், உழவு மாடுகளில் மேக்கால் அழுத்துவதாலும் அவை களுக்கு கழுத்து, இடுப்பு, முதுகு, கால்களில் சுளுக்கு ஏற்படும்.

### இடுப்பு, முதுகு, கொண்டை பிடி சுளுக்கிற்கு

O இடுப்பு, முதுகு சுளுக்குக்கு மாட்டின் முகத்தை ஒரு வலுவான பெரிய மரத்துடன் நேர் வாக்கில் வைத்து கொம்புக்கு மேலும், வாய்த்தாடைக்கு கீழுமாக கயிற்றால் அசையாமல் வரிந்து கட்டிய பின் இடுப்புக்கு மேல் பகுதியில் வடக் கயிறு கொண்டு சுற்றி வடத்தின் இரு முனைகளையும் இரு பின்னங்கால்களிடையில் செலுத்தி பின்புறமாக இழுத்து விட்டால், இடுப்பு, முதுகு சுளுக்கு, கொண்டைப்பிடி முதலியன நீங்கும்.

### கால் சுளுக்கிற்கு

O மாட்டை கீழே தள்ளி சுளுக்கு எற்பட்ட கால் தவிர மீதி கால்களை கட்டிவிட்டு, சுளுக்கிய கால் குளம்பில் கயிற்றால் கட்டி கயிற்றின் மற்றொரு முனையில் உலக்கையை மாட்டி, உலக்கையை இரண்டு பேர் தங்கள் முதுகுக்குப் பின்னால் வைத்து தங்கள் கால்களால் மாட்டை உதைத்தவாறு பின்புறமாக சாய்ந்து இழுத்து விட வேண்டும். அப்படிச் செய்தால் கால் சுளுக்கு நீங்கும்.

## கழுத்துச் சுளுக்கு

O கீழே தள்ளி கால்களைக் கட்டிய மாட்டின் முகத்தையும், கொம்புகளையும், அழுத்திப் பிடித்தவாறு கட்டிய கால்களை தூக்கி மாட்டின் உடல் முழுவதும் மறுபுறம் திருப்பித் தள்ள வேண்டும். முகமும், கொம்புகளும் மட்டும் அப்படியே இருக்க வேண்டும். இப்பொழுது கழுத்து திருகிக் கொண்டு இருக்கும். அப்படிச் செய்த பின் மீண்டும் முகத்தை நேராக திருப்பி வைத்து அமுக்கிக் கொண்டு மறுபடியும் முன் செய்தது போல இப்பொழுது உடல் முழுவதும் எதிர்பக்கம் திருப்பி தள்ள வேண்டும். இப்படிச் செய்தால் கழுத்துச் சுளுக்கு நீங்கும்.

**குறிப்பு :** சுளுக்கு எடுத்துவிட்ட பின்பு சாம்பல் கற்றாழையை வாட்டிப் பிழிந்து அச்சாறுடன் கேழ்வரகு மாவு சேர்த்து கரைத்து கொதிக்க வைத்து சுளுக்கு வீங்கிய பகுதிகளில் பத்துப் போட வேண்டும். அல்லது புளியங்கொட்டையை வறுத்து இடித்து மேல்தோல் நீக்கிவிட்டு வேகவைத்து அரைத்துப் பத்து போடவேண்டும்.

செம்மறியாட்டுச் சாணம், செம்மண், சிறிது கள்ளிப்பால் மூன்றையும் நீரில்கரைத்து கொதிக்க வைத்துப் பத்து போடவேண்டும்.

**(கேவிந்தன், செல்லிய்மபாளையம், சேலம்)**

O மாடுகளுக்கு கழுத்து, இடுப்பு, முதுகு, கால்களில் ஏற்படும் சுளுக்கிற்கு, தவிடை வறுத்து சூட்டுடன் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

நாவல் மரப்பட்டையை சுமார் 100 கிராம் அளவு எடுத்து அரைத்து பத்துப் போடலாம்.



வீக்கத்துடன் கூடிய சுளுக்கு இருந்தால் மருதாணி இலையை 100 கிராம் அளவு எடுத்து நன்றாக அரைத்து பூச நிவர்த்தியாகும்.

**( ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி.)**

## அடிபட்ட வீக்கம்

O ஆடு, மாடுகளுக்கு அடிபட்டால் அரசம்பட்டையை இடித்து இத்துடன் அரை படி தண்ணீர் ஊற்றிக் கலந்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(அண்ணாத்துரை, சித்தலப்பாக்கம், படூர், காஞ்சிபுரம்)**

O வெள்ளை மிளகு 10 கிராம், வால்மிளகு 10 கிராம், வெள்ளை வெங்காயம் 100 கிராம், கருப்பட்டி 100 கிராம், எலும்பொட்டி தழை 100 கிராம், சேர்த்து அரைத்து எலுமிச்சம்பழ அளவு தினமும் மூன்று வேளை வீதம் 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**( தஞ்சிகாண், தாழங்குணம், செஞ்சி, விழுப்புரம்)**

O அரசம்பட்டையுடன் கேழ்வரகு மாவு போட்டு நீர்விட்டு நன்றாகக் காய்ச்சி அடிபட்ட இடங்களில் பத்தாகப் போட்டு விட்டால் சரியாகிவிடும்.

**(வெள்ளைச்சாமி, நன்னாரி சாலை, வேலூர்)**

O எருக்கம் இலை (பழுத்தது) 12 இலை, காட்டுநொச்சி ஒரு கைபிடி அளவு, குப்பைமேனி ஒரு கைபிடி அளவு கல் உப்பு 50 கிராம், இவற்றை சூடு பட வறுத்து பாத்திரத்தில் இட்டு அவற்றுடன் குறுமணல் போட்டு வறுத்து துணியில் கட்டி ஒத்தடம் கொடுக்க வேண்டும் அல்லது மஞ்சனத்தி (நுனா) இலையை நிழலில் காய

வைத்து பின் இடித்து வறுத்த துணியில் வைத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

**(செல்வராஜ், வண்டாரி, சாப்டூர், மதுரை)**

O பிரண்டை, கோவைத் தழை ஆகியவற்றை நன்றாக கசக்கி சாறு எடுத்து அத்துடன் மஞ்சள், தூள் உப்புச் சேர்த்து அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து வெள்ளைத் துணியின் உதவியால் மாடுகளின் கழுத்தில் விட வேண்டும். பின்பு பிரண்டை, கோவை தழை அரைத்த விழுதை கழுத்துப் பகுதியில் பத்துப் போட வேண்டும். இவ்வாறு 3 வேளை செய்து வந்தால் கழுத்து வீக்கம் வற்ற ஆரம்பிக்கும். மறுபடியும் கழுத்து வீக்கம் வந்தால் இலுப்பை எண்ணெய் தடவவேண்டும்.

**( ஜெயராமன், செய்யான்குளம், விழுப்புரம்)**

O உள்காயங்களுக்கு வெற்றிலை 10 கிராம், மிளகு20 கிராம் சேர்த்து இடித்து அரை லிட்டர் வெந்நீரில் கலந்து குடிக்க கொடுக்க வேண்டும். மருந்து கொடுத்து 1 மணி நேரத்தில் தீவனம் தின்ன ஆரம்பிக்கும். காலை, மாலை இரண்டு வேளையாக ஒரு நாள் விட்டு 1நாள் வீதம் இரண்டு நாட்கள் மருந்து கொடுக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு மாட்டை குளிப்பாட்டக்கூடாது.

**(பால்சாமி, வடக்கத்தியான்பட்டி, சாப்டூர், மதுரை)**

O ஆடு, மாடு அடிபட்டால் அரசம்பட்டை இடித்து அத்துடன் அரை படி தண்ணீர் ஊற்றிக் கலந்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(அண்ணாத்துரை, சித்தாலப்பாக்கம், படூர், காஞ்சிபுரம்)**



O வெள்ளருகை அரை கிலோ அளவு எடுத்து அரைத்து மலை பகுதிகளில் மேயந்து திரும்பும் வெள்ளாட்டு கோமியம் அரை லிட்டருடன் கலந்து 3 வேளை கொடுக்க வேண்டும். தீவனம் வழக்கம் போல் தரலாம். அடிபட்ட இடத்தில் ஊமத்தை இலைச்சாறு, தேன், நீர்த்த கல்லுச் சுண்ணாம்பு ஆகியவற்றை தனித்தனியாகத் தேய்க்க வேண்டும்.

**( குமார், இ. கோவில்பட்டி, திண்டுக்கல்)**

O விடத்தழை 100 கிராம், வாதநாராயணன் இலை 100 கிராம் இரண்டையும் இடித்து 100 மி.லி. வேப்பெண்ணெய் உடன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(சின்னன்னன், பேடரல்லி, தருமபுரி)**

O காஞ்சூரம் பழம் ( எட்டிப் பழம்) 5 எடுத்து கொட்டை நீக்கி சதையை மட்டும் ஒரு லிட்டர் விளக்கெண்ணெய் போட்டு 3 நாட்கள் வெயிலில் புடமிட்டு எடுக்க வேண்டும். பின்பு அந்த எண்ணெயை தொட்டு கால்நடைகளுக்கு வீக்கம் உள்ள இடத்தில் தடவி மேலிருந்து கீழாக நன்றாக அழுத்தி நீவி விடவேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O நல்லெண்ணெயை காய்ச்சி சிறிது உப்பை ஒரு பருத்தி துணியில் கட்டி எண்ணெயில் நனைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுத்து மேலிருந்து கீழாக நீவி விட வேண்டும்.


**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**

# 22. கொம்பு முறிவு

## காரணங்கள்

அடுத்த மாடுகளுடன் முட்டிக் கொள்ளுதல்,விபத்துகள், தலைப்புற்று, மண்டைக் கரப்பான் போன்ற காரணங்கள் உண்டாகலாம்.

## வைத்திய முறைகள்



O கருப்பட்டி பாலில் தலைமுடி சேர்த்து ஒடிந்த பகுதியைச் சுற்றி பூசிவிட்டால் சீழ் பிடிக்காது. மீண்டும் கொம்பு கெட்டிப்படும்.

**( தாழமுத்து, வனத்தாய்புரம், தேனி)**

O ஒடிந்த கொம்பு குருத்துகளை வெட்டுக்காயப் பூண்டு தழைச்சாறு கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இரத்த கசிவு இருப்பின் எருக்கம்பட்டையை தூள் செய்து தூவி இரத்தபோக்கை



நிறுத்தி, சமையலறை, புகை சூரை பனை வெல்லம், சுண்ணாம்பு சேர்த்து களிம்பு செய்து பூசி கொம்பை முன்பிருந்த நிலையிலேயே நிற்க வைத்து இரண்டு கொம்புகளுடன் மூங்கில் வைத்து சேர்த்து கட்டிவிட வேண்டும்.

**(பால்சாமி கவுண்டர், வெம்பூர், விளாத்திகுளம், தூத்துக்குடி)**

O காளை (கிடா) கன்றுகளுக்கு கொம்பை தீய்த்து விடுவார்கள். இதனால் மாடுகளுக்கிடையே சண்டை மற்றும் முட்டிக் கொள்ளுதல் தவிர்க்கப்படும். இந்த தீய்ந்த இடத்தில் காயம் இருக்கும். இதில் தண்ணீர் பட்டால் புண்ணாகிவிடும். இதற்கு 5 புளியங்கொட்டையை தோலோடு அரைத்து நன்றாக கொதிக்க வைத்தால் களிபோல் ஆகிவிடும். இதனை மிதமான சூட்டில் புண் உள்ள இடத்தில் தடவ வேண்டும். ஒரு வேளை தடவினால் போதுமானது.

**(ரெங்கசாமி, ராமகோவிந்தன்காடு, நாகப்பட்டினம்)**

O புகை படுகை 50 கிராம், சீனி 50 கிராம், சுண்ணாம்பு 50 கிராம் இவற்றை நன்கு கலந்து கொம்பில் தடவி துணியை இறுக சுத்திக் கட்டவும். துணியில் வேப்பெண்ணெய் பூச வேண்டும். இதனால் ஈ மொய்க்காது. காயம் ஆறி தானாக துணி விழும்.

**( இராமு, இலுப்பக்குடி, சிவகங்கை)**

O கொம்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் புண்களை சுத்தம் செய்ய 100கிராம் வேப்ப இலையை இடித்து 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்தது பின் ஆற வைத்து உபயோகப்படுத்த வேண்டும்.

திருகுகள்ளி பாலை சிரட்டையில் எடுத்து ஒரு துணியில் நனைத்து இரு கொம்பிலும் நுனியில் சுற்றிவிட வேண்டும். அதன்மேல் புற்றுக்குள் இருக்கும் கரையான் தட்டுகள் (புத்தான் சோறு) சுமார் 100 கிராம் எடுத்து அத்துடன் செம்மறியாட்டுபுழுக்கை 100 கிராம் புளியங்கொட்டை 50 கிராமை ஊறவைத்து அரைத்து மூன்றையும் ஒன்ற சேர்த்து கால் லிட்டரில் நீர் சேர்த்து கரைத்து கொதிக்க வைத்து பூசிவிட வேண்டும். 1 நாள் மட்டும் 2 வேளை பூச வேண்டும்.

**(பெரிய அய்யாவு,சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**



# 23. புண்கள், காயங்கள்

## காரணங்கள்

மாடுகளுக்குள் முட்டி சண்டை போட்டுக்கொள்வதாலும், கீழே விழுந்துவிடுவதாலும், நாய் கடிப்பதாலும், தீயினாலும் உண்டாகின்றன. சில நேரங்களில் ஆழமான புண்களில் புழு வைத்து விட வாய்ப்புண்டு.

## வைத்தியமுறைகள்

O ஊமத்தன் இலைச்சாறு 50 மி.லி. தேங்காய் எண்ணெய்100 மி.லி. மயில் துத்தம் 1 கிராம் சேர்த்து காய்ச்சிய மத்தான் தைலம் எனப்படும் எண்ணையை பயன்படுத்த புழு பிடிக்காமலேயே புண் ஆறும். புழுக்கள் இருந்தாலும் வெளியேறி விடும். எல்லா விதமான புண்களுக்கும் பயன்படுத்தலாம்,

**(பழனிவேலு, அரசாங்குடி, திருச்சி)**

## கொழுகுத்திய காயங்களுக்கு

O கால்வாய்க்கரை மற்றும் தோட்டத்தில் வேலி ஓரங்களில் படர்ந்து வளரும் உப்பிலாங்கொடி (pentatropsis capensis) இலைச்சாற்றினை மாடுகளின் கால் குளம்பில் இட வேண்டும்.

**(ராதாகிருஷ்ணன், இருளம்பாளையம்,சென்னை)**

O பத்து கிராம் சீனாக்காரத்தை எடுத்து தூள் செய்து தண்ணீரில் கலக்கி குளம்புகளில் கழுவி விடலாம். அல்லது வேப்பெண்ணையையோ கார்பாலிக் தைலத்தையோ தடவலாம். குளம்புகளில் வெடிப்பு ஏற்பட்டால் 100 கிராம் ஊமத்தையிலையுடன் 5 கிராம் அளவு சுண்ணாம்பை அரைத்துப் போடலாம்.

**(ஆர். நவநீதகிருஷ்ணன், உத்திரமேரூர், செங்கை)**

O மிருகத்தின் கொழுப்பு எடுத்து உருக்கி கொழுகுத்திய புண்களில் இட குணமடையும்

**(புல்லாக்கவுண்டர், தொண்டாமுத்துார், கோவை)**

O வேப்ப இலை மற்றும் துளசி இலை இரண்டும் தலா 200 கிராம் அளவு எடுத்து, நீர் விட்டு விழுதாக அரைத்து 3 –5 நாட்கள் புண்கள் ஆறும் வரை பூசி வர வேண்டும்.

(அல்லது)

காயா மருந்து செடி 100 கிராம், சிறு வெங்காயம் 10 கிராம் இரண்டும் சேர்த்து அரைத்து பூசி வரவேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி,தருமபுரி)**

O கரப்பான், அக்கி, படுவன் மற்றும் மண்டை கரப்பான் போன்ற புண்களுக்கு நல்லெண்ெணய் மற்றும் தேங்காய் எண்ணெய் 100 மிலி. வேப்பெண்ணெய் 150 மிலி. ஆகியவற்றை எண்ணெய் புழுங்காத மண் சட்டியில் ஊற்றி கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்க ஆரம்பித்ததும் ஊமத்தை இலை ஒரு கைப்பிடி, ஆணை நெருஞ்சி ஒரு கைப்பிடி தண்ணீர் விடாமல் அரைத்து எண்ணெயில் போட்டு கிளற வேண்டும். கட்டியாக வரும்போது கருப்பு மிளகு ஒரு சிட்டிகை போட்டு சிறிது நேரம் கழித்து கையில் எடுத்து நொறுக்கும் போது நொறுங்கினால் பதம் என்று அறிந்து இறக்கி வடித்து ஆற வைத்து பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு புண்களுக்கு தடவி வர வேண்டும்.

**(குருசாமி, கருங்குளம்)**

O வாவரசு இலை, கரு ஊமத்தை இலை, வேலிப்பருத்தி இலை, பிரண்டை, ஆவாரை ஆகியவற்றை கைப்பிடி அளவு எடுத்து உரலில் இட்டு நன்கு இடித்து சுமார் 150 மி.லி. சாறு எடுக்க வேண்டும். இதனை ஒரு மண் சட்டியிலிட்டு விளக்கெண்ணெயில் 150



மி.லி. சேர்த்து நன்றாகக் காய்ச்ச வேண்டும். சுமார் அரை மணி நேரம் கழித்து சிறிய சிறிய துண்டுகளாக நறுக்கப்பட்ட சோற்றுக்கற்றாழை மடல்களை எண்ணெயில் இட வேண்டும். இவை எண்ணெயில் மூழ்காமல் மிதந்தால் தைலம் பதமாக இருக்கிறது என்று அறிந்து எண்ணெயை இறக்கி, வடித்து பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்ட புண்களுக்கப் பயன்படுத்த வேண்டும்.

**(பால்சாமி கவுண்டர், வெம்பூர், எட்டையாபுரம் துாத்துக்குடி)**

## சோடு அடித்தல்

நெடுந்துாரம் வண்டிபூட்டிச் செல்லும் நாட்களில் எருதுகளின் கால்குளம்புகளில் இலாடக்கம்பி குத்திக்காயப்படுத்துமாதலால் டயர் ரப்பரில் சோடு செய்து மாட்டுக்காலில் அணியச்செய்யலாம்.

**(நாராயணன், அன்னமங்கலம், பெரம்பூர்)**

## புழு வைத்த புண்களுக்கு

O சீத்தாப்பழ இலைகளை 100 கிராம் இடித்துச்சிறிதளவு கட்டி கற்பூரம், புகையிலைத்துாள் 20 கிராம் ஆகியவைகளுடன் கலந்து புழுக்கள் பிடித்த புண்ணுக்குப் போட்டால் புழுக்கள் இறந்துவிடும். புண் ஆறிவிடும்.

**( வி.ஆர். ஐயப்பன், ரெட்டியப்பட்டி, திண்டுக்கல்)**

O தும்பை இலைச்சாற்றை புண்ணில் இட்டு வர நிவர்த்தியாகும்.

**(கருப்பணன், சோமையனுார், கோவை)**

O துத்தி இலை 100 கிராம், 2 கற்பூர வில்லை (சூடம்), சோற்றுகற்றாழை 1 மடல், புகையிலை 10 கிராம் இவை அனைத்தையும் கலந்து கசக்கித் தூளாக்கிய கலவையைப் பத்து போட்டால் புண் ஆறும்.

**(எஸ்.பி.கிருஷ்ணசாமிகவுண்டர், மேலச்சொக்கநாதபுரம், போடி)**

O கால்நடைகளுக்கு எற்படும்புண்களில் புழு வைத்திருந்தால் 50 மி.லி.குப்பைமேனிச் சாற்றைப் பிழிந்து 50 மி.லி. அளவு சுண்ணாம்பு நீர் கலந்து புழு வெளியேறி புண் விரைவில்ஆறிவிடும்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O புண்களில் உருவாகும் புழுக்களைக் கட்டுப்படுத்த பாகற்கொடியின் இலைகளை அரைத்துப் பிழிந்த சாறுடன் ஒரு சிட்டிகை உப்புச் சேர்த்து தினந்தோறும் காலையில் புண்கள் ஆறும் வரை தடவி வர வேண்டும். (அல்லது)

O புழு வைத்த புண் உள்ள பகுதியில் எருமைப்பாலை ஊற்றி விடும் போது புழுக்கள் புண்களைவிட்டு வெளியே வருகின்றன. அவற்றை எடுத்து அப்புறப்படுத்தி பின்னர் புண்களை பஞ்சினாலோ அல்லது துணியாலோ சுத்தப்படுத்தி விட வேண்டும். பின்பு பாகற்காய்களை தோல் உரிக்காமல் சிறு சிறு துண்டுகளாக வெட்டி களிம்பு பதத்திற்கு வரும் வரை ஆட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு புண்களின் மீது பூசிவிட வேண்டும். இவ்வாறு தினமும் காலையிலும், மாலையிலும் பின்பற்ற வேண்டும்.

**(மேமரிடிசோசா, மலைவாழ் மக்கள் மருத்துவம், மகாராஷ்டிரா)**

O மாவிலங்கம்பட்டை 10 கிராம் அரைத்து சூடம் ஒரு கிராம் சேர்த்து பூச வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**



O ஆடுதிண்ணாப்பாளை இலை தேவையான அளவு, கட்டி சூடம் ஒன்று இரண்டும் சேர்த்து அரைத்துப் பூச வேண்டும். பூசிய பின் வேப்ப எண்ணெயை இலேசாக மேல் பூச்சாக ஒரு வேளை மட்டும் பூசினால் போதுமானது.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

## பால் மடிக்காம்பு காயங்கள், கொப்புளம்

வேம்பு மரப்பட்டை மற்றும் இலைகளிலிருந்து கசாயம் தயார் செய்து காம்புகளை கழுவி சுத்தப்படுத்த வேண்டும்.

O வேம்பு இலைப்பொடி 40 கிராம், சீதாபழமர இலைப் பொடி 40 கிராம், ஜிங்க் ஆக்ஸைடு 20 கிராம் ஆகியவற்றை அரைத்து பால்காம்பு புண்களில் மீது பூச சரியாகும்.

O மடியிலும், காம்புகளிலும் நாள்பட்ட புண், கொப்புளங் களுக்கு மஞ்சள் கந்தகத்துாளை தேங்காய் எண்ணெயில் அல்லது பெட்ரோலியம் ஜெல்லியில் குழைத்து மடியிலும், காம்புகளிலும் தடவினால் வலியைக் குறைத்து குளர்ச்சியைக் கொடுக்கும். புண்கள் சரியாகும்.

**(அசோக் குண்டே, பிள்ளையார்குப்பம், பாண்டிச்சேரி)**

## வாய் மற்றும் பிறப்பு உறுப்பில் வரும் புண்களுக்கு

O ஒரு தேக்கரண்டி அளவு படிகாரம் எடுத்து அரை லிட்டர் நீரில் கரைத்து புண் உள்ள பகுதியை கழுவ வேண்டும்.

O திரிபலா சூரணத்தை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் கலவை) நீரில் கலந்து புண் மேல் தடவ வேண்டும். இத்துடன் சீந்தில் தண்டு பொடி செய்தது 100 கிராம் அளவு எடுத்து நீர் விட்டு களிம்பாக அரைத்து புண் ஆறும் வரை தினமும் பூசிவர வேண்டும்.

**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**



# 24. கட்டி / கழலை / சிலந்தி

## காரணம்

உஷ்ணம், நுகத்தடி, பூச்சிக்கடி, வண்டுகடி மற்றும் தொப்புள் சம்பந்தமான கோளாறுகளால் ஏற்படுகின்றன.

## வைத்திய முறைகள்

O ஊமத்தை விதைகளை நன்கு அரைத்து நாள்பட்ட கட்டிகள் மேல் தடவினால் பழுத்து உடைந்துவிடும்.

O வேப்பிலையையும், புளிய இலையையும் ஒன்றாக சேர்த்து வேகவைத்துக் கட்டிகள், சிலந்திகள் மேல் வைத்துக் கட்டினால், பழுத்து உடைந்து சீழ் வெளியேறி விடும்.

**(வி.ஆர், ஐயப்பன், தாடிக்கொம்பு, திண்டுக்கல்)**

O கட்டியை அறுத்து உள்ளே இருக்கும் கழலை மற்றும் உருண்டை பொருளை எடுத்துவிட்டு வெட்டுக்காய பூண்டு தழைச்சாறு கொண்டு துடைக்க வேண்டும். பின்னர் விளக்கெண்ணெய், துத்தம், துருசு, மஞ்சள்பொடி, எருக்கம் பட்டை, சுண்ணாம்பு தூள் கொண்டு காய்ச்சிய தைலத்தை தினமும் பூசிவர வேண்டும். இச்சமயத்தில் மாட்டிற்கு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும்.

**(பால்ச்சாமி, வெம்பூர், தூத்துக்குடி)**

O நிலக்குமிழ் 4 எடுத்து வந்து அடுப்பில் போட்டு எரித்து அதன் சாம்பலை விளக்கெண்ணெயில் குழைத்து மூன்று அல்லது நான்கு வேளை கட்டியின் மீது பூச வேண்டும்.

**(சின்னண்ணன் , பேடரல்லி, தருமபுரி)**

O சீழ் கட்டிய வீக்கத்திற்கு மஞ்சள்பொடி மற்றும் நாட்டுப் பசு நெய்யுடன் சம அளவு கலந்து அதைச் சூடு செய்தால் ஒருவித களிம்பு போன்றுவரும். இதை சீழ்க்கட்டி யின் மீது தடவினால் கட்டி உடைந்து சீழ் வெளியேறிவிடும்.

**(எச்.கே. தேவ், பன்குரா, மேற்கு வங்காளம்)**

O எட்டிப் பழ சதையுடன் விளக்கெண்ணெய் கலந்து காலை, மாலை வீக்கம் சரியாகும் வரை போட்டு வர வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O வீக்கம் உள்ள கட்டியின் மீது கள்ளிப்பாலை நன்றாக பூசி அதன் மீது முழுவதும் கேப்பை மாவு தூவிவிட்டு கள்ளிச்செடி அருகிலிருக்கும் மண்ணையும் எடுத்து அதன் மேல் போட வேண்டும்.

**(வேதமுத்து, ஆத்துவயல், சிவகங்கை)**

O அமுக்குராக் கிழங்குடன் சுக்கு சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்து வீக்கங்களுக்கு பற்றுபோட குணமாகிறது. புண், கட்டி, கிரந்திகளுக்கும் இதனை தனியே அரைத்து பற்று போட குணமாகிறது. நாவல்மரப்பட்டை அரைத்துப்பத்து போடலாம். அல்லது வீக்கம் உள்ள இடங்களில் மருதாணி இலையை 100 அளவு எடுத்து அரைத்துக் கால்நடைகளுக்குப் பூச வீக்கம் நிவர்த்தியாகும்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**



O நாயுருவி இலை 10 கிராம், தும்பை இலை 10 கிராம இரண்டையும் அரைத்து இதனுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்து அரைத்துப் பூச வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O புளிய இலை சுமார் 1 கிலோ எடுத்து இலேசாக இடித்து 2 லிட்டர் காடி (புளித்த) தண்ணீருடன் வேகவைத்து எடுத்து ஒரு பருத்தி துணியில் இலைகளை அள்ளிவைத்து ஒரு பொட்டலமாக கட்டி காடிநீர் இளம் சூட்டுடன் இருக்கும் போது பொட்டலத்தால் வீக்கம் உள்ள இடங்களில் காலை, மாலை ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புதிதாக தயார் செய்து ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, விருதுநகர்)**

## மாடுகளின் கழுத்துக்கழலை

அதிகம் பாரம் ஏற்றுவதால் ஏற்படும் கழுத்துக் கழலை, நுகத்தடி அடிக்கடி உராய்வதால் ஏற்படும் கழுத்து புண் மற்றும் கட்டியால் ஏற்படும் டேப்பர் கழுத்து கழலை போன்றவற்றிற்கு முதலில் கட்டி உள்ள பகுதியை வெது வெதுப்பான நீரினால் நன்றாகக் கழுவி ஒத்தடம் கொடுக்க வேண்டும். பின்பு அடுப்புக் கரியையும், தும்பை செடியையும் தேவையான அளவு எடுத்து தனித்தனியாக நன்றாக அரைக்க வண்டும். பின்பு இவை இரண்டையும் ஒன்றாகக் கலந்து புண்பட்ட இடத்தில் வைத்து ஒரு துணியை வைத்து நன்றாகக் கட்டிவிட வேண்டும். 15நாட்களுக்கு தினமும் ஒரு வேளை வீதம் இவ்வாறு தொடர்ந்து கட்டி நீர்படாமல் பார்த்து வந்தால் புண்ணுடன் கூடிய கழலை முழுவதும் குணமடையும்.

**(கே.பெரியசாமி, வடபள்ளப்பட்டி, திண்டுக்கல்)**

# 25. சொரி நோய், தோல் உரிதல்

## அறிகுறிகள்

உடலின் மேல் திட்டுத் திட்டாக ரோமம் உதிர்ந்து காணப்படும; அரிப்பு; நமச்சல் காணப்படும். தோலின் மேல் பத்து படை, தடிப்பு, வீக்கம் போன்றவை காணப்படும். தோல் மற்றும் முடி நிறம் மாறி இருக்கும்.

## காரணங்கள்

இது பூஞ்சான் கிருமியினாலும், சுகாதாரம் இன்மை, நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளினாலும் ஒவ்வாமையாலும் தோல் நோய் உண்டாகிறது.

## வைத்தியமுறைகள்

O விஷமல்லி செடியை அரைத்து வேப்பெண்ணெயில் கலந்து பத்து, படை உள்ள இடத்தில் பூசிவிட வேண்டும்.

**(இராமு. இலுப்பக்குடி, சிவகங்கை)**

O விஷமல்லி செடியை அரைத்து வேப்பெண்ணெயில் கலந்து பத்து, படை உள்ள இடத்தில் பூசிவிட வேண்டும்.

**(இராமு, இலுப்பக்குடி, சிவகங்கை)**

O சீமையகத்தி இலையுடன் எலுமிச்சம்பழம் இரண்டு சேர்த்து அரைத்து வெளி உபயோகமாக பூசி விட வேண்டும்.

**(வெள்ளை, சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**



O கொல்லங்கோவை கிழங்கு 200 கிராம், சிறு வெங்காயம்250 கிராம், சீரகம் 50 கிராம் ஆகியவற்றை மொத்தமாக அரைத்து வெது வெதுப்பான நீரில் கலந்து உள்ளே புகட்ட வேண்டும்.

**(மூக்கன், மேலஉரப்பனூர், திருமங்கலம், மதுரை)**

O வண்டு கொல்லிமரப்பட்டை (vateria indica) 100 கிராம் அரைத்து ஒரு நாளைக்கு ஒரு வேளையாக 3 நாட்கள்உள்ளே புகட்ட வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O ஆடுதிண்ணாபாளை இலையை அரைத்து தேனுடன் கலந்து வெளி மருந்தாக பத்து போட வேண்டும். உள்மருந்தாக சுக்குப் பாலை 50 கிராம், பீச்சங்கு 50 கிராம் இவைகளை மொத்தமாக அரைத்து உள்ளே புகட்ட வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O சோற்றுக் கற்றாழை சோறு 100 மி.லி. வரிகுமட்டி சாறு 100 மி.லி. ஆடுதிண்ணாபாளைச் சாறு 100 மி.லி. மற்றும் வேப்பெண்ணெய் 50 மி.லி. இவைகளை கலந்து உள்மருந்தாக காலை வேளையில் மட்டும் 7நாட்கள் கொடுக்க வேண்டும். இதனையே மேல் பூச்சாக பூசவேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O சிறியாநங்கை 100 கிராம், ஈஸ்வர மூலி வேர் 100 கிராம், விஷமல்லி செடி 100 கிராம், சர்க்கரை கொல்லி 100 கிராம், கொல்லன்கோவை கிழங்கு 100 கிராம், சீரகம் 50 கிராம், சிறுவெங்காயம் 50 கிராம் இவைகளை மொத்தமாக அரைத்து ஒரு

நாளைக்கு காலை மாலை 2 வேளையாக 7 நாட்கள் மருந்தாக தர வேண்டும்.

**(பழனி வேலு, அரங்குடி, திருச்சி)**

O ஆடு திண்ணாப்பாளை சாறு மற்றும் சோற்றுக்கற்றாழை சோறு சம அளவு எடுத்து கலந்து வெளிமருந்தாக 7 நாட்கள் பூச வேண்டும்.

**(பெரிய அய்யாவு, சல்லிக்கோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O புளியம் பிரண்டை 10 கிராம், நிலவேம்பு 10 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி 10 கிராம், வெல்லம் 150 கிராம் மொத்தமாக அரைத்து உள் மருந்தாக புகட்ட வேண்டும். வெப்பாலை 100 கிராம், கிரந்திநாயகம் (வெடிமுத்து) 100 கிராம் இவைகளை இடித்து சாறு எடுத்து பூண்டு1, வசம்பு 1, துண்டு மற்றும் விரலி மஞ்சள் அரைதுண்டு ஆகியவற்றை பொடி செய்து பின் மொத்தமாக கலந்து வேப்பெண்ணை அரை லிட்டர் சேர்த்து கலக்கி வெளி மருந்தாக பூசவேண்டும்.

**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**

O எருமைகளுக்கு வரும் தோல் உதிர்தல் நோய்க்கு ஆரஞ்சு பழத்தோலை நீரில் வேக வைத்து பின் அரைத்து பசை போல தடவி விட வேண்டும்.

**(ரமேஷ், சேலம்)**

O தகரை மரத்தின் இலையை மோர்விட்டு அரைத்து உடம்பில் பூசிவர அரிப்பு நோய் குணமாகும்.

**(ஜார்ஜ் தாமஸ், இடப்பள்ளி, கேரளா)**



O வரிக்குமட்டிக்காய் 2 எடுத்து 10 கிராம் உப்ப சேர்த்து நீர் விட்டு அரைத்து இரண்டு மூன்று தடவை பூசிவந்தால் நாய்க்கு வரும் அரிப்பு நோய் குணமாகும்.

**( திருப்பதி ஆசான், கன்னியாகுமரி)**

O மாடுகளுக்கு அரிப்பு மற்றும் முடி உதிர்தல் ஏற்பட்டால் பெரியாநங்கை இலையை 200 கிராம் அளவு அரைத்து உள்ளுக்குக் கொடுக்கலாம்.

**(அ.அண்ணாத்துரை, சித்தலாப்பக்கம், படூர், காஞ்சிபுரம்)**

# 26. விஷக்கடி

## அறிகுறிகள்

காலநடைகளுக்கு விஷம் தீண்டியிருப்பின் வயிறு உப்பி இருக்கும். உடம்பின் மீது தடிப்புகள் காணப்படும். விஷம்தான் தீண்டியுள்ளது என்பதை மேலும் தெளிவாக உறுதி செய்து கொள்ள வேண்டு மெனில் கூர்மையான கத்தியால் காதின் நுனிப்பகுதியைக் கீற வேண்டும். அது சமயம் இரத்தம் வடியாமல் இருந்தால் அது விஷக்கடி என்று உறுதி செய்து கொள்ளலாம்.

## வைத்திய முறைகள்

O கொல்லங்கோவைக் கிழங்கு, வண்டுக்கடிப்பட்டை (Vateria indica ) உரிஞ்சான் கொடி (பால கொடி) சாறு இவைகளனைத்தையும் இடித்து 200 மி.லி. வெந்நீரில் கலந்து கொடுக்க குணமாகும்.

**(எஸ்.பி.கிருஷ்ணசாமி, மேலச்சொக்கநாதபுரம், போடி)**

O துளசி, குப்பைமேனி, தூதுவளை இவைகளை அரைத்துச் சாறு எடுத்து நாசியில் 5 –10 மி.லி. சொட்டுவிட வேண்டும். குப்பைமேனி சேர்த்தும் சாறு எடுத்தும் மூக்கில் ஊற்றலாம்.

**(தருமர், அணைக்கரைப்பட்டி, பேரையூர், மதுரை)**

O சிறியாநங்கை, பெரியாநங்கை, அருகம்புல், குப்பைமேனி, கோடகசாலை, இவை ஐந்தையும் கைப்பிடி அளவு எடுத்து இத்துடன் வேப்ப எண்ணெய் 100 மி.லி. சேர்த்து இடித்துப் பின்பு இதமான வெந்நீரில் கலந்து ஒரு முறை கொடுக்க விஷம் இறங்கிவிடும்.



இதற்குப் பத்தியம், வைக்கோல் மட்டும் தீவனமாக கொடுக்க வேண்டும். பதினைந்து நாள் கழித்து குளிப்பாட்டி விடவேண்டும்.

**(தா.நோவா.குப்பண்ணாபுரம், திருநெல்வேலி)**

O தலைச்சுருளிவேர், கொல்லங் கோவைக் கிழங்கு, ஆணைநெருஞ்சி ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து பெருங்காயம் 25 கிராம் சேர்த்து இடித்துச்சாறு எடுத்து ஒரு தடைவ கொடுத்தால் விஷம் இறங்கிவிடும்.

**(ப.ஔவையன், ரெட்டியப்பட்டி, நத்தம், திண்டுக்கல்)**

O சிறுதும்பைத்தழை, குப்பைமேனி இலை, கூழைப்பூ (சிறு பீளை) இலை ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து நன்றாகக் கசக்கி வெங்காயச்சாற்றையும் சேர்த்து ஆடு அல்லது மாட்டின் கண்களில் பிழிந்து விட்டால் விஷம் இறங்கும். மருந்தை ஊற்றுவதற்கு முன் காதை இலேசாக இரத்தம் வருமாறு கீறி விட வேண்டும்.

**( ஆ.ராஜாமணி, நாட்டார்பட்டி, திண்டுக்கல்)**

O சோற்றுக்கற்றாழை இரண்டு மடலுடன் பேய்க்குமட்டிக்காய் ஒன்று சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(சுல்தான் வைத்தியர், சித்தரேவு, திண்டுக்கல்)**

O சிறியாநங்கை இலை ஒரு கைப்பிடி, காப்புக்கட்டு இலை (சிறு பீளை) ஒரு கைப்பிடி அளவு, கரு மிளகு 15 எண்ணம், சிறு வெங்காயம் 5 எண்ணம். இவற்றை நன்றாக அரைத்து ஒரு துணியில் பொட்டலமாக கட்டி பிழிந்து சாறு எடுத்து கண், காது, மூக்கு

இவைகளில் 3 சொட்டு வீதம் பிழிந்து விட்டு மீதம் உள்ளதை உள்ளே புகட்ட வேண்டும்.

இவ்வாறு 3 தினங்கள் வரை கொடுக்க வேண்டும். கடலை செடி, மொச்சை மற்றும் பிற பயறு வகைச் செடிகள் கழிவுத் தண்ணீர் ஆகியவற்றைக் கொடுக்கக் கூடாது. வைக்கோல், பசும்புல், சோள நாத்து தட்டை இவைகளைக் கொடுக்கலாம்.

**( ராமராஜ், கம்பம், தேனி)**

O அமுக்கிரா கிழங்கு, ஆடாதொடை, முசுமுசுக்கை, இராமர் கருடர் கிழங்கு, அலுங்கு ஓடு, பேய்க்குமட்டி இலை, சித்தாமுட்டிவேர், கோவை தண்டு, கோழி அவரை இலை, சிறியாநங்கை, மிளகரணைவேர், வெள்ளை புரசம்பட்டை, வெள்ளை மிளகு, சிறு குறிஞ்சான், வேப்பமரப்பட்டை ஆகியவற்றை 50 கிராம் வீதம் எடுத்து இடித்து வேளைக்கு 100 கிராம் எடுத்துக்கொண்டு 100 மி.லி. வேப்ப எண்ணெயுடன் கலந்து மூன்று தடைவ கொடுக்க வேண்டும்.

**(பாலன், கடவூர், கரூர்)**

O வாகைமரப்பட்டை 25 கிராம், 10 கிராம் சீரகம் சேர்த்து அரைத்து அரை லிட்டர் நீருடன் கலந்து கொடுக்கவேண்டும்.

**(முத்து, மணப்பச்சேரி, கொட்டாம்பட்டி, மதுரை)**

O புளியாரை கிழங்கு 10 கிராம் (புட்டவியல் செய்தது) நிலவேம்பு 10 கிராம், திரிகடுகு சூரணம் (சுக்கு, மிளகு, திப்பிலி) 10 கிராம் அரை கிலோ வெல்லம் சேர்த்து இடித்து 3 வேளை கொடுக்க வேண்டும்.

**( பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**



O ஆடாதொடை இலை, நொச்சி இலை, வேம்பு இலை மூன்றையும் ஒரு கைப்பிடி அளவு எடுத்து ஒரு பருத்தி துணியின் மேல் பரப்பி விட்டு குறுக்காக வெட்டப்பட்ட செங்கல்லை அடுப்பில் சூடேற்றி இலைகளின் மேல் வைத்து பொட்டலமாகக் கட்டி கழுத்துப் பின்புற பகுதியில் (பிடரி பகுதி) ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

## அரணை கடி

O ஆடுதிண்ணாபாளை இலையை 100 கிராம் அளவு அரைத்து சம அளவு பசு வெண்ணெயில் லேகியம் செய்து ஒரு வாரம் தொடர்ந்து உள்ளுக்குக் கொடுக்க அரணை கடி விஷம் இறங்கிவிடும் .

**( அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O ராமகுமட்டி இலையை அரைத்து வேப்பெண்ணெய் சேர்த்து அரணைகடி பட்ட இடத்தில் பூசி விட வேண்டும்.

**(வெள்ளைச்சாமி, எருமைக்குளம், புல்வாய்க்கரை, விருதுநகர்)**

## தேள்கடி

O மாட்டிற்குத் தேள் கடித்துவிட்டால் ; கருப்பு வெற்றிலை, மிளகு சிறிது அரைத்துத் தேள் கடித்த இடத்தில் வைத்தால் குணமாகிறது. (அல்லது) பொட்டாசியம் பெர்மாங்கனேட் சிறிய துகள்களை தேள்கடித்த இடத்தில் வைத்து அதன் மீது சிட்ரிக் அமிலம் அல்லது எலுமிச்சைப் பழச்சாறு விட்டால் குணமாகிறது.

**(ஆர்.நவநீதகிருஷ்ணன, உத்திரமேரூர், செங்கை)**

O தலைச் சுருளிவேர், கனுப்பூலாஞ்செடி வேர், விஷமல்லித் தழை, பெரியகீழாநெல்லி , சீரகம், வெள்ளைப்பூண்டு, மிளகு, வெள்ளைக் காகனத்தி வேர் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து உருண்டையாக உருட்டி மூன்று முறை உள்ளுக்குக் கொடுக்கலாம். (அல்லது) சிறியா நங்கை மற்றும் சிறு குறிஞ்சான் இலைகளை ஒரு கைப்பிடி அளவு அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**( அ. அண்ணாத்துரை, சித்தாலப்பாக்கம், படூர், செங்கை)**

O மாடு, ஆடு ஏதாவது விஷப்பொருட்களை சாப்பிட்டுவிட்டால் மொந்தன் வாழைத் தண்டைப் பிழிந்து சாறு எடுத்துக்கொடுக்கலாம். (அல்லது) சர்க்கரைவள்ளிக் கிழங்கு இலையைக் கொடுக்கலாம். மாடு அபாய நிலையில் இருந்தால் காதின் பின்பக்கம் இரு துளி ரத்தம் வெளியேறும்படி கீறி விட்டால் மாடு நல்ல நிலைக்கு வந்துவிடும்.

**( குருசாமி, பேச்சிப்பாறை, கன்னியாகுமரி)**

O நல்ல பாம்பு மற்றும் விரியன் கடித்தால் கடித்த ஓரிரு மணி நேரத்தில் வியர்வை காணும், உடல் நடுங்கும். உடல் வெப்பம் குறையும், நடை தளரும். மூன்று , நான்கு மணி நேரத்திற்குள் சாய்ந்துவிடும் மூக்கில் இரத்தம் வரும்.

முதலில் உடல் வெப்பம் ஏற நொச்சி, ஆடாதொடை மூலிகைகளின் இலைகளைப் பறித்து துணியில் பரப்பி அதன் மேல் தணலில் வெந்த ¼ பங்கு செங்கல்லை இலைளின் மேல் வைத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். இரு செங்கல்லை வைத்துக்



கொண்டு அடுப்பில் சுட்டு மாறி மாறித் தலை மற்றும் பிடரிப் பகுதிகளில் ஒத்தடம் கொடுக்க மாடு சுய நினைவிற்குத் திரும்பும்.

O நிலவேம்பு சூரணம், திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) சூரணம், புளியாரணை சூரணம் (புளியாரணைக் கிழங்கை மோரில் புட்டவியல் செய்து சூரணித்த). இவைகளை வகைக்கு 35 கிராம் எடுத்து கலந்து 150 கிராம் நல்ல வெல்லம் அல்லது பனை வெல்லத்தில் இடித்து 3 உருண்டைகளாகப் பங்கிட்டு நோயின் தன்மைகளுக்கு ஏற்ப மணிக்கு ஒரு தடைவ கொடுக்க பிழைத்துக் கொள்ளும். மூன்று நாட்களுக்கு வெந்நீர் ஆறவைத்துக் குடிக்கக் கொடுக்க வேண்டும். தவிடு, பிண்ணாக்கு முதலிய புஷ்டி தரும் ஆகாரத்தை நிறுத்தி வைக்கோல் மட்டும் தர வேண்டும். புல் கட்டிக் கொண்டால் குச்சியால் விலக்கி மருந்து கொடுக்க வேண்டும். கன்று ஈன்ற பசுவானால் பசுவை கன்றுகளுக்கு பால்கொடுக்க விடக் கூடாது. மூன்று நாட்களுக்கு கறந்த பாலையும் பயன்படுத்தக் கூடாது.

நிலவேம்பு என்னும் சிறியாநங்கை கிடைக்காவிடில் பெரியாநங்கையைப் பயன்படுத்தலாம். காய்ச்சல் கண்டாலும் இதனையே பயன்படுத்தலாம். 35 கிராம் மருந்து 3 வேளைக்கு போதுமானது. இத்துடன் 100 கிராம் வெல்லம் சேர்த்துக் கொள்ளலாம்.

**நரி வெங்காயத் தைலம் :** இது விஷமூங்கில் கிழங்கிலிருந்து எடுக்கப்படும். விஷத்தை உடன் முறிக்கக் கூடியது. கால்நடைகளுக்கு 2–3 அவுன்ஸ் அளவு (இனம், உடல் எடை முதலியவற்றிற்கு தகுந்தாற்போல்) கொடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு வெந்நீரும்,

வைக்கோலும் உண்ணக் கொடுக்க வேண்டும்.

**( பழனிவேல், அரசங்குடி, திருச்சி )**

O கன்றுக் குட்டிகள் ஏதாவது விஷப்பொருட்களைச் சாப்பிட்டு விட்டால் பூவாழைக் கிழங்கை துண்டுகளாக்கி, அரிசி களைந்த நீரில் போட்டு கொதிக்க வைத்து இதோடு 10 கிராம் நல்ல மிளகை தூளாக்கி போட்டு உள்ளே கொடுக்க வேண்டும்.

**(தங்கச்சாமி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி)**

## மாடுகளுக்கு வால் ரோமம் உதிர்தல், தோல்பத்துக்கு

O பெரிய கச்சக்காமுட்டி (பேய்குமட்டி) 5 காய், வீலி இலை (கைப்பிடி), 3 மிளகு, நல்ல சீரகம், கருஞ்சீரகம், 3 வெற்றிலை இவைகளை ஆட்டிக்கொட்டத்தில் சாறு எடுத்து 3 நாளைக்கு தொடர்ந்து ஊற்ற வேண்டும். அடுத்த 15 நாட்கள் இடைவெளிவிட்டு மீண்டும் 3 நாட்களுக்கு ஊற்ற வேண்டும். மொத்தம் மும்முறை இதேபோல் அனுசரிக்க வேண்டும்.

முதல் நாள் மருந்து கொடுக்க முன்னர் புல் போடக்கூடாது. காய்ந்த வைக்கோல் / தட்டை போடலாம். மருந்து கொடுக்கும் சமயம் தொடர்ந்து குளிப்பாட்ட வேண்டும்.

**(தர்மர் , அணைக்கரைப்பட்டி, மதுரை)**



O சிறியாநங்கை, கொல்லங்கோவை கிழங்கு, வெள்ளருகு போன்றவற்றை நன்கு அரைத்து மூன்று நாட்களுக்கு கொடுத்து வர குணமாகும். இம்மருந்து கொடுத்து சிகிச்சை செய்யும்போது மிகவும் புளித்த கழுநீர் குடிக்கக் கூடாது. நன்கு காய்ச்சி ஆறவைத்த நீரை மட்டுமே தீவனத்துடன் கொடுக்க வேண்டும்.

**(அழகர்சாமி, கோடாங்கிபட்டி, போடி)**

O விஷக்கடிக்கு கொல்லங்கோவைக் கிழங்கு, மிளகு, வெற்றிலை மூன்றையும் அரைத்த சாறு 200 – 250 மிலி., வரை 3 வேளை கொடுக்க வேண்டும். தோல்பத்திற்கு இதே மருந்து மாதம் இருமுறை கொடுக்கலாம். விஷப்பூடு இலை, போன்றவற்றை மாடு சாப்பிட்டு விட்டால் விஷத்தை முறித்து, வயிற்றைச் சுத்தம் செய்ய எலுமிச்சம்பழச் சாறுடன்விளக்கெண்ணெய் சேர்த்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு ஏற்படும் தோல் பத்து, தோல் தடிப்பு போன்றவற்றிற்கு கசாயம் இறக்கி உடம்பில் தேய்க்க வேண்டும்.

**(ஆர். நவநீதகிருஷ்ணன், உத்திரமேரூர், காஞ்சிபுரம்)**

## கடைபிடிக்கக் வேண்டியன

**O** விஷ முறிவு ஏற்பட்ட பிறகு தீவனத்தை கொஞ்சம், கொஞ்சமாக அதிகப்படுத்த வேண்டும்.

குடிநீர் அதிகளவில் தேவை, நாக்கில் சோத்துப் உப்பை தேய்த்தால், தண்ணீர் குடித்து முடித்த பிறகு மேலும் சிறிது தண்ணீர் குடிக்கும்.

**விரியன் பாம்பு கடி :** நன்னாரி வேர் 25 கிராம், சோற்றுக் கற்றாழை ஒரு மடல், நஞ்சறுப்பான் செடி ஒரு கைபிடி அளவு எடுத்து அரைத்து நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**O** தோலில் விஷக்கடியினால் ஒரு ரூபாய் நாணயம் அகலத்திற்கு வட்ட வட்டமாய் பத்து போன்று ஏற்பட்டால் தலைச்சுருளி வேர், ஓமம், கருஞ்சீரகம், வால்மிளகு, திப்பிலி ஒவ்வொன்றிலும் 10 கிராம் எடுத்து இடித்து உள்ளே தர வேண்டும்.

**(கருப்பையா, கீழத்தானியம், மானாமதுரை, சிவகங்கை)**

O ஆகாசக் கருடக் கிழங்கு (கொல்லங்கோவை ), உரிக்கா வேர் (தலைச்சுருளி வேர்), சிறியாநங்கை இலை, பெரியாநங்கை இலை, ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து 100 கிராம் எடுத்து வெள்ளாட்டுப்பாலில் கலந்து ஒரே வேளையில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(பெரியவேலுச்சாமி, பழனிகவுண்டன் வலசு, தாராபுரம்)**

O வெள்ளெருக்கு வேர், சங்கம் வேர், கொல்லங்கோவை கிழங்கு, சரக்கொன்றை இலை, சிறியாநங்கை இலை, தலைச்சுருளி வேர் , விஷமல்லிச் கொடி ஆகிய ஒவ்வொன்றிலும் 250 கிராம் வீதம் எடுத்து நிழலில் உலர்த்தி சேர்த்து இடித்து **தூள்** செய்து வைத்துக் கொண்டு தேவையான போது 25 கிராம் **தூள்** ஒரு நாளைக்கு ஒரு மாட்டிற்கு போட சரியாகும். சுரியாவில்லை எனில் மேலும் ஒருவேளை போட வேண்டும்.

**(வெள்ளை, சல்லிக்கோடாங்கிபட்டி, மதுரை)**



O பெருங்கிழங்கு வேர், நஞ்சறுப்பான் செடிவேர், வெள்ளை எருக்கு இலை 10 கிராம் அரைத்து உள்ளுக் கொடுக்க குணமாகும்.

**(எ. ஜெயராமன், வண்டிப்பாளையம், விழுப்புரம)**

O வெள்ளருகு, அருகம்புல், கருடன்கிழங்கு, எருக்கங் கொழுந்து, வேப்பங்கொழுந்து ஆகியவற்றில் 50 கிராம எடுத்து நிழலில் உலர்த்தி பொடி செய்து 10 கிராம் வீதம் 7 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**(வெற்றிவேல், சிறுகளப்பூர்,**

O அரணை கடிக்கு, செய்யான் எனப்படும் ஒருவித விஷ பூச்சிகடித்தல் ; செய்யான் பூண்டு எனப்படும் செடியை எடுது அரைத்து எலுமிச்சை அளவு 3 நாட்களுக்கு ஒருவேவைள வீதம் கொடுத்தால் சரியாகிடும்.

**(தஞ்சிகாண், தாழங்குளம், செஞ்சி, விழுப்புரம்)**

O சிறுகுமட்டி வேர் 50 கிராம் ஈசுவர மூலிகை 50 கிராம், கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம், விஷமல்லி இலை 200 கிராம், சீரகம் 50 கிராம் இடித்து வெந்நீரில் காய்ச்சி ஆறவைத்து 3 வேளை உள்ளுக்குக் கொடுத்தால் விஷம் இறங்கும்.

**(பெரிய அய்யாவு, சல்லிக்கோடாங்கிபட்டி, மதுரை)**

O சிறுகுறிஞ்சான், பெருங்குறிஞசான், வெள்ளருகு, மல்லி தழை, பெருந்தும்பை (இரட்டை பேய்மிரட்டி) செய்யான் பூண்டு ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து எலுமிச்சம்பழ அளவு 3 வேளை வீதம் 3 நாட்கள் புகட்ட வேண்டும்.

O நிலவாகை இலை, நாட்டு வாகை, வெள்ளருகு, குப்பைமேனி, காப்புக்கட்டுச் செடி ஆகிய ஒவ்வொன்றிலும் வேர் 1 எண்ணம், கொல்லங்கோவைக் கிழங்கு ½ கிலோ, சின்னவெங்காயம் 1 கிலோ, வெள்ளை மிளகு, சின்னசீரகம் ஆகிய ஒவ்வொன்றிலும் 100 கிராம் இவற்றை எல்லாம் உரலில் போட்டு மசிய ஆட்ட வேண்டும். ஆட்டிய மருந்தை ஒரு கைபிடியளவு துணியில் போட்டு மாட்டின் கண்ணில் ஒரு சொட்டு அளவு பிழிந்துவிட வேண்டும். மீதியுள்ள மருந்தை எடுத்து உருண்டையாக மாட்டின் வாயில் உள்மருந்தாக ஊட்டிவிட வேண்டும். இந்த மருந்தை காலை, மாலை என நாள் ஒன்றுக்கு 2 வேளை வீதம் 3 நாள் வரை கொடுக்க வேண்டும்.

**(பெரிய ஒச்சாமுப்பர், எருமார்பட்டி, உசிலம்பட்டி, மதுரை)**

O வாகை மரப்பட்டை 250 கிராம் இடித்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். 10 கிராம் சீரகம் அரைத்து இரண்டையும் ¼ படி தண்ணீரில்கலந்து உள்ளுக் கொடுக்க வேண்டும்.

**(முத்து, மணப்பச்சேரி, கொட்டாம்பட்டி, மதுரை)**

O புளியாரை கிழங்கு 100 கிராம் புட்டவியல் செய்து நிலவேம்பு 10 கிராம், திரிகடுகு சூரணம் 10 கிராம், ½ கிலோ வெல்லம் சேர்த்து இடித்து காலை, மாலை, மற்றும் மறுநாள் காலையாக 3 வேளை உள்ளுக் கொடுக்க வேண்டும்.

**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**

O எருக்கஞ்செடியின் நுனிகொத்து 15 கிராம் எடையில் 3 எடுத்து ஒன்றன்பின் ஒன்றாகத் திண்ணத் தர வேண்டும்.

**(தங்கச்சாமி தேவர், ஆவாரங்குளம், விருதுநகர்)**



O பீலி (பூலப்பூ / காப்புக்கட்டுச் செடி) 50 கிராம், மிளகு 10 கிராம் சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும் (அல்லது)தலைச்சுருளி வேர் ஒரு அங்குலம் அளவு (10 கிராம்) வீதம் இடித்து தண்ணீருடன் கலந்து காலை, மாலை 2 வேளை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O சிறுகுறிஞ்சான் இலை 100 கிராம், கொல்லங்கோவை கிழங்கு25 கிராம், முட்சங்கு வேர் 50 கிராம், விஷமல்லி கொடி 25 கிராம், சிறியாநங்கை 100 கிராம், தலைச்சுருளி வேர் 50 கிராம் எல்லாவற்றையும் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(வெள்ளை, சல்லிக்கோடாங்கிபட்டி, மதுரை)**

O செங்கழிந்தபட்டை 50 கிராம், சிறியாநங்கை 50 கிராம், பெருமருந்து கொடி (கருடங்கொடி) இலை 50 கிராம் எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து கவாளமாக காலை, மாலை 2 வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O சிறுதும்பை 10 கிராம், மிளகு 7, சிறுவெங்காயம் 1 இந்த மூன்றையும் தட்டி துணியில் பிழிந்து சாறு எடுத்து 4 சொட்டு கண்ணில் விட வேண்டும். (அல்லது) தும்பை சாறு 250 மிலி எடுத்து இதனுடன் 11மிளகு பொடி செய்து கலந்து உள்மருந்தாக 2 வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

# 27. வெறி நாய் கடிக்கு

**அறிகுறிகள்**

வெறி நாய் கடியின் குணத்தால் ஈயை, காக்காயைத் துரத்தும், எஜமானனைத் துரத்தும், கன்றைக் கடிக்கும். கண்ணாடி காண்பித்தால் பாயவரும். கல்லைக் கடிக்கும். வாயில் உமிழ்நீர் ஒழுகிக்கொண்டிருக்கும்.

## வைத்தியம்

O உரிக்கட்டி வேர் ( தலைச்சுருளி) 5 கிராம், அழிஞ்சில் மரப்பட்டை 5 கிராம், பீமரப்பட்டை 5 கிராம் மூன்றையும் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**(எம். சுப்பிரமணியம், சின்னேரிபாளையம், பொள்ளாச்சி, கோவை)**

O மிளகு தக்காளி என்று கூறப்படும் மணத்தக்காளி இலைகளை கைப்பிடி அளவு எடுத்து வேப்பஎண்ணெயில் வதக்கி கடிவாயில் வைத்து கட்ட வேண்டும். இத்துடன் பேய் மிரட்டி இலையை 200 கிராம் அளவு இடித்து சுடு தண்ணீரில் கலந்து 7 நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும்.

**( ஆறுமுகம், சிறுமாம்பட்டி, கரூர்)**

O நாயுருவி இலையை 100 கிராம் வீதம் 200 மி.லி. வெள்ளாட்டு பாலில் கலந்து தினமும் மாலை ஒரு வேளை வீதம் 7 நாட்கள் கொடுத்து வரவேண்டும்.

**(பாலன், கடவூர், கரூர்)**



# 28. பேன், உண்ணிகள்

O உப்பு, பொடி செய்யப்பட்ட கற்பூரம் இவைகளைச் சம அளவு எடுத்து புங்க எண்ணெய் உடன் கலந்து மாட்டின் உடம்பு முழுவதும் பூசிவிட வேண்டும். பிற மாடுகள் அவற்றை நக்கி விடாதவாறு இரவு வேளையில் செய்வது நல்லது.

**(வினாபென்படேல், வல்சாத், குஜராத்)**

O பீநாரி மரத்தின் இலையை ஒரு கிலோ எடுத்து நீர் விட்டு அரைத்து தினமும் காலையில் உடலெங்கும் பூசவேண்டும்.

**(மேரிடிசோசா, மலைவாழ் மக்கள் மருத்துவம், மகாராஷ்டிரா)**

O வசம்புத்தூளைத் துளசிச்சாறுடன் கலந்து உடம்பின் மேல் பூசுவதாலும் (அல்லது) சீத்தாப்பழப்பிஞ்சு, இலை இவற்றை அரைத்து பூசினாலும் கால்நடைகளுக்குப் பரவும் பேன், உண்ணி, மாட்டு ஈ போன்ற ஒட்டுண்ணிகளைத் தவிர்க்கலாம்.

**(ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி)**

O அந்துருண்டையை 10 கிராம் அளவு பொடி செய்து 100 மி.லி. நல்லெண்ணெய்யில் கலந்து உடம்பு முழுவதும் தேய்த்துப் பின் குளிப்பாட்டி விட வேண்டும்.

**(சுல்தான், சித்தரேவு, அய்யம்பாளையம், திண்டுக்கல்)**

O தும்பைத் தழையை ஒரு கிலோ அளவு எடுத்து அரைத்து உடம்பு முழுவதும் பூசவேண்டும்.

**(முத்துசாமி, கோட்டக்கரை, குளித்தலை, திருச்சி)**

O உடம்பு கடுக்காய் 4 எடுத்து தூளாக்கி நல்லெண்ணெய் 100 மி.லி. சேர்த்து உடம்பு முழுவதும் தடவி விட வேண்டும்.

**(சஞ்சீவி, கௌரிசெட்டிப்பட்டி, பொன்னகரம், தருமபுரி)**

O சீத்தாப்பழ விதை ஒரு கிலோ, வேப்பங்கொட்டை ஒரு கிலோ மற்றும் புகையிலை 200 கிராம் மற்றும் புகையிலை 200 கிராம் மூன்றையும் இடித்து இரண்டு லிட்டர் நீரில் ஒரு நாள் ஊற வைத்து இதனை உடம்பு முழுவதும் தேய்க்க வேண்டும். இம்முறை தாய்லாந்து நாட்டில் பின்பற்றப்படுகிறது.

**(ஆசியா கண்டகால்நடை மூலிகை வைத்தியகையேடு)**

O ஒரு கிலோ துளசி இலையுடன் 100 கிராம் சுக்கு சேர்த்து அரைத்து நான்கு படி தண்ணீர் கலந்து, மாடு குளிப்பாட்டிய பிறகு உடல் முழுவதும் தேய்க்க உண்ணி, ஈ ஒட்டாது. பின்னர் சாம்பிராணி புகை காட்ட வேண்டும்.

**(வேலு,உச்சப்பட்டி, திருமங்கலம், மதுரை)**

O ஆடு, மாடுகளின் உடல்மேல் காணப்படும் பேன் போன்றவற்றை அழிக்கப் புகையிலையை 300 கிராம் அளவு எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு மணிநேரம் ஊறவைத்து அந்த கரைசலில் 50 கிராம் உப்பு சேர்த்து உடலில் பூசினால் பேன் இறந்துவிடுகிறது. இதனால் மாடுகளுக்கு எந்த பாதிப்பும்

ஏற்படாது. மாடு உடலை நக்கினாலும் பாதிப்பு இல்லை.

**(கண்ணப்பன், பாரூர், தர்மபுரி)**

O சங்கங்குப்பி எனப்படும் பீநாரிச்சங்கு (Clerodendron inerme) இலையை ஒரு கிலோ எடுத்து, இடித்து மாட்டின் உடல் முழுவதும் தேய்த்துவிட்டு, வெயில் படுமாறு நிறத்தி வைக்க வேண்டும். ஒரு மணி நேரம் கழித்து குளிப்பாட்டி விடுவதால் உடலிலுள்ள பேன் உண்ணிகள் போன்றவை உதிர்ந்த விடுகின்றன.

**( அழகர்சாமி, கோடாங்கிப்பட்டி,போடி)**



O பேய்குமட்டிக்காய் 4 எடுத்து அரைத்து உடல் முழுவதும் தேய்த்து விட வேண்டும். பின்னர் 4 நாட்கள் கழித்து குளிப்பாட்டிவிட வேண்டும்.

**( மூக்கன், மேலஉரப்ப னூர் திருமங்கலம், மதுரை)**

O சோற்றுக்கற்றாழை தேவையான அளவு இடித்து 1 லிட்டர் சாறு எடுத்து கால்நடைகளின் உடல் முழுவதும் பூசி விடவேண்டும்.

**(வெள்ளை,சல்லிகோடாங்கிபட்டி, பாலமேடு, மதுரை)**

O உசிலை இலை அரை கிலோ அரைத்து கண்மாய் கரம்பை மண் 1 கிலோ எடுத்து இத்துடன் நீர் விட்டு குழைத்து 1 முதல் 3 நாட்கள் காலை வேளை மட்டும் மேல் பூச்சாக பூசி மாலையில் குளிப்பாட்டிவிட வேண்டும்.

**(இராமு, இலுப்பகுடி, சிவகங்கை)**

O சிறுதும்பை சாறு 500 மி.லி. எடுத்து சிறிது நேரம் வெயில் வைத்து இத்துடன் கட்டி சூடம் 2 எண்ணம் சேர்த்து கரைத்து ஒரு வேளை மட்டும் பூசிவிட வேண்டும். மாலையில் தும்பைச் செடியை தேய்த்து குளிப்பாட்டி விடவேண்டும்.

**(பழனிவேலு, அரசங்குடி, திருச்சி)**

O புரசு மர இலை (வம்மரை) 2 கைப்பிடி எடுத்து இடித்து இதனை வெள்ளாட்டு கோமியம் 250 மி.லி. யுடன் கரைத்து இலைச சக்கையை நீக்கிவிட்டு சாறை மட்டும் கால்நடைகளின் உடல முழுவதும் ஒரு வேளை தேய்த்து விட வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O கழிவு புகையிலை 300 கிராம் மற்றும் சீதா பழமர இலை 200 கிராம் இவைகளை ஒரு லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து மாட்டின் மேல் பூச வேண்டும்.

**(கண்ணப்பன், பாரூர், தருமபுரி)**

# 29. சரீர பலம், இரத்த விருத்திக்கு

O சூரத்தழை, காரைத் தழை, மின்னத்தழை, மிஸ்டத்தழை, நெருஞ்சித்தழை, ஆனை நெருஞ்சித்தழை அனைத்தும் 200 கிராம் வீதம் சேர்த்து ஆட்டி இரண்டு வேளை மாட்டிற்கு ஊற்ற வேண்டும். (அல்லது) தழுதாழை இலை, மூங்கில் குருத்து, கோழி முட்டை மூன்றையும் சேர்த்து இடித்து 100 மி.லி நல்லெண்ணெய் சேர்த்து பிசைந்து நான்கைந்து கவளங்களாக உருட்டி உள்ளுக்கு ஊட்டினால் சகல நோய்களும் தீரும். உடல் வலுப்பெறும். புது இரத்தம் ஊறும்.

**( கோவிந்தன், செல்லியம்பாளையம், சேலம்)**

O வீலி இலை அரை கிலோ, சீரகம் 50 கிராம், சிறு வெங்காயம் 250 கிராம் ஆகியவற்றை மொத்தமாக அரைத்து இத்துடன் கோழி முட்டை சேர்த்து தினமும் காலையில் ஒரு வாரத்திற்கு உள்ளே புகட்ட வேண்டும்.

**(ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி, விருதுநகர்)**

O வசம்பு, பெருங்காயம், மிளகு, ஓமம், வெந்தயம், கடுக்காய், சுக்கு, இந்துப்பு (எப்சம் சால்ட்) ஒவ்வொன்றும் 10 கிராம் மற்றும் அமுக்கிரா கிழங்கு 50 கிராம் ஆகியவற்றை தனித்தனியாக நன்கு அரைத்து பின் ஒன்றாகக் கலந்து கால்நடைகளுக்கு டானிக்காக கொடுத்து வர வேண்டும்.

**(அசோக்குண்டே, பிள்ளையார்குப்பம், பாண்டிச்சேரி)**



O மஞ்சள், ஓமம், கஸ்தூரி மஞ்சள், அரிசி திப்பிலி, வால்மிளகு, வலம்புரிக்காய், சீரகம், கருஞ்சீரகம் ஆகிய ஒவ்வொன்றிலும் 20 கிராம், சின்ன வெங்காயம்1படி, சதகுப்பை 10 கிராம், கிராம்பு 20 கிராம், ஏலம் 20 கிராம், மல்லி 20 கிராம், கச்சக்குமட்டி வேர் 1 பிடி, மூங்கில் துார் கிழங்கு 1, தேங்காய் 2 இவற்றை இடித்து நல்லெண்ணெய் அரை லிட்டரில் பிசைந்து எலுமிச்சம்பழ அளவு உருண்டை ஒரு நாளைக்கு இரண்டு வீதம் 5 நாட்களுக்குள் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(முத்துராஜ் , குருந்தமபட்டி, திண்டுக்கல்)**

O புளியம்பிரண்டை கிழங்கு நான்கை அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். இம்முறை 3 நாட்களுக்கு காலையில் பின்பற்ற வேண்டும்.

**(பெரியசாமி, பழனிகவுண்டன் வலசு, தாராபுரம், ஈரோடு)**

# 30. பால் அதிகம் கறக்க

## பால் குறைய காரணங்கள்

வளர்ச்சி குறைவு; பால் மடி இறுக்கம்சினை பருவத்தில் கடைசி 60 நாட்கள் தொடர்ந்து விடாமல் பால் கறப்பது; சினை பருவத்தில் கடைசி 80 நாட்கள் போதிய அளவு அடர் தீவனம் இல்லாதிருப்பது; மாடு பலவீனமாக இருப்பது; உடலில் தாது உப்புகள், வைட்டமின் குறைவு; மாசி விழாமல் அடிதள்ளுதல்; சுண்ணாம்பு சத்து குறைவு; காணை நோயால் பாதிப்படைதல் ; செரிமாண நோய்களால் பாதிப்படைதல்கொம்பு அறுத்தல், சுடுதல் போன்றவற்றால பால் குறைகிறது.

## வைத்திய முறை

O பால் அதிகம் கறக்க சுரக்காய் 1 கிலோவுடன் வெந்தயம் 100 கிராம், தேங்காய் 1 ஊற வைத்து உளுத்தம்பருப்பு 500 கிராம், பனை வெல்லம் 500 கிராம் ஆகியவற்றை நன்கு ஆட்டி, தினம் ஒரு வேளை வீதம் 5 நாட்களுக்கு கொடுத்து வந்தால் பாலின் அளவு அதிகரிக்கும்.

**(எஸ். முனியான்டி, தேவரப்பன்பட்டி, திண்டுக்கல்)**

O பெருஞ்சீரகம், நெய், வெல்லம் மூன்றையும் கலந்து உருண்டையாக செய்து காலை மற்றும் மாலை வேளைகளில் சில நாட்கள் உணவாகக் கொடுக்கலாம். அல்லது சீந்தில் தண்டை பிண்ணாக்குடன் கலந்து கொடுத்தும் பால் கறவையை அதிகப்படுத்தலாம்.

**(வனஸ்பதி சம்வர்த்தன் – சீக்ஷாக் –மகாஜன் எழுதிய புத்தகம்)**



O பால் மாடுகளில் கறவையைக் கூட்ட பருத்திக்காய், கம்பு, வேலாமர நெற்றுக்கள் இம்மூன்றையும் நீரில் வேக வைத்து பால் கறக்கும் சமயம் திண்ணக் கொடுக்க வேண்டும். இது தவிர மாம்பழக் கொட்டையிலுள்ள பருப்பையும் மாடுகளுக்கு கொடுப்பதின் மூலம் பால் அதிகம் பெறலாம்.

**(மகன்பாய் சவ்ஜிபாய் கூன்ட், ராஜ்காட், குஜராத்)**

O வெந்நீர் 3 லிட்டரில் அரை கிலோ பச்சரிசியை நனைய வைத்து அரை கிலோ கோதுமை மாவுடன் ஆட்டி, நன்கு முற்றிய தேங்காய் ஒன்று எடுத்து துருவி சேர்த்து ஆட்டி மாட்டிற்கு தின்னக் கொடுக்க வேண்டும். பின்பு நாட்டு வாழைப்பழம் ஐந்து கொடுத்திட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் கொடுக்க பால் தொடர்ந்து அதிகம் கொடுக்கும்.

**( ப. காளியப்பன், வ. புதுப்பட்டி, வத்திராயிருப்பு, விருதுநகர்)**

O வறுத்து அரைத்த கம்பு மாவுடன் சுரைக்காய சேர்த்து உள்ளே புகட்டினால் பால் அளவு கூடுகிறது. (அல்லது)

முயல்காது இலை செடியின் கிழங்கு எடுத்து மாடு சினையாகி 4 மாதம் கழித்த பின் திண்ணக்கொடுத்து விட்டால் அதிக பால் தருகிறது. (ஆனால் இது மாட்டிற்கு அதிக சூட்டைத் தருவதால் அதன் உடல் நிலை பாதிக்கும். பால் மாடுகளில் கறவையை கூட்ட பருத்திக்காய், கம்பு, வேலாமர நெற்றுக்கள் இம்மூன்றையும் நீரில் வேக வைத்து பால் கறக்கும் சமயம் தின்னக் கொடுக்க வேண்டும். இது தவிர மாம்பழக் கொட்டையிலுள்ள பருப்பையும் மாடுகளுக்கு கொடுப்பதின் மூலம் பால் அதிகம் பெறலாம்.

**( மகன்பாய் சவ்ஜிபாய்கூன்ட், ராஜ்காட், குஜராத்)**

O மனமுருக்கி பச்சிலை 300 கிராம் எடுத்து இடித்து, சாறு எடுத்து அதே மாட்டின் பால் அரை லிட்டர் எடுத்து கலந்து கொடுத்தால் மனமுருகி பால் சுரக்கும்.

**(பெரிய அய்யாவு, சல்லிகோடாங்கிபட்டி , பாலமேடு, மதுரை)**

O வீலிகொழுந்து இலை அரை கிலோவுடன் 1 லிட்டர் பால் கலந்து அரைத்து உள்ளே புகட்ட வேண்டும். 3 நாட்கள்தினமும்2 வேளை தர வேண்டும்.

**(வெளியப்பன், காமயகவுண்டன்பட்டி, தேனி)**

O படிகாரம் 5 – 10 கிராம், சுத்தமான 500 மி.லி. நீரில் கரைத்து பால் கறக்கும் முன்பாக மாட்டுக்கு கொடுக்க வேண்டும்.

O இரவு முழுவதும் நீரில் ஊறவைத்த மேல் தோல் நீக்கப்பட்ட புளியம் விதைகளை ஒரு நாளுக்கு அரை கிலோ வீதம் தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

O பாலக்கொடி (Leptodenia reticulate) மாங்கொட்டை, அமுக்கிரா கிழங்கு, மலை வேம்பு இலை, வேம்பு போன்ற 4 பொருட்களையும் சமபங்கு எடுத்து அரைத்து ஒரு நாளைக்கு 30 கிராம் வீதம் 10 நாட்களுக்கு கொடுத்து வந்தால் பால் அதிகரிக்கும். இதே வைத்தியத்தை சினை பிடிக்காத, பருவத்திற்கு வராத மாடுகளுக்கும் அளித்தால் பலப்படும்.



O சிறிதளவு மஞ்சள், ஒரு பிடி பச்சரிசியுடன் அம்மான் பச்சரிசி இலை 200 கிராம் சேர்த்து அரைத்து, தேங்காயின் ஒரு கண்ணைத் துளையிட்டு, அரைத்த சாற்றை அதனுள் ஊற்றி 3 நாட்கள் மூடி வைக்க வேண்டும். பிறகு தேங்காயை உடைத்து, அரைத்து 3 நாட்களுக்கு காலை, மாலை இரு வேளையும் கொடுத்து வந்தால் பால் அதிகம் கறக்கும்.

**(அழகர்சாமி, கோடாங்கிபட்டி, தேனி)**

O ஊற வைத்த உளுந்தம்பருப்பு அரைக் கிலோவுடன் ஒரு தேங்காயைச் சேர்த்து அரைத்துக் கொடுக்க வேண்டும். கம்பு, தட்டைப்பயறு இரண்டையும் ஊறவைத்து ஆட்டிக்கொடுப்பதாலும் பால் நன்றாக சுரக்கும்.

**( செல்வக்குமார், செம்பட்டி, திண்டுக்கல்)**

O மொசக்கிழங்கு, சுரக்காய், அவரைக் கொட்டை (மொச்சைப்பயறு) இவைகளை ஒவ்வொன்றும் கால் கிலோ அளவு எடுத்து அரைத்து ஒரு வேளை உள்ளே கொடுக்க வேண்டும்.

**(ராஜப்பா, எருமத்தனப்பள்ளி, தருமபுரி)**

O சீந்திக்தண்டு அரைக்கிலோ, பனங்கருப்பட்டி கால்கிலோ ஆகியவற்றை அரைத்துப் பசுவின் பால் கால் லிட்டரில் கரைத்து கொடுத்தால் பால் அதிகம் சுரக்கும்.

**(வி.ஆர். ஐயப்பன், சுக்காம்பட்டி, திண்டுக்கல்)**

O சுண்ணாம்புக்கல் ஒரு கிலோவை 5 லிட்டர் நீரில் மண்பானையில் ஊறல் வைத்து தெளிந்த நீரை 200 மி.லி. எடுத்து வாரத்திற்கு இரு முறை பருகும் நீரில் கலந்த விடலாம். தினமும் 200 மி.லி. நீர் மண்பானையில் ஊற்றிகொண்டு வரவேண்டும்.

**(கோமதிநாயகம், புளியங்குடி, நெல்லை)**

O கம்பு அரைத்தும், கழிவு கத்திரிக்காய் 1 கிலோ அளவும் கொடுத்தால் பால் ஊறும். குச்சிக் கிழங்கை 100 –200 கிராம் எடுத்து இடித்து தின்னக் கொடுக்கலாம். சுரைக்காயை நறுக்கி வேகவைத்துத் தவிட்டுடன் கொடுத்தால் பால் அதிகம் சுரக்கும். உசிலந்தழையை 5 கிலோ தின்ன விட்டால் மாடு நுரையான பாலுடன் அதிகமாகவும் சுரக்கும்.

**( ஆறுமுகம், கொளையாப்பட்டி, திருமயம், புதுக்கோட்டை)**

O துலக்க வேம்பு எனப்படும் மலை வேம்பு மர (Melia dubia) இலையை மாட்டுக்கு 5 – 10 கிலோ வரை தின்னக் கொடுத்தால் பால் உற்பத்தி அதிகமாகும். ஆட்டுக்கு 5 கிலோ வரை கொடுக்கலாம். இம்மரத்தின் தழையை கலப்பின பசுக்கள் விரும்பி சாப்பிடும். எருமை மாடுகள் விரும்பி இத்தழையை சாப்பிடாது.

**(ஆர்.மதலை முத்து, சேசுராஜபுரம், தென்கனிக்கோட்டை, தருமபுரி)**



O பருத்திவிதை 200 கிராம், காணம் (கொள்ளு) 200 கிராம், பச்சைக்கடலை 200 கிராம் மூன்றையும் ஊறவைத்து ஆட்டி நீரில் கலக்கிவிட்டால் காளை மாட்டுக்கு பலம் உண்டாகும். இதே தீவனத்தை பசுமாட்டிற்கு கொடுத்தால் பால் அதிகம் சுரக்கும். மக்காச்சோள மாவை அரை படி அளவு குடிநீரில் கலந்து கொடுத்தாலும் பால் உற்பத்தி கூடும்.

**( வி.ஆர்.ஐயப்பன், சுக்காம்பட்டி, திண்டுக்கல்)**

O மனமுருக்கி பச்சிலை (பால் பெருக்கி / இலையில் பூத்தான் / பிடில் இலை) செடியின் ஒரு கையளவு இலையை அரைத்து 1 லிட்டர் பாலுடன் கலந்து காலையில் மட்டும் 3 நாட்கள் கொடுக்க வேண்டும். இத்துடன் ஊட்டசத்து நிறைந்த உணவு கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**

O வெள்ளை பூலான் பழம் 1 கிலோ, கம்பு அரை கிலோ, உளுந்தம் பருப்பு 250 கிராம், வெந்தயம் 100 கிராம், அவரை பயறு 100 கிராம், சுரைக்காய் 1 ஆகியவற்றை மொத்தமாக ஆட்டி 3 பாகமாக பிரித்து காலை, மாலையாக 3 வேளை கொடுக்க வேண்டும்.

**(சின்னண்ணன், பேடரல்லி, தருமபுரி)**

O சதாவரி எனக் கூறப்படும் தண்ணீர் விட்டான் கிழங்கு பொதுவாக பால் உண்டாக்கும் தன்மையைக் கூட்டும். இதனை சோதித்துப் பார்க்க மும்பையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பால் கொடுக்கும் எருமைக்கு சதாவரி கிழங்கை தூள் செய்து 25 கிராம்

ஒரு நாளைக்கு 2 வேளை கலப்புத் தீவனத்துடன் கலந்து கொடுக்கப்பட்டது. இது 10 நாட்கள் தொடர்ந்து கொடுக்கபட்டதில் $7^{3/4}$ லிட்டர் வரை பால் கொடுத்த எருமைகள் $8^{1/2}$ லிட்டர் வரை கூட்டி தந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

**(பசுதான் பிப்ரவரி –2005)**

### பால் சுரக்கும் ஆடுகளுக்கு

O ஆட்டிற்கு நிலக்கடலையும் உளுந்தம் பருப்பையும் அரைத்துக் கொடுக்க பால் அதிகமாகச் சுரக்கின்றது. வெந்தயத்தை அரைத்துச் சர்க்கரை ஆலைப்பாகுடன் கலந்து கொடுப்பதால் பால் சுரக்கும் திறன் அதிகரிக்கின்றது.

**( ஓசா, மத்திய ஆட்டு ஆராய்ச்சி நிலையம், மதுரா)**

O ஆணக்குத்தழை, முசுட்டைத்தழை, அகத்திதழை, அம்மான் பச்சரிசி தழை, பொன்னாங்கண்ணி தழை போன்றவைகளைத் தீவனமாகக் கொடுக்க பால் அதிகம் ஊறும்.

**(தங்கராஜ், சித்தரேவு, திண்டுக்கல்)**



## 31. குதிரை வலிப்பு நோய்

### அறிகுறிகள்

நான்கு கால்களும் சுண்டி இழுக்கும் ; மார்பில் வலி இருக்கும்; கண் சுருங்கி இழுக்கும்.

### வைத்திய முறைகள்

O வேலிப்பருத்தி இலையை 200 கிராம் அளவு எடுத்து, அரைத்து 200 மி.லி. வேப்பெண்ணெயில் கலந்து கொடுக்க வேண்டும்.

**(வெள்ளைச்சாமி, எருமைக்குளம் , புலவாய்க்கரை, விருதுநகர்)**

O சூரத்தவரைக் கீரையை 200 கிராம் அளவு எருமை மோரில் அரைத்து இரு வேளையில் மூன்று நாட்களுக்கு உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O வேப்பெண்ணெய் 1லிட்டர் அளவு எடுத்து நன்கு காயவைத்து பின்னர் வேலிப்பருத்தி இலையை துணியில் கட்டிக் கொண்டு காய்ந்த எண்ணெயில் துணி மூட்டையை நனைத்து எடுத்து கால்நடைகளுக்கு ஒத்தடம் தரவேண்டும்.

**(தங்கச்சாமித் தேவர், ஆவாரங்குளம், விருதுநகர்)**

O கொடிக்கள்ளி இலை 50 கிராம், கண்டந்திப்பிலி 25 கிராம், ஓமம் 25 கிராம், சாம்பிராணி 10 கிராம், மாம்பழம் 1, உத்தாமணி இலை 100 கிராம், பூண்டு 50 கிராம், மிளகு 50 கிராம், எருக்கம் மொக்கு 25 கிராம் அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து 2 வேளை 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**(ஜெகந்நாதன், ஆய்மூர், நாகப்பட்டிணம்)**

O வேப்பெண்ணெய் 1 லிட்டர், இலுப்பை எண்ணெய் 100 மி.லி.,வெள்ளை மிளகு 100 கிராம், திப்பிலி 50 கிராம், வால்மிளகு 100 கிராம், கூட்டு பெருங்காயம் 10 கிராம் எடுத்து திடப்பொருள்களை எல்லாம் சேர்த்துப் பொடியாக்க வேண்டும். பின்னர் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். காய்ச்சிய எண்ணெயை 100 மி.லி. அளவிற்கு உள்மருந்தாக கொடுக்க வேண்டும். இந்த முறையை காலை. பகல், மாலை என நாள் ஒன்றுக்கு 3 வேளை வீதம் 5 நாள் வரை தொடர்ந்து கொடுக்க வேண்டும். மாட்டை குளிப்பாட்டக் கூடாது.

**(பெரிய ஒச்சாமூப்பர், வளையம்பட்டி, எருமார்பட்டி, மதுரை)**

O ஈஸ்வரமூலிகை இலை 1 கைப்பிடி அளவு எடுத்து அரைத்து புளித்த நீர் 1 லிட்டர் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளையாக 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரை கோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**



# 32. தவளை நோய்

## அறிகுறிகள்

தவளையைப் போல் தத்தி தடுமாறி நடக்கும். படுத்தால் எழுந்து நிற்கமுடியாது, தொப்புள், மார்பு, இவ்விடங்களில் கட்டி போல் வீங்கும்.

## வைத்திய முறைகள்

O முடநாரி என்ற வாதமடக்கி இலை ஒரு கிலோ, சிறு வெங்காயம் கால் கிலோ, சீரகம் 100 கிராம் ஆகியவற்றை அரைத்து ஒரு படி நீரில் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளைகள் குணமாகும் வரை புகட்ட வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி. கிருஷ்ணாபுரம், மதுரை)**

O கற்பூரவல்லி இலை, சங்கம் இலை ஒவ்வொன்றும் 200 கிராம் எடுத்து சாறு எடுக்க வேண்டும். மஞ்சள், கல் உப்பு, மிளகு, ஓமம் ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து அரைத்து மேற்படி சாற்றில் கலந்து ஒரு நாளைக்கு இரு வேளை கொடுக்க வேண்டும். இதனை 1 வாரம் செய்து வர வேண்டும்.

**(சரபேந்திரர் வைத்திய முறைகள் – 1986)**

# 33. கரணை நோய்


## அறிகுறிகள்

கரணை நோய் வந்த கன்றுகள், மாடுகளுக்கு தடித்த, நீட்டமாக ரோமம் அப்பி முதுகுப்புறம் காணப்படும். குடலில் புழு வைத்துவிட்டால் மயிர் செங்கரித்து நீட்டமாக, சிலிர்த்து கொண்டு இருக்கும். இது வெயில் காலத்தில் காணப்படும்.

## வைத்திய முறை

இதற்கு மலையிலுள்ள குட்டி வெட்டி கிழங்கை கொண்டு வந்து மற்ற பொருட்களுடன் சேர்த்து வைத்தியம் செய்யவேண்டும்.

**குட்டிவெட்டி கிழங்கு (Eulophia epidendraca)**





குட்டி வெட்டி கிழங்கு – 500 கிராம், கொல்லங்கோவை கிழங்கு – 200 கிராம், புளியவரளி கிழங்கு – 100 கிராம், சங்கங்குப்பி ஒரு கைப்பிடி இலை, கூவா இலை ஒரு கைப்பிடி போன்ற பொருட்களை எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து ஒரு மாட்டிற்கு உள்ளே தர வேண்டும்.

குட்டி வெட்டி கிழங்கு 1 கிலோ, சின்ன வெங்காயம் 1 கிலோ, கருப்பட்டி ½ கிலோ சேர்த்து அரைத்து கவளமாகக் கொடுக்கலாம். இந்த நோய்க்கு மருந்து தரும் 3 நாட்களிலும் பச்சை தண்ணீர் தரக்கூடாது. வெதுவெதுப்பான வெந்நீர் மட்டும் தர வேண்டும்.

**( கிருஷ்ணநாயக்கர், அருளாட்சி, வாசுதேவநல்லூர் , நெல்லை)**

# 34. எல்லா நோய்களுக்கும் தரப்படும் ஊறல் மருந்து

இது சரீர பலம் தரும். சப்பை நோய். நொண்டி நோய், வயிறு உப்பிசம், கழிச்சல், காய்ச்சல், வாதம் போன்ற அனைத்து நோய்களுக்கும் நிவாரணமளிக்கும்.

சிறு குறிஞ்சான், பெருங்குறிஞ்சான், சிறியாநங்கை, வெள்ளருகு, வெள்ளைகாக்கரட்டான்கொடி, விலாரி, தெரணி, புரசு, பொடகனாரி இலை, தழுதாழை, மிளகரணை, குண்டு பிரண்டை, சாதாபிரண்டை, ஆனைக்களிமுனியான், பெருங்கள்ளி கொளுந்து, கருடன் கொடி இலை, கிழங்கு, சிவனார் வேம்பு, சோற்றுக்கற்றாழை, கண்வலிப்பூ, புளியாரணைக்கிழங்கு, பச்சைமஞ்சள், புளியங்காய், சீரகம், சுக்கு, மிளகு, சித்தரத்தை, பரங்கிபட்டை, தாசவாாதாரம், கருந்துளசி, ஆடாதொடை, நிலபனங்கிழங்கு, காட்டு வாகை, நெல்லிக்காய், கடுக்காய் போன்ற மூலிகைப் பொருட்கள் இதற்குத் தேவைப்படும் மூலிகைத் தழைகளை ஒவ்வொன்றும் ஒரு கிலோ வீதமும், பட்டை என்றால் கால் கிலோ வீதமும், கடைச்சரக்கு என்றால் 100 கிராம் வீதமும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய மண்பானையில் மேற்கண்ட மூலிகைப் பொருட்களை இட்டு அரிசி கழுவும் தண்ணீர் மற்றம் சோறு வடித்த கஞ்சி தண்ணீரையும் இதில் ஊற்றவேண்டும். இந்த பானையை நிலத்தில் புதைத்துவிட வேண்டும். இப்பானை நிழல் பகுதியில் சற்று ஈரம்பதம் கொண்ட இடத்தில் புதைக்கப்பட வேண்டும். 30 நாட்கள் ஊறிய பின்பு தேவையான நாட்களில் அரை படி மூலிகைத் தண்ணீர்



( 3 கொட்டான்) எடுத்து மாட்டுக்கு எந்த நோய்க்கும் கொடுத்து வரலாம். இந்த முறையை பல வீடுகளிலும் வளையாம்பட்டு கிராமத்தில் கடைபிடித்து வருகின்றனர்.

**(பட்டம்மாள், வளையாம்பட்டு, செங்கம், திருவண்ணாமலை)**

# 35. செம்மறிஆட்டு நீல நாக்கு நோய்

## அறிகுறிகள்

ஈறில் புண் இருக்கும்; நாக்கு நீல நிறமாக மாறும் ; நடக்காது; நீர் குடிக்கும்; மேயாது; நாக்கில் நயாபைசா அளவு புண் இருக்கும் ; வாயில் நீர் வடியும் ; தூக்கினால் ரோமம் உதிரும் ; மழைக்காலஙுகளில் (புரட்டாசி மாதம்) காணப்படும். செந்தண்ணீரை (மழைத்தண்ணீர் தேங்கியுள்ள இடங்கள்) குடித்து விட்டாலும் இந்த நோய் **ஏ**ற்பட வாய்ப்புண்டு. கால் நொண்டும். ஆனால் கால் குளம்பில் புண் இருக்காது.

## வைத்தியமுறைகள்

O இந்நோய்க்கு முதலில் 25 பூவன் வாழைப்பழங்கள் வாங்கி அரை லிட்டர் நல்ரலெண்ணெயில் கலந்து பிசைந்து எல்லா ஆடுகளுக்கும் ஊட்டவேண்டும். இதனால் நோயின் வேகம் குறையும். பின் சோற்றுக்கற்றாழையை முள்ளை சீவி எடுத்து வாயில் திணித்து விடவேண்டும். இதனை 12 நாட்கள் தொடர்ந்து செய்து வர நீல நாக்கு நோய் வந்த ஆடு பிழைத்துக்கொள்ளும். மந்தையிலுள்ள பிற ஆடுகளுக்கும் இந்நோய் பரவாது.

**(பொன்னுச்சாமி, ஓடைப்பட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்)**

O கல்பனை விலாரி தழை, மாவிலங்கப்பட்டை, வில்வ இலை, கடைச்சரக்கு (பேறுகாலசாமான்கள் வகைக்கு சுமார் 5-10 கிராம்) சேர்த்து தென்னங்கள்ளில் ( கால் லிட்டரில் கலந்து கொடுக்க



வேண்டும். இந்த மருந்தை நோய் வந்த ஆடுகளுக்கு எலுமிச்சபழ அளவு உருண்டை செய்து நித்தம் 5 நாட்கள் தர வேண்டும். இதையே நோய் வரும் முன் தடுப்பு மருந்தாகவும் தரலாம். நீல நாக்கு நோய் வந்த 100 செம்மறி ஆடுகளை காப்பாற்றியுள்ளேன்.

**( ஆர். முாரியப்பக்கோனார், திருக்கருகாவூர், தஞ்சாவூர்)**

# 36. செம்மறி ஆட்டு துள்ளுமாரி நோய்

### அறிகுறிகள்

திடீரென துள்ளி குதித்து உடனே இறந்து விடும்.

### நோய் வரக் காரணம்

இது ஒரு வகை நுண்ணுயிரியினால் ( Enterotoxaemia) மழைக் காலத்தில் ஆடுகளைத் தாக்கி இழப்பை ஏற்படுத்தும் கொடிய நோய். இந்த நுண்ணுயிர்கள் சாதாரணமாகவே ஆடுகளின் குடலில் இருக்கும். ஆனால் மழை காலத்தில் செழித்து வளரும் புல்லை அதிக அளவில் சாப்பிடும்போது இந்நோய் ஏற்படுகிறது. ஆகவே இது ‘‘அதிக தீவனநோய்’ எனப்படும். இது நன்றாக இரை எடுக்கும் ஆடுகளுக்கு மட்டுந்தான் வரும்.

### வைத்திய முறை

இந்த நோய் திடீரென வருவதால் மழைக்காலங்களில் இந்நோய் வரும் முன்னர் கீழ்க்கண்ட வைத்தியத்தை கடை பிடிக்கலாம். நோய் வந்த பின்னரும் கொடுக்கலாம்.

நாய்க்கடுகு, சூராத்தவரை, ஈசுவரமூலி, சிறுதும்பை, வாதமடக்கி ஆகிய ஒவ்வொன்றிலும் கைப்பிடி அளவு இலை எடுத்து சீரகம் 50 கிராம் , வெங்காயம் 100 கிராம், மருதம்பட்டை 100 கிராம் சேர்த்து ஆட்டி சாறு எடுத்து 2 வேளை வீதம் 2 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**(அய்யாத்துரைகோனார், டி.கிருஷ்ணாபுரம், மதுரை)**



# 37. நசியங்கட்டுதல்

மாட்டிற்கு உண்டாகும் காய்ச்சல் (குந்து), சளி, செருமலுக்கு நசியங்கட்டுதல் சிறந்த முறையாகும்.

தும்பை 25 கிராம், துளசி 25 கிராம் வேலிப்பருத்தி இலை 25 கிராம், சுக்கு 10 கிராம், மிளகு 25 கிராம், பூண்டு 1, சின்ன வெங்காயம் 25 கிராம் அனைத்தையும் கலந்து இடித்து அவற்றை மெல்லிய துணியில் கட்டி, சுடுநீரில் நனைத்து மாட்டின் இரு மூக்குகளிலும் 100 மில்லி அளவு பிழிய வேண்டும். இடது கண்ணிற்கும், வலது காதிற்கும் ஒவ்வொரு துளி விட வேண்டும். இப்படி காலை மாலை இருவேளையும் செய்தால் காய்ச்சல், சளி, செருமல் குணமாகும்.

**(கோவிந்தன், செல்லியம்பாளையம், சேலம்)**

# II. கோழி மற்றும் பறவைகளுக்கு வரும் நோய்கள்

## அஜீரணம்

### அறிகுறிகள்

வயிற்றில் இரைச்சல் உண்டாகும். ஆகாரத்தைச் சரியாக உட்கொள்ளாது. செரியாமல் வாந்தி எடுக்கும்.

### வைத்தியமுறை

O நிலவேம்பு, திப்பிலி, மிளகு கண்டத்திப்பிலி, வெந்தயம், பொரித்தவெங்காரம் சம அளவு எடுத்து வேகவைத்து நீர் விடாது அரைத்து சுண்டல் அளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தினமும் ஒரு மாத்திரை வீதம் 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

O வெந்தயம் 2 கிராம், சுக்கு 2 கிராம், பெருங்காயம் 2 கிராம் , வாய்விடங்கம் 2 கிராம், திப்பிலி 2 கிராம் இவற்றை இடித்து பொடி செய்து முருங்கை இலைச் சாற்றில் கலந்து அரைத்து சிறிய மாத்திரைகளாக்கி வைத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுத்து வர வேண்டும்.

**(சுரபேந்திரர் வைத்தியம், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் – 1986)**



## கோழி வெள்ளைக் கழிச்சல்

### அறிகுறிகள்

உற்சாகமின்மை, தலையை தொங்கவிட்டுக் கொண்டு ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும். கொண்டை கருப்பாக இருக்கும் ; தள்ளாடிக்கொண்டு நடக்கும். வெள்ளை நிறத்தில் கழிச்சல் அதிகமாக இருக்கும் ; கழியும் சமயம் பீச்சும் சத்தத்துடன் வரும். மெலிந்து போய் இருக்கும; திடீரென்று மரணம் ஏற்படும்.

இந்த நோயை உண்டாக்கும் கிருமியானது நிலத்தில் பலமாதங்கள் உயிரோடு இருக்கும்.

### வைத்தியமுறைகள்

O குடிக்கும் தண்ணீரில் 1 சதம் பொட்டாசியம் பெர்மாங்க னேட்டும், படிகாரமும் கலந்து தினம் 3முறை கொடுக்க வேண்டும்.

**(கால்நடை பராமரிப்புத்துறை செய்தி குறிப்பு – 1954, சென்னை)**

O நிலவேம்பு செடி ஒன்று எடுத்து நீர்விட்டு அரைத்து இரண்டு கைப்பிடி அளவு அரிசியுடன் கலந்து பறவைகளுக்கு தீனியாகக் கொடுத்து வந்தால் இந்த நோய் தாக்காது. இத்துடன் சிறிய வெங்காயத்தினைச் சிறு துண்டுகளாக நறுக்கி உணவாக கொடுத்து வந்தால் இந்த நோய் தாக்காது.

**( ஆசியா கால் நடை மூலிகை வைத்திய கையேடு 1994)**

O வேலிப்பருத்தி இலைச்சாறைக் கேழ்வரகு மாவுடன் கலந்து இந்த நோய் வரும் முன்னர் கோழிக்கு தீவனமாகக் கொடுக்க வேண்டும். இந்த நோய் வந்த பின்னர் வெள்வேலம்பட்டைச் சாராயத்தை நோய் தீரும் வரை 3 மி.லி. ஊற்றி வர வேண்டும்.

**(இராஜப்பா, தென்கனிக்கோட்டை, தர்மபுரி)**

O எள் 20 கிராம் எடுத்து மோரில் அரைத்து வடிகட்டி உள்ளுக்குப் புகட்ட வேண்டும். இதனை 7 நாள் கொடுக்க வேண்டும். மோரை வேண்டிய அளவு கொடுத்துக் கொண்டிருக்கக் குணமாகும்.

**(சுரபேந்திரர் வைத்தியம், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் 1989)**

## இராணிக்கட் கழிச்சல்

### அறிகுறிகள்

கழிச்சல் துர்நாற்றத்துடன் பச்சைக் கலரில் வெளிவரும், நாசியில் நீர் வடிந்து கொண்டிருக்கும். கோழிகள் இறக்க நேரிடும்.

### வைத்தியமுறை

O கஸ்துாரி மஞ்சள் 1 கிராம், கரியபவளம் 1 கிராம், சாதிலிங்கம் 1 கிராம், உப்பு 1 கிராம் , கற்கண்டு 10 கிராம், எலுமிச்சம் பழ ரசம் 5 சொட்டு, வண்ணாத்திப் பூச்சி 2 இவைகளை ஒன்றாகச் சேர்த்து நன்றாக அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து, உலர்த்தி ஆகாரத்திற்கு முன் ஒரு மாத்திரையை தண்ணீருடன் சேர்த்து புகட்ட வேண்டும்.

**(சுரபேந்திரர் வைத்தியம், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் – 1986)**

O அருகம் புல், ஆவாரம்பூ, நெல்லிக்காய், கீழாநெல்லி இவற்றை நிழலில் உலர்த்தி பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். தேவைப்படும் சமயம் இத்துடன் வெங்காய்ததைச் சேர்த்து அரைத்து மிளகு போல் உருட்டி 2 உருண்டை வீதம் கொடுக்க கழிச்சல் சரியாகும்.

**(ஜி.செல்வி, சொர்ணக்காடு, பேராவூரணி, தஞ்சாவூர்)**



O குட்டி விலா தழை, கீழாநெல்லி ஆகியவற்றை சமளவு அரைத்து குடி நீருடன் கலந்து விடகழிச்சல் சரியாகும்.

**( பாலு, நற்சாந்துபட்டி, தஞ்சாவூர்)**

### நாட்டுக் கோழி சாதாரண கழிச்சல்

O நற்சீரகம் 10கிராம் மட்டும் அரைத்து உள்ளே தரவேண்டும்

**( இராமசாமி, ஒரத்தநாடு, தஞ்சாவூர்)**

### வான்கோழி இரத்தக் கழிச்சல்

O வெங்காயம் 50 கிராம், சீரகம் 25கிராம் அரைத்து உள்ளே தர வேண்டும்.

### வான் கோழி வெள்ளைக் கழிச்சல்

கீழாநெல்லி இலையை அரைத்து நோய் வரும் முன்பும் அல்லது நோய் வந்த பின்பும் தரலாம். இம்மருந்து கொடுக்கும் சமயம் தண்ணீர் கொடுக்கக்கூடாது.

**(இராமசாமி, ஒரத்தநாடு, தஞ்சாவூர்)**

### சுவாசநோய்கள்

கோழிப் பண்ணைகளில் கோழிகளுக்கு வரும் சளி கோழிப் பண்ணையாளர்களுக்கு ஒரு தீராத பிரச்சினையாகும். கோழிகள் சரியாகத் தீவனம் எடுக்காது. எடை குறையும், மூக்கிலிருந்து அவ்வப்போது சளி ஒழுகும். இரவில் கோழிக்கொட்டையிலிருந்து கர் .... கர்....என்று குறட்டை விடுவது போன்ற சப்தம் கேட்கும்.

O கோவில்பட்டி பகுதியைச் சார்ந்த கோழிப்பண்ணையாளர்கள் இதற்கு ஒரு எளிய வைத்திய முறையைக் கையாளுகிறார்கள். சுமார் 100 கிராம் துளசி இலையை அரைத்து குடிநீரில் நாள் ஒன்றுக்கு ஒரு முறை வீதம் மூன்று நாட்களுக்கு கொடுத்தால் சளிகுறைகிறது. 100 கிராம் துளசி 1000 பெரிய கோழிகளுக்குப் போதுமானது.

நாள்பட்ட சளித்தொந்தரவாக இருந்தால் கோழிகளின் தலை வீங்கிக் காணப்படும். இந்த சமயத்தில சுமார் அரை கிலோ செந்தட்டி வேரைப் பொடி செய்து 100 கோழிகளுக்கான தீவனத்தில் இரண்டு நாட்கள் கலந்துகொடுத்தால் சளி குறையும். பின் கருப்பட்டி 100 கிராம் அல்லது பனங்கற்கண்டை இரண்டு நாட்கள் குடிக்கும் நீரில் கலந்து வைத்தால் சளி முற்றிலும் குணமாகும்.

**( முருகேசன், கால்நடை ஆராய்ச்சி மையம், மதுரை)**

O இஞ்சி 10 கிராம் எடுத்து அரைத்து கால் லிட்டர் நீரில் கலந்து பனங்கருப்பட்டி 10 கிராம் கரைத்து 10 கோழிகளுக்குக் கொடுக்க வேண்டும். இதனை தினமும் தொடர்ந்து கொடுத்து வர வேண்டும்.

**( ஆசியா கண்ட கால்நடை மூலிகை வைத்திய கையேடு – 1994)**

## கீரிப்பூச்சிகள்

இப்பூச்சிகள் குடலில் இருந்து கொண்டு பல உபாதைகளை உண்டு பண்ணும். இவை மெலிந்து நீளமான நூல் மாதிரியான பூச்சிகள், பெண் பூச்சிகள; ஆண் பூச்சிகளை விட பெரியவை. நோய் கண்ட பறவைகள் சோர்ந்து இருக்கும். கழிச்சலாவது, மலபந்தமாவது ஏற்படும். குஞ்சுகளில் தான் இவ்வியாதி அதிகமாயிருக்கும். பூச்சிகள் பறவையின் குடலில் முட்டையிடும். முட்டைகள் பறவையின் எச்சத்துடன் கலந்து வெளியேறுகின்றன.



கூண்டின் சிறு வெடிப்புகளில் முட்டைகள் ஒரு ஆண்டு வரைக்கும் கூட உயிருடனிருக்கும். இவை காற்று, மண்ணுடன் கலந்து இரை அல்லது குடிநீர் மூலமாக பறவைகளின் குடலுக்குள் செல்கின்றன. குடலில் முட்டை பொரித்து மூன்று நான்கு வாரங்களில் பெரிய முதிர்ந்த பூச்சிகளாகின்றன.

## வைத்திய முறைகள்

O வியாதிவந்த பறவைகளுக்கு பாதி வயிற்றுக்கே இரை கொடுத்து மறுநாள் மாலை வரைக்கும் பட்டினி போட வேண்டும். பிறகு கீழ்க்கண்டபடி மருந்து கொடுக்க வேண்டும். நூறு கோழிகளுக்கு அரை கிலோ எடையுள்ள புகையிலைக் காம்புகளை அதி நுணுக்கமாய் நறுக்கி அவைகளை நனைத்து பாத்திரத்திலிட்டு மூழ்கி நிற்கும்படியான அளவு நீரில் இரண்டு மணி நேரம் வரை ஊறப்போட்டு வடித்த சாற்றை பின் நூறு கோழிகளுக்கு உள்ள இரையில் பாதி இரையுடன் நன்றாய் கலந்துகோழிகளுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும். இரண்டு மணிக்குப் பிறகு ஒரு கோழிக்கு அரை தேக்கரண்டி வீதம் எப்சம் ஸால்ட் (பேதி உப்பு) கரைத்த தண்ணீரைக் கொடுக்க வேண்டும்.

O இதே மாதிரியாய் இரண்டு மூன்று வாரங்களில் மறுமுறையும் வைத்தியம் செய்யலாம். எச்சத்தில் இருக்கும் முட்டைகளின் மூலம் மறுபடியும் பறவைகளுக்கு நோய் அனுகா வண்ணம் கூண்டில் தளத்தில் இரண்டு அங்குல ஆழம் மட்டும் தரையை சுரண்டி எடுத்துவிட்டு வேறு மண் போட வேண்டும். கூண்டையும் பூச்சிக் கொல்லி மருந்துகளால் நன்றாய் கழுவ வேண்டும். பறவைகளை கம்பிவளை தளத்தில் உட்காரச் செய்வதால் எச்சத்திலிருந்து வியாதி திரும்ப உண்டாகாமல் இருக்கும்.

**(கால்நடை பராமரிப்புத் துறை செய்தி குறிப்பு – 1954, சென்னை)**

o கொட்டைப் பாக்கு நான்கு, விரலி மஞ்சள் கிழங்கு 100 கிராம் அளவு எடுத்து தூள் செய்து நீரில் கலந்து 10 கோழிகளுக்கு கொடுக்கலாம். இதனை மாதம் ஒரு முறை தர வேண்டும்.

o இரங்கூன் மல்லிகை இலை மற்றும் விதைகளை ஒரு கப் அளவு எடுத்து இத்துடன் இரு மடங்கு நீர் சேர்த்து 15 நிமிடம் கொதிக்க விட்டு ஒரு கோழிக்கு 1 தேக்கரண்டி வீதம் மாதம் ஒரு முறை தரவேண்டும்.

o வெள்ளைப்பூண்டு 6 பல் எடுத்து இடித்து நீரில் கலந்து 10 கோழிகளுக்கு கொடுக்கலாம். இதனை மாதம் ஒரு முறை தர வேண்டும்.

**(ஆசிய கண்ட கால்நடை மூலிகை வைத்திய கையேடு1994)**

## தட்டைப்பூச்சிகள்

### அறிகுறிகள்:

பறவைகளுக்கு பசியும் தாகமும் அதகமாய் இருக்கும். அமைதியில்லாமையினால் கோழிகள் இளைத்து காணப்படும். வியாதி கொடூரமாய் இருந்தால், சிலிர்த்த சிறகுகள், தொங்கிப்போன இறக்கைகள், தன் சகாக்களைவிட்டு பிரிந்து தனித்து இருத்தல், சீதத்துடன் கலந்த கழிச்சல் ஆகியவை அறிகுறிகள். கழிச்சல் முதலில் வெள்ளையாய் தெளிவாய் இருக்கும். கொஞ்ச நாட்களில் அழுக்கடைந்த மஞ்சள் நிறமாய் நுரைத்திருக்கும்.



### வைத்தியமுறை

O ஆமணக்கு விதை 5 கிராம், கொட்டைப் பாக்கு 10 கிராம், அரைத்து நீருடன் கலந்து கொடுக்க வேண்டும். இத்துடன் அரை தேக்கரண்டி எப்சம் சால்ட் (பேதயுப்பு) நீரில் கலந்து கொடுக்க வேண்டும். வியாதி வராமலிருப்பதற்கு பறவைகளின் எச்சத்தை யெல்லாம் சேகரித்து சுண்ணாம்பு மற்றும் சாம்பல் இவைகளில் போட்ட மக்க வைத்துவிட வேண்டும். பூமியில் சுண்ணாம்பு தெளிப்பதனால் செல் முதலிய பூச்சிகளை அழித்து விடலாம்.

**(கால்நடை பராமரிப்புத்துத்துறை செய்தி குறிப்பு – 1954, சென்னை)**

### காயங்கள்

கோழிகள் சண்டையிட்டு ஒன்றையொன்று கொத்திக் கொள்வதாலும், கூர்மையான பொருட்கள் குத்திவிடுவதாலும் காயம் ஏற்படுகின்றது.

### வைத்தியமுறை

O மஞ்சள் கிழங்குடன் (புதிதாக அறுவடை செய்யப்பட்டது) வெள்ளைப்பூண்டு ஒரு பல் அரைத்து தேங்காய் எண்ணெயில் குழப்பி காயங்களின் மேல் தடவ வேண்டும். அல்லது சோற்றுக் கற்றாழை சோறு, மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து காயத்தின் மேல் பூசி விடலாம். காயம் ஆறும் வரை இதை செய்து வர வேண்டும்.

**(நடராசன், கொடுமுடி, ஈரோடு)**

### கோழிப்பேன்கள்

குளிர் காலத்தில் கோழிகளுக்குப் பேன்கள் மூலம் தொல்லை வரும். கோழிகள் அலகால் தன்னைத் தானே கொத்திக்கொள்ளும். இதனால் கோழி இறகுகள் உதிர்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்தக் கோழி கூண்டிற்குள் காய்ந்த நொச்சித்தழை அல்லது

எருக்கந்தழையை பரப்பி வைத்ததால் கோழி செல்கள் ஒட்டிக் கொள்ளும், பின்னர் எளிதாக அப்புறப்படுத்தி விடலாம்.

O காய்ந்த நொச்சித் தழை அல்லது எருக்கந்தழையை அல்லது புகையிலை தழையை பரவலாகக் குவித்து மூட்டம் போட்டால் கோழிப் பேன்களை விரட்டிவிடலாம்.

O இரண்டு பங்கு வேப்பெண்ணெய் அல்லது வேப்பஇலை, ஒரு பங்கு சாம்பல் ஒரு பங்கு சாதாரண உப்பு சேர்த்து அரைத்துப் பூசி வரவேண்டும்.

**(ஆசியகண்ட கால்நடை மூலிகைவைத்தியகையேடு 1994)**

## கோழி அம்மை

O அம்மையால் ஏற்பட்ட கொப்புளங்கள் மேல் சிறிது மஞ்சளையும், வேப்பிலையையும் சேர்த்து அரைத்து பூசினால் நோய் குணமாகும். குடிக்கும் தண்ணீரில் வேப்ப இலைச் சாற்றை கலந்து விடவேண்டும்.

**(வீ.ஆர்.ஐயப்பன்,சுக்காம்பட்டி, திண்டுக்கல்)**

## கோழி சளி / தும்மல்


கொன்றையிலையை இடித்து பிழிந்து 50 மி.லி. எடுத்து அத்துடன் 50 மி.லி. வேப்பெண்ணெய் சேர்த்து நன்றாக கலந்து மூக்கில் சில துளிகள் விட்டு ஆகாரத்துடன் சிறிது எண்ணை கலந்து கொடுக்க வேண்டும்.

**(சுரபேந்திரர் வைத்தியம், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் – 1986)**



# III . ஆடு, மாடு சுழிகளும் , குணங்களும்

தலை எழுத்து நன்றாக இருந்தால் எல்லாம் நன்றாக இருக்கும் என்பர். அது போல் மாடு வாங்கும் போது அதுவும் குறிப்பாக நாட்டு மாடுகளை வாங்கும்பொழுது சுழிகள் நன்றாக அமைந்திருந்தால் எல்லாம் நன்றாக இருக்கும் எனற் நம்பிக்கை உழவர் பெருமக்கள் மனதில் ஆழமாக பதிந்துள்ளது. உழவத் தொழிலுக்கு அச்சாணியாக விளங்குவது எருது மாடுகளே ஆகும். எனவே தான் உழவர் பெருமக்கள் தங்களிடம் உள்ள உழவு எருதுகள் தீய சுழிகள் இல்லாமல் இருப்பவைகளை மட்டுமே பேணி வளர்ப்பர். பால் மாடுகளிலும் சுழி பார்ப்பவர்கள் உண்டு.



## மாடுகளின் நன்மை தரும் சுழிகள்

1. **கோபுர சுழி :** திமிலின் மேலும் திமிலுக்கு முன் புறத்திலும் (திமிலின் முன்புறம் எதிரே நின்று பார்த்தால் தெரியும் படியாக இருப்பது) அல்லது திமிலும், முதுகும் சேருமிடத்தில் இருப்பது கோபுரச்சுழியாகும். இதை ராஜாச்சுழி என்றும் கூறுவர். இச்சுழி உள்ள மாட்டை உடையோர் மிகுந்த செல்வத்துடன் ராஜபோகமாக வாழ்வர்.

**2. லெட்சுமி சுழி** : கழுத்தின் ஒரு பக்கத்தில் கொஞ்சம் தள்ளி இருப்பது லெட்சுமி சுழியாகும். இந்த சுழி உள்ள மாடு மிகவும் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனால் இவ்வித மாடுகள் கிடைப்பது அரிது.

3. **தாமணிச்சுழி :** தாமணிச் சுழி என்பது மாட்டைப் பிணைக்கும் தாம்பு (கயிறு) அல்லது தாமணி எனப்படும் நடுமுதுகுத் தண்டில் நீளமாக ஒரு கோடும் கோட்டின் இரு பக்கங்களிலும் இரண்டு சுழிகளும் இருந்தால் தாமணி சுழி எனப்படும் அல்லது முன்னங்கால்களுக்கும், கழுத்துக்கும் இடையில் அலை தாடியின் இருபுறங்களிலும் இருக்கலாம். இச்சுழி உள்ள மாட்டை வாங்குபவன் மேலும் மேலும் ஏராளமான மாடுகளை வாங்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

**4. விரிசுழி :** முதுகுதண்டின் இடது பக்கத்தில் மட்டும் இருக்கும் சுழி விரிசுழி. இதை வாங்கியவர்களுக்கு பல நன்மைகள் உண்டாகும்.

**5. இரட்டைக் கவர்சுழி:** கிறது முன்னங்கால் முட்டியின் இருபக்கத்திலும் இரண்டு பிளவுபோல் இருப்பது இரட்டை கவர்ச் சுழியாகும். இது வாங்குபவர்களுக்கு மிகுந்த நன்மையைத்தரும்.

இரண்டு பிளவு இல்லாமல் ஒரு பக்கத்தில் மட்டும் பிளவு இருந்தால் வீட்டில் இருக்கும் எல்லா மாடுகளும் அழிவதோடு



மாட்டுக்கு சொந்தக்காரர் மரணம் அடையலாம் என்றும் நம்பப்படுகிறது.

**6. பாசிங் சுழி :** இரு கண்களுக்கு மேல் நெற்றியில் இருக்கும். இச்சுழி இரட்டையாயிருந்தால் பாசிங் சுழி அல்லது ‘ ஜேஜடி சுழி'' எனப்படுகிறது. இச்சுழி உள்ள மாடுடையவர்களுக்கு கல்யாணமாகாமல் இருந்தால் சீக்கிரம் கல்யாணமாகி விடும்: கல்யாணமானவர்கள் வாங்கினால் இரண்டு மனைவி ஏற்படலாம். அல்லது மனைவியை இழந்தவன் மறுவிவாகம் செய்து கொள்ள நேரிடும் என்று நம்பப்படுகிறது.

**7. ஏறுபூரான் சுழி :** முதுகின்மத்தியில் பூரான் போன்று மயிர் பிளவு இருக்கும். அச்சுழி முன்பக்கமாக வந்து முடிந்திருந்தால் ஏறு பூரான் சுழி எனப்படும். இச்சுழி உள்ள மாடு இருந்தால் சகல செல்வத்தையும். நல்ல அதிருஷ்டத்தையும் தரும் என்று நம்பப்படுகிறது.

8. **விபூதிச் சுழி :** இரு கண்களுக்கும் நடுவில் இரண்டு சுழிகள் இரு புருவக்கோடுகளின் கீழிருக்கும். இச்சுழி உள்ள மாட்டை வாங்கியவனுக்கு பல நன்மைகளும் சுகமும் உண்டாகும்.

9.**கொம்புதானாச் சுழி :** இது கொம்புகளின் கீழ்ப்பக்கத்தில் இருக்கும். இச்சுழியுள்ள மாடுடைய மாட்டு மந்தையிலுள்ள அனைத்து மாடுகளுக்கு நோய் அண்டாது. சுகமாகவும், மாடுகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்று நம்பப்படுகிறது

**10. ஏறுநாகச்சுழி :** வாலின் மேல்பக்கம் முதுகுநோக்கித் தொடர்நது சுழித்துச் செல்வது ஏறு நாகச் சுழி என்று கூறப்படுகிறது. இச்சுழி உள்ள மாட்டை வாங்குபவர்களுக்கு நன்மை பயக்கும் அல்லது மங்களமான செயல்கள் நடக்கும் என்று நம்பப்படுகிறது.

**11. நீர்ச்சுழி :** மூத்திரத்துவாரத்திற்குப் பக்கத்தில் காளை மாடுகளுக்கு இருக்கும் சுழி நீர்ச்சுழி. இதை நல்ல சுழி என்றும் கெட்ட சுழி என்றும் சொல்ல முடியாது. சில சமயங்களில் வாங்கியவனுக்கு நன்மைகள் ஆறுபோல் பெருகினாலும் பெருகும். ஆல்லது நீறு (சாம்பல்) போல் குடி நாசமானாலும் ஆகும்

## தீமை பயக்கும் சுழிகள்

**12. முக்கன் சுழி / அக்கினி சுழி :** இரு கண்களுக்கு நடுவில் முக்கோண வடிவில் காணப்படும் இச்சுழி முக்கன் சுழி எனப்படும். இச்சுழி உள்ள மாடு உள்ள குடும்பத்தில் பல இடையூறுகள் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

**13. குடைமேல் குடை சுழி :** நெற்றியில் ஒரு சுழியின் மீது மற்றொரு சுழி இருக்கும். இதற்கு குடைமேல் குடை சுழி என்று கூறுவர். இச்சுழி உள்ள மாடு குடை மேல் குடை அல்லது இடி மேல் இடி என்பது போல் தீமை பயக்கும் சுழியாகக் கருதப்படுகிறது.

**14. விலங்கு சுழி :** முன்னங்கால் அல்லது பின்னங்காலின் பின்புறமோ அல்லது கணுக்கால்களிலோ கழித்து இருப்பதற்கு விலங்கு சுழி என்று கூறுவர். இச்சுழி உள்ள மாட்டை வாங்கியவன், விலங்கிப்பட்டு சிறை யிலடைக்கப்படுவான் என்று கூறப்படுகிறது.

**15. பாடை சுழி:** மாடுகளின் முதுகின் பின்பகுதியில் வாலின் முன்பக்கமாவது அல்லது பின்பக்கமாவது காணப்படுவது பாடை சுழி எனப்படுகிறது. இது மிகவும் கெட்ட சுழியாகும். இச்சுழியுள்ள மாட்டின் சொந்தக்காரர் இறக்க நேரிடும் என்று கருதப்படுகிறது.

**16.பெண்டிழந்தான் சுழி :** வாலின் உட்பக்கம் மலத்துவாரத்திற்கு நடுவில் ஒன்று அல்ல இரண்டு சுழிகள் இருக்கும். இதற்கு பெண்டிழந்தான் சுழி என்று கூறப்படுகிறது. இந்த சுழி உள்ள மாட்டில் வீட்டிற்கு எஜமானி அல்லது தலைவி இறக்க நேரிடும் என்ற கருதப்படுகிறது.

**17. நாகப்பட சுழி :** தொடைகளின் பின் வளைவில் பாம்பு படமெடுத்தது போல் காணப்படும் சுழி நாகப்பட சுழி எனப்படுகிறது. இது மேல் பக்கம் தொடர்ந்தால் முன் நாகம் என்றும், கீழ்ப்பக்கம் இறங்கினால் பின்நாகம் என்றும் கூறப்படுகிறது. இது இரண்டுமே கெட்ட சுழிகளாகும்.

**18. தட்டுச் சுழி :** இடுப்பு சேருமிடத்தில், முதுகில் காணப்படும் இச்சுழி எனப்படுகிறது. இச்சுழி உள்ள மாட்டை வாங்கியவன் எந்த வியாபாரம் செய்தாலும் நஷ்டம் அடைய நேரிடும் என்று கூறப்படுகிறது.

**19. துடைப்பை சுழி:** வால் ஆரம்பிக்கும் இடத்தில் உள்பக்கம் இருக்கும். இச்சுழி குடும்பத்தின் செல்வத்தை சுத்தமாகத் துடைத்துவிடும் என்று கூறப்படுகிறது.

**20. புட்டாணிச் சுழி :** இடுப்புக்கும் வால் ஆரம்பமாகும் இடத்திற்கும் மத்தியிலிருக்கும் சுழி புட்டாணிச் சுழி எனப்படும். இச்சுழி உள்ள மாட்டினால் எஜமானனுக்குக் கேடு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

**21. படைக்கட்டு சுழி :** இது உதட்டிலிருக்கும் கெட்ட சுழியாகும். இச்சுழி உள்ள மாடு இருக்கும் மந்தைக்கும், குடும்பத்திற்கும் தீங்கு நேரிடும் என்று கூறப்படுகிறது.

**22. எச்சுப்புள்ளி :** மலத்துவாரத்திற்கும், வால் ஆரம்பமாகும் இடத்திற்கும் இடையில் வெண்புள்ளி இருக்கும். இந்த மாட்டை வாங்கியவன் வியாதியால் பீடிக்கப்பட்டு சிரமப்பட நேரிடும் என்று கூறப்படுகிறது.

**23. இறங்குபூரான் சுழி:** பூரான் போன்ற மயிர் பிளவு முதுகின் மத்தியில் ஆரம்பித்து வால் பக்கம் தொடர்ந்து முடியும்.

**24. பூரான் கௌவல் சுழி:** ஒரு காதின் கீழ் மட்டும் இருக்கும் சுழி பூரான் கௌவல் ஆகும். பல தீமைகளைச் சேர்க்கும்.

**25. வால் முடங்கிச் சுழி:** வாலின் உட்புறத்தில் இருக்கும் ஒற்றைச் சுழி. குடும்பத்தையே அழித்துவிடும்.

**26. இறங்கு நாகச் சுழி:** வாலின் மேல் இருக்கும் சுழி. கீழ்ப்பக்கமாகத் தரையை நோக்கி இருக்கும். இதற்கு நாகச் சுழி என்று பெயர். உயர்ந்த குடும்பத்தின் செல்வாக்கையெல்லாம் அழித்து தாழ்ந்த குடியாக்கிவிடும்.

**27. கருநாகச் சுழி :** கழுத்தைச் சுற்றி மணிக்கயிற்றை அழகாகக் கட்டியது போல் இருக்கும். இம்மாட்டை வாங்கியவனுக்குக் கொடிய துன்பங்கள் உண்டாகும். குடும்பமும் நசியும்.

**28. மென்னிப்பிடிச் சுழி :** கழுத்தின் கீழ்பக்கத்தின் இரண்டு மயிர்ப்பிளவுகள் மென்னியைப் பிடிப்பது போல் இருக்கும். இதை வாங்கியவனுக்கு மென்னியைப் பிடிப்பது போன்ற பல கஷ்டங்கள் வரும்.

**கூறியவர்கள்: திரு.செவனு,**
**திரு.திருப்பதிநாயக்கர்,**
**திரு.ராமசாமிநாயக்கர் மற்றும்**
**திரு.சீனி – வேப்பம்பட்டி, மதுரை.**
**சுரபேந்திரர் வைத்திய முறைகள் புத்தகம்.**
**என். குமாரவேலு, காட்டுப்பாக்கம், கால்நடை ஆராய்ச்சி மையம்**



## ஆட்டு சுழிகள்

1. நெற்றிச்சுழி: நெற்றியின் மேல் அதாவது நடுபகுதியில் காணப்படும் சுழி நெற்றிச் சுழி எனப்படுகிறது. இச்சுழி உள்ள ஆடுகள் இருந்தால் குடும்பத்திற்கு கெடுதல் உண்டாகும்.

2. பட்டிச்சுழி (முதுகுச் சுழி): ஆடுகளின் முதுகில் காணப்படும் சுழி நன்மை தரும் குறிப்பாக நடு முதுகில் இருந்தால் மிகவும் நல்லது.

**3.** வால்சுழி: ஆடுகளின் வாலின் எந்த இடத்தில் சுழி இருந்தாலும் கெடுதல் தருபவை. வாலில் சுழி இருக்கும். ஆடுகள் சந்தையில் மிகக் குறைந்த விலைக்கே விற்பனையாகும்.

**(மெட்டில்பட்டி முனியசாமி,**
**பட்டிதேவன்பட்டி சீனி நாயக்கர்,**
**சுப்பையாநாயக்கர், புதூர், தூத்துக்குடி மாவட்டம்)**

## மாடு வாங்குவது மற்றும் விற்பதில் ஐதீகங்கள்

1. பசு ஞாயிறு அன்று கன்று ஈன்றால் உரிமையாளருக்கு ஆகாது.
2. புதன் கிழமைகளில் பசுக்களை விற்கமாட்டார்கள். அப்படி விற்றால் மற்ற பசுக்களுக்கு பாதகம் உண்டாகும்.
3. மாடு விற்கும்பொழுது விற்பவர் மூக்கு கயிறை அவிழ்த்தே கொடுப்பர். வாங்குபவர் புதிய கயிறு கட்டி மாட்டை கொண்டு செல்வர்.

4. உழவு எருதுகளுக்கு வால் குட்டையாக முழங்காலுக்கு மேல் இருந்தால் ஆகாது. ஆனால் கறவை மாடுகளுக்கு இது பொருந்தாது.

5. எருதுகளுக்கு உரோமம், கொம்பு, தோல், கண்மணி, குளம்பு வெள்ளையாக இருந்தால் அது சிறப்பல்ல



# IV. மந்திரித்து குணப்படுத்துதல்

## மாட்டு கண்திருஷ்டிக்கு, கண்பட்டு விட்டால்

சிலரின் கெட்ட பார்வையால் மாட்டிற்கு கண் திருஷ்டி பட்டுவிடும் இதற்கு கீழ்க்கண்ட மந்திரத்தை கூறுதல் பலன்தரும்.

" குன்னதிர மேய்ந்து குலமதிர தண்ணீர் குடித்து
மண்ணதிர வருகிற மாடே ஆறுபோல்
பால் கறந்து சேர்போல் வெண்ணை எடுத்து
கன்றுக்கிறங்கி கண்ணே பட்டதுமே
நாவே பட்டதும் வெந்நீராய் போக சிவ"

ஒரு கலசத்தில் நீர் எடுத்து வேப்ப இலைகளை போட்டு இந்த மந்திரத்தை சூரியனை நோக்கி மந்திரத்தை 3 முறை உச்சரிக்க வேண்டும். பின் கலசத்திலுள்ள நீரில் வேப்ப இலை கொண்டு மாட்டின் மேல் படுமாறு தீர்த்தம் தெளிக்க வேண்டும்.

## ஆடு மாடு சொக்கியதற்கு

1. சோளப் பயிர் தின்று சொருகிக் கொண்ட ஆடு, மாடுகளுக்கு கீழ்க்கண்ட மந்திரத்தை சொல்லி குணப்படுத்தும் முறை அனுசரிக்கப்படுகிறது.

"மூக்கு விடு, நாக்கு விடு, தொண்டை விடு
பல்லுவிட்டுப் போக சிவ"

ஒரு கலசத்தில் நீர் எடுத்து வேப்ப இலைகளை போட்டு, இந்த மந்திரத்தை சூரியனை நோக்கி மந்திரத்தை 3 முறை உச்சிரிக்க வேண்டும். பின் கலசத்திலுள்ள நீரில் வேப்ப இலை கொண்டு ஆட்டின் மேல் படுமாறு தீர்த்தம் தெளிக்க வேண்டும்.

**(எம்.சடையப்பன், சித்தரேவு, திண்டுக்கல்)**

2. மாட்டின் உரிமையாளர் மாட்டிற்கு சொருகிக் கொண்டது என்று நம்மிடம் சொன்னவுடன், அவரால் தண்ணீர் குடிக்கும் அளவு 1 டம்ளர்/ செம்பில் நீர் எடுத்துக் கொள்ள வேண்டும். தண்ணீரில் சிறு குச்சியை வைத்து கீழ்காணும் மந்திரத்தை 6 முறை சொல்லவேண்டும்.

" ஓம் நமசிவாய பொன் இருதாரம் பூவிருதாரம்

பொன்னும் நீரும் பொருந்திய தாரம்

சோளப்பயிர்தின்ற இங்கே நீர் குடிக்க

நஞ்சத்து பிஞ்சத்து நஞ்சும் பிஞ்சும்

பிஞ்சாக போக சிவாய நமஹ:

மந்திரம் 6 முறை சொல்லி முடித்தவுடன் மாட்டின் உரிமையாளர் ஓதிய தண்ணீரை குடித்து விட்டு வீட்டிற்கு போய் நோயுண்ட மாட்டை இரு முறை தட்டினால் சொருகல் சரியாகிவிடும். (நிறைய மாடுகளுக்கு சொக்கல் இருந்தால் மாடு என வரும் இடத்தில் மாடுகள் என சொல்ல வேண்டும்)

## வயிறு வீக்கம் அல்லது முட்டடைப்பானுக்கு

இதற்கு கீழ்கண்ட மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்

"அய்யும் கிளியும் சௌவும் சிவாய நமஹ"

எருக்களைச் செடியை இலையில்லாமல் நீக்கி 2 அடி குச்சி எடுத்து முதுகில் அடித்துக் கொண்டே கண், காதில் இந்த மந்திரத்தை 6 முறை உச்சரிக்க வேண்டும். பிறகு மாட்டை கண்காணிப்பவர், 10 கிராம் மிளகு எடுத்து நன்றாக மென்று மாட்டின் கண், காது, மூக்கில் ஊதிவிட்டால் முட்டைப்பான் குணமாகும்.

**(சீனி நாயக்கர், இராமசாமிபுரம், அருப்புக்கோட்டை, விருதுநகர்)**



**விஷக்கடிக்கு :**

மசி நசி, சிவ சிவ – முருகன் ஆணைப்படி

கொடிய விஷங்கள் எல்லாம் இறங்க சிவா.

மேற்கண்ட மந்திரத்தை 108 தடவை கூறி மந்திரித்து தலைச்சுருளி வேரை இடித்து நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**( மாரியப்பன், சோழகன்குடிகாடு, தஞ்சாவூர்)**

## பஞ்சகவ்யாவின் மகிமை

பஞ்சகவ்யா என்பது ஆன்மீக சடங்குகளில் தீட்டுக் கழிப்பதற்கும், உடம்பு, மனம் ஆகியவற்றை சுத்தப்படுத்துவதற்கும் ஒரு சுத்திகரிப்பு பொருளாக சாஸ்திரங்களில் விளக்கப்பட்டுள்ளது. பஞ்சகவ்யாவை வேளாண்மைக்கு திரவ உரமாகவும், பூச்சி, நோய் தடுப்பு மருந்தாகவும் பெரும்பாலான இயற்கை விவசாயிகள் கடை பிடித்து வருகின்றனர். பஞ்சகவ்யாவின் சுத்தி கரிக்கும் தன்மைகள், தயாரிக்கும் விதம் பற்றி வேத தர்மசாஸ்த்ர பரிபாலனசபை,கும்பகோணம் வெளியிட்ட **"ஸ்ம்ருத்தி முக்தாபலம்" ப்ராயசித்த காண்டம்"** புத்தகத்தில் (1955) விளக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு :

பஞ்சகவ்யா பாபங்களைப் போக்கும் நிவர்த்தியாக சாஸ்த்திரங்களில் கூறப்பட்டுள்ளது. பத்தாயிரம் காயத்ரி ஜெபம், பன்னிரண்டு பிராமணர்களுக்கு போஜனம் செய்தல், 200 ப்ராணாயாமம் செய்தல், உபவாஸம் இருத்தல், வேதபாராயணம், புண்ணிய ஸ்தலத்தில் நதியில் நீராடுதல் இவைகளுக்கு நிகராக பஞ்சகவ்ய அருந்துவதும் பாபம் போக்கும். சதுர்தஷியில் உபவாசம் இருந்து பௌர்ணமி காலையில் பஞ்சகவ்யம் அருந்த வேண்டும்.

கோ (பசு) மூத்ரம், கோமயம் (சாணி), பால், தயிர், நெய் தர்ப்ப ஜலம் இவை அனைத்தும் சேர்ந்தது பஞ்சகவ்யம் எனப்படுகிறது. கறுப்புப் பசுவின் மூத்ரமும், வெள்ளைப் பசுவின் கோமயமும், தாம்ரவர்ணப் பசுவின் பாலும், சிவப்புப் பசுவின்தயிரும், கபிலப்பசுவின் (காராம் பசு) நெய்யும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பலம் மூத்ரம், அரைக் கட்டைவிரலளவு கோமயம், ஏழு பலம் பால், மூன்று பலம் தயிர், ஒரு பலம் நெய், ஒரு பலம் தர்ப்பை ஜலம் என்று சேர்க்கவும். காயத்ரியால் கோமூத்ரமும், கந்தத்வாராம் என்ற மந்த்ரத்தால் கோமயமும், ஆப்யாயஸ்வ என்ற மந்த்ரத்தால் பாலும், ததிக்ராவிண்ண: என்ற மந்த்ரத்தால் தயிரும், சுக்ரமஸி என்ற மந்த்ரத்தால் நெய்யும், தேவஸ்யத்வா என்ற மந்த்ரத்தால் தர்ப்ப ஜலமும் சேர்க்க வேண்டும். இவ்விதம் மந்த்ரத்தால் சுத்தமான பஞ்சகவ்யத்தை அக்னியின் எதிரில் வைக்க வேண்டும். ஆபோஹிஷ்ட என்ற மந்த்ரத்தால் கலக்கி, மானஸ்தோகே என்ற மந்த்ரத்தை ஜபிக்கவும். ஏழுக்குக் குறையாமலுள்ளதும், நுனியுள்ளதும், கிளி போல் பச்சை நிறமுள்ளதுமாகிய தர்ப்பங்களால் பஞ்சகவ்யத்தை எடுத்து விதிப்படி ஹோமம் செய்ய வேண்டும். இராவதீ. இதம் விஷ்ணு:, மானஸ்தோகே, சம்வதீ என்ற மந்த்ரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். இப்படி ஹோமம் செய்து, பிறகு மீதியுள்ளதை அருந்த வேண்டும். ப்ரணவத்தால் கலக்கி. ப்ரணவத்தால் அபிமந்த்ரித்து, ப்ரணவத்தாலே எடுத்து, ப்ரவணத்தாலேயே பருக வேண்டும். பலாச மரத்தின் நடு இலையாலாவது தாமரை இலை கொண்டு இதில் ஊற்றி பின் அருந்த வேண்டும். பிராணிகளுக்கு தேஹத்தில் தோல், எலும்புகளில் எந்த பாவம் இருக்குமோ அதனை போக்க வல்லது. அப்பாவம் எல்லாவற்றையும் பஞ்சகவ்யம், ஜ்வலிக்கின்ற நெருப்பு விறகை எரிப்பது போல் எரிக்கும். மூவுலகங் களில் பரிசுத்தமாகியது. கோமூத்திரத்தில் வர்ணனும், சாணியில் அக்னியும், தயிரில் வாயுவும்,



பாலில் சந்திரனும், நெய்யில் சூரியனும் வசிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

## வயதான மாடுகள் இறக்கும் தருவாயில் இருந்தால்

வயதான மாடுகளை அடிமாடுகளாகக் கொடுத்துவிடாமல் என் பண்ணையிலேயே இயற்கையாக உயிர் பிரியவிடுவேன். மாடுகள் சாவதற்கு முன் மிகுந்த கஷ்டபட்டுக் கொண்டிருந்தால் பகவத் கீதை சுலோகங்களை மாட்டிடம் சென்று படிப்பேன். படித்து முடித்த சில மணி நேரங்களில் அமைதியாக உயிர் பிரியும். இதனை மாட்டுத் தொழுவத்தில் குழி தோண்டி புதைக்கும் சமயம் பாலில் மஞ்சள் கலந்து மாடு மீது தெளித்து மண் போட்டு மூடி விடுவோம். கீதை படித்தால் சீக்கிரம் முடங்கிவிடும் என்பது என் அனுபவம். எனக்கு வாரிசு கிடையாது. இவ்வாறு உயிர் பிரியும் பசுக்களில் ஒன்று மறுபிறவியில் பக்கத்து ஊரில் (கல்லமநாயக்கன்பட்டி) ஒரு வாத்யாருக்கு மகனாகப் பிறந்து பின்னர் எனது பசுக்கூட்டத்தை பாதுகாப்பதாக எனக்கு இறைவாக்கு வந்துள்ளது.

**(தவுடம்மாள், காக்கிவாடன்பட்டி, சிவகாசி)**

## பாயும் காளைக்கு

இராஜஸ்தான் தர்பார்க்கர் மாட்டு இன காளை ஒன்று அருளாச்சி செல்லப்பநாயக்கர் கிடையில் கொடுத்திருந்தோம். இந்த காளையின் மூலம் சுமார் 200–க்கு மேற்பட்ட மாடுகள் சினைபிடித்து கன்றுகள் பிறந்திருக்கின்றன. இக்காளை ஆட்களை பாய ஆரம்பித்தது. இக்காளையை பராமரித்து வரும் செல்லப்ப நாயக்கரையே 2 தடவை தூக்கி போட்டதில் காயம் ஏற்பட்டது. எனவே பாயும் காளையை

‘‘திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள்’’ என்று கூறிவிட்டனர். பாய்வதை நிறுத்த எதுவும் வைத்தியம் உள்ளதா? என்ன செய்வது? காளையை கிடைக்கு மாடுகளுடன் அனுப்பாமல் 2 வாரங்கள் தொழுவத்திலேயே கட்டி போட்டதால் காளை மெலிந்து விட்டது. ஆனால் பாய்வதை நிறுவத்தவில்லை. இந்த நிலையில் ஒரு யோசனைப்படி மாட்டுத் தொழுவத்தில் ‘பகவத் கீதை’ புத்தகம் படிக்கலாம் என்ற எண்ணம் வந்தது. பகவத் கீதையின் 18 அத்தியாயங்களையும் சுருக்கமாக எழுதி வைத்திருந்தோம். இதனை 3/4 மணி நேரத்தில் படித்து முடித்துவிடலாம். இதனைச் செய்து பார்த்தோம். பின்னர் மாடு பாயாமல் பழக ஆரம்பித்தது. ஆனால் 1 மாதம் கழித்து மீண்டும் முட்டுவதற்கு முனைந்தது. ஒரு வேளை தொடர்ந்து வாரத்திற்கு 1 முறையாவது படித்து வந்திருந்தால் சரியாகியிருக்குமோ தெரியவில்லை. பாயும் அந்த காளையை ‘சேவா’ பண்ணைக்கு கொண்டு சென்று வளர்த்து வருகிறோம். இங்கு பாயாமல் உள்ளது.

**(பெ. விவேகானந்தன், சேவா, மதுரை)**



# V. கால்நடைத் தீவனம்

## மாங்கிளுவை கால்நடைத் தீவனம்

கிளுவையில் பல வகைகள் உண்டு. மலையில் இயற்கையிலேயே காணப்படும். மாங்கிளுவை என்ற இரகம் உள்ளது. இது நல்ல பச்சை நிற தண்டுடன் காணப்படும். இதன் இலைகளை நுகர்ந்து பார்த்தால் மா மர வாசைன வரும். இம்மரம் 10 –15 வருடங்கள் வரை வைத்திருக்கலாம். பின்னர் மரம் பிளந்து விடும். இதனை மாதத்திற்கு ஒரு முறை அரிக்கி (காவாத்து) இலைகளை கால்நடைகளுக்கு தீவனமாக அளிக்கலாம்.

இம்மரங்களை பந்தல் காலுக்கு ஊடே நட்டு பந்தல் அமைக்கும் சமயம் கம்பி வைத்து கட்ட பயன்படுகிறது. 10 அடி தூரத்தில் இம்மரங்களின் குச்சிகள் ஊன்றப்படும். ஓர் எக்கருக்கு சுமார் 250 – 300 மரங்கள் உண்டாக்கலாம். இப்பந்தலில் அவரை, பாகல் பயிர் செய்யலாம். ஆடியில் குழி போட்டு அவரை நட்டு மாசி மாதம் வரை காய்ப்பு இருக்கும்.

கிளுவை மர இலைகளை வெள்ளாடுகளுக்கு 5 கிலோ வீதமும், மாடுகளுக்கு 20 கிலோ வீதமும் அளிக்கலாம். இதனால் ஆடுகளுக்கு வளர்ச்சி அதிகமாகும், மாடுகளுக்கு பால் கறவை கூடும். 50 மரங்களைக் கொண்டு 5 வெள்ளாடு அல்லது 2 பால் மாடுகளுக்கு தீனி கொடுக்கலாம்.

கிளுவையை பந்தலுக்கு பயன்படுத்தி கால்நடைகளுக்குத் தீவனமாகவும் பயன்படுத்தும் முறை பல நூற்றாண்டுகளாக செம்பட்டி, கொடை ரோடு பகுதியில் காணப்படுகிறது. கிளுவை மரம் வனங்களில் இயற்கையாக வளர்கிறது.

இதனை சில கிராமங்களில் உள்ள விவசாயிகள் மட்டுமே தோட்டத்தில் நட்டு பயன்படுத்தி வருகின்றனர்.

**(வேலுச்சாமி, ஜெ.மெட்டூர், கொடைரோடு, திண்டுக்கல்)**

## மாடுகளுக்கு உசிலை தீவனம்

உசிலை என்று கூறப்படும் 'துருஞ்சா' மரத்தின் இலையிலிருந்து அரப்புபொடி தயார் செய்து குளியலுக்கு பயன்படுத்துவோம். இந்த மரத்தின் தழையை எருமை மாடுகள் விரும்பி உணவாகக் கொள்ளும். இதை சாப்பிடும் எருமை மாட்டின் பால் நுரையுடன் கொழுப்பு அதிகமாக காணப்படும்.

இதனை பசுமாடுகளுக்கும் தீவனமாகக் கொடுக்கலாம் என கொளையாப்பட்டி ஆறுமுகம் கூறுகிறார். இவர் தனது 2 கலப்பின பசுக்களுக்கும் சுமார் 10 கிலோ வரை உசிலை தழையைத் தீவனமாகக் கொடுத்து அதிகமாக பால் உற்பத்தியை எடுக்கிறார். இந்த தழை சாப்பிடும் மாட்டின் பால் கொழுப்பு சத்து கூடியிருக்கும். பாலும் இந்த தழை மணத்துடன் இருக்கும். கொளையாப்பட்டியில் பலர் வேப்பந்தழை, காஞ்சாரந்தழையை பசுமாடுகளுக்குத் தீவனமாகக் கொடுத்து பழக்கப்படுத்தி உள்ளனர்.

**( க. ஆறுமுகம், கொளையாபட்டி, திருமயம், புதுக்கோட்டை)**

## மாட்டுக்கு மலைவேம்புத் தழை தீவனம்

மலை வேம்பில் இரண்டு வகையான ரகங்கள் உள்ளன. ஒன்று உருண்டையான காய்களை கொண்ட மரம். இதனை தென் மாவட்டங்களில் மலை வேம்பு (ஆநடயை யணயனயசயஉா) என்று சொல்வர். மற்றொரு வகை மிக உயரமாக வளரும். இதன் கொட்டைகள் கோவைக்காய் போன்ற நீண்ட வடிவமாயிருக்கும். இதனை துளக்க வேம்பு அல்லது சடைவேம்பு (ஆநடயை னர-



டியை) என்று சொல்லுவர். இவ்வகையான மரம் தர்மபுரி மாவட்டத்தில் தென்கனி கோட்டை பகுதியில் காணப்படுகின்றன. இதனுடைய தழையை பசுமாடுகளுக்கு தீவனமாகக் கொடுத்தால் நன்கு உண்ணும்.

இம்மரம் விதை மூலமாக வளரும். மானாவாரியில் வளர்க்கலாம். முதல் மூன்று வருடங்கள் இம்மரத்தை வளரவிடவேண்டும். மூன்று வருடத்திற்கு பின்பு மரத்தின் தழையை தீவனத்திற்காக ஒடித்துப் போடலாம். இம் மரத்தை 15 அடி இடைவெளியில் நடலாம். 7 வருடமான மரத்திற்கு 3 முழம் சுற்றளவு கொண்ட பருமன் கிடைக்கும் 10 வருடமான மரத்தின் பருமன் 3 அரை முழம் வரை இருக்கும். இம்மரத்தின் மூலம் பெஞ்சு நாற்காலி போன்றவை செய்ய முடியும்.

இம்மரத்தின் தழையை கலப்பின பசுக்கள் விரும்பி சாப்பிடும். எருமை மாடுகள் அவ்வளவு சரியாக விரும்பி எடுக்காது. ஒரு மாட்டுக்கு 10 கிலோ தழையை தீவனமாகக் கொடுக்கலாம். ஆட்டுக்கு 5 கிலோ வரை கொடுக்கலாம்.

இத்தழையின் மூலம் 2 பசுமாடுகள் வளர்க்க சுமார் 50 மரங்கள் நடவு செய்ய வேண்டும். இத்தழையை கொடுப்பதால் பாலின் அளவு கூடுகின்றது. சினை பிடிக்காத மாடுகளுக்கு கர்ப்பப்பை வளர்ச்சி கொடுத்து சினை பிடிக்க உதவி செய்கின்றது. மழை காலத்தில் தோன்றும் புதிய தளிர் இலைகளை தீவனமாகக் கொடுக்கக்கூடாது. நன்கு முற்றிய இலைகளையே கொடுக்க வேண்டும்.

இம்மரத்தின் விதைகளை நாற்றங்காலில் ஆழமான $1^{1/2}$ அரை அடி குழி தோண்டி (5–6 அடி வரை அகலம்) குப்பை, செம்மண் போன்றவையிட்டு நீர் தெளித்து வந்தால் முளைத்து விடும். சுமார் 1– 2 அடி வரை வளர்ந்த கன்றுகள் வேர் அறுபடாமல் பிடுங்கி மழைக் காலத்தில் நிலத்தில் நடலாம்.

**(மதலை முத்து, தென்கனிகோட்டை, தருமபுரி)**

## சூபாபுல் தழை தீவனம்

சூபாபுல் தழையைக் கொடுப்பதால் பசுமாட்டு பாலின் அளவும், பாலின் கொழுப்புச் சத்தும் கூடுகின்றது. ஒரு நாளைக்கு 10 கிலோ அளவு இதனை வேறு தீவனங்களுடன் கலந்து கொடுக்கலாம். 2 பசுமாடுகளுக்கு சுமார் 500 மரங்கள் வளர்க்கலாம். இம்மரத்தை சுமார் 5–6 அடி உயரம் அடைந்தவுடன் அதற்கு மேல்பகுதியில் வளரும் தழைகளை வெட்டி தீவனமாக மாடுகளுக்கு அளிக்க வேண்டும். 40 நாட்கள் இடைவெளியில் தழையை மீண்டும் மீண்டும் வெட்டி போடலாம்.

**நந்தகோபால், கொண்டே கவுண்டன்பாளையம்,**
**பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம்.**

## கொறங்காடு மேய்ச்சல் நிலம்

கொறங்காடு என்பது ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், திண்டுக்கல், கரூர் ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளிலும் கால்நடை மேய்ச்சலுக்கு விவசாயிகளால் தொன்றுதொட்டு பாரம்பரியமாக பராமரிக்கப்படும் நிலமாகும். இத்தகைய கொறங்காடு முறை ஈரோடு மாவட்டத்தில் காங்கயம் தாலுகா மற்றும் தாராபுரம் தாலுகாவில் காணப்படுகிறது.



பொதுவாக உழவர்கள் நிலத்தை உழவு ஓட்டாமல் வேறு எந்த வேளாண்மையும் செய்யாமல் அப்படியே புற்கள் முளைக்க விட்டுவிட்டால் அதனை கொறை என்று கூறுவார்கள். அந்த முறையில் கொறங்காடு பகுதிகளில் காணப்படும் ‘‘கொழுக்கட்டைப் புல்’’ தானாக முளைத்திருக்கக் கூடும். அதை கால்நடைகள் விரும்பி உண்பதால் அதனை வேலி அடைத்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். இம்முறை மூலம் இதற்கு கொறங்காடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### கொறங்காடு பகுதியில் காணப்படும் தாவரங்கள்

கொறங்காடுகளில் முக்கியமாக கொழுக்கட்டைப் புல் வளர்க்கப் படுகிறது. மேலும் இதில் தாதரா, செப்பு நெருஞ்சி, காட்டு நரிப்பயறு, சவுரிக்கொடி ஆகியவை இயற்கையாகவே முளைக்கின்றன. மேலும் இதில் வெல்வேல் மரம் இயற்கையாகவே முளைக்கிறது. இது தவிர முளைக்கும் வேறு புற்களை களையாக அப்புறப்படுத்தி விடுவார்கள். கொள்ளு, நரிப்பயறு போன்றவற்றை கொறங்காட்டில் கொழுக்கட்டைப்புல்லுக்கு ஊடே உழவர்கள் விதைத்து அறுவடை செய்து கால்நடைகளின் உணவுக்குப் பயன்படுத்துகின்றனர். வெல்வேல் மரம் கால்நடை களின் உணவுக்கும், நிழலுக்கும் பயன்படுவதோடல்லாமல் உழவர் களின் விற்பனைக்குப் பயன்படுகிறது.

## பாதுகாப்பு வேலி

ஒவ்வொரு விவசாயியும் அவரவர் நிலத்தில் ஓரங்களில் சுற்றிலும்

கிளுவை முள்ளை ஊன்றி வளரச் செய்து கொறங்காட்டை பிற கால்நடைகள் வந்து மேய்ந்து விடாமல் பாதுகாக்கின்றனர். இந்த வேலிகளில் வேப்பமரம், ஊஞ்சல் போன்ற மரங்கள் முளைக்கின்றன. இவற்றை விற்பனைக்கு தகுந்த நிலை வரும்போதும் விற்று உபரி வருமானம் செய்கின்றனர். மேலும் இக்காடுகளில் முளைக்கும் மின்ன மரங்களை அதன் கிளைகளை வெட்டி ஆடுகளை அடைக்க பட்டி என்ற கிடைபோடப் பயன்படும் தரம்பு வேலி செய்ய பயன்படுத்து கின்றனர்.

ஒவ்வொரு உழவருக்கும் சராசரியாக குறைந்தது 5 ஏக்கர் முதல் 10 அல்லது 15 ஏக்கர் வரை கொறங்காடு மேய்ச்சல் நிலம் இருக்கும். இதில் 5 ஏக்கர் மேய்ச்சல் நிலம் இருப்பதாக எடுத்துக் கொண்டால் அதில் 20 செம்மறி ஆடுகள அல்லது 2 பசு 4 கன்றுகள் அல்லது 2 எருமை மாடுகள் வளர்ப்பர். கொறங்காட்டில் மேயும் கால்நடைகளுக்கு சினை பிடிக்காத பிரச்சனை பொதுவாக இருக்காது. கொறங்காட்டில் மேயும் மாடுகளின் பால் தரமாகவும், கூடுதலாகவும் இருக்கும்.



# பிற்சேர்க்கை

# செம்மறி ஆடு பராமரிப்பில் மூலிகை வைத்தியம்

- குடற்புழு மருந்து கொடுத்தல்
- நீலநாக்கு நோய்க்கு மருந்து கொடுத்தல்
- மசாலா உருண்டை கொடுத்தல்

**முன்னுரை**

செம்மறி ஆடு வளர்ப்பு இன்று ஏழை எளிய மக்களுக்கு நல்ல வருமானம் தரும் தொழிலாக உள்ளது. கிராமப்புறத்தில் குறிப்பாக வறட்சியான பகுதியில் அல்லது கால்நடை வளர்ப்பை முழு நேரத் தொழிலாக கொண்டவர்களுக்கு செம்மறி ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத்தை அளித்து வருகிறது. செம்மறி ஆடு விவசாயிகளுக்கு உபரி வருமானம் தரும் தொழிலாகவும், முழுநேர கிடைக்காரர்களுக்கு குலத்தொழிலாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் செம்மறி ஆட்டு இனங்களில் முக்கியமாக ‘‘வெம்பூர் இனம்’’ தூத்துக்குடி விருதுநகர் மாவட்டங்களிலும், ‘‘கீழக்கரிசல் இனம்’’ திருநெல்வேலி மாவட்டத்திலும், ‘‘மேச்சேரி இனம்’’ சேலம், ஈரோடு மாவட்டங்களிலும் ‘‘கச்சக்கட்டி கருப்பு இனம்’’ மதுரை மாவட்டத்திலும், ‘‘குறும்பை இனம்’’ கோவை மாவட்டத்திலும் மற்றும் ‘‘இராமாநாதபுரம் வெள்ளை இனம்’’ தென் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இந்த நாட்டு இனங்களைப் பராமரித்து வருபவர்களிடையே செம்மறி ஆடுகள் திடீரென இறந்துவிடும். இது குறிப்பாக மலை காலத்தில் அதிகமாகக் காணப்படும். செம்மறி

ஆடுகளுக்கு கிடைக்காரர்கள் மருந்து கடையில் ‘ நில்வர்ம்’ அல்லது ‘ அல்பென்டசோல்’ போன்ற குடற்புழு நீக்க மருந்தை வாங்கி பயன்படுத்துவார்கள். இம்மருந்து கொடுத்த நாளில் ஆடு கிரக்கமாக இருந்து பின்னா் தெளியும்.

இது போன்ற சமயத்தில் செம்மறி ஆடுகளை இயற்கையான முறையில் நன்கு பராமரித்து நோய் வராமல் பாதுகாக்க வழி யிருக்கிறதா என்று பார்த்தால் வழிகள் நிச்சயம் உண்டு என கூறத் தோன்றுகிறது. சுகாதார முறையில் பராமரிப்பு முறைகள், மழைக் காலத்தில் புற்களில் உள்ள நீர்த்துளி காய்ந்தபின் சற்று நேரம் தாழ்த்தி மேய்ச்சலுக்கு கொண்டு செல்லுதல், சுத்தமான நீர் குடிக்க விடுதல், கட்டுத்தரையை சுத்தமாக வைத்தல், இரவில் சில நாட்களில் இடம் மாற்றி அமர்த்துதல் போன்றன கடைபிடித்தல் அவசியமாகும். இவை தவிர நோய் வரும் முன் இயற்கை வழி தீர்வு முறையான மூலிகை மருந்து கொடுக்கும் பாரம்பரிய வழியில் பராமரிப்பது தற்சமயம் அரிதாக உள்ளது. இளைய தலைமுறைக்கு மூலிகை வைத்தியம் செய்வது தெரியாமல் உள்ளது அல்லது இதில் நம்பிக்கையும் இல்லை. எளிய வழி தீர்வு முறைகளை கையாளுவதை எடுத்துக் கூற யாரும் முன்வரவில்லை.

கால்நடை மருத்துவக் கல்லூரி பாடத்திட்டத்திலும் ஆங்கில மருந்து மூலம் தீர்வுகாணும் முறை மட்டும் உள்ளது. ‘‘சேவா’’ தொண்டு நிறுவனம் கிராமப்புறத்தில் சில அனுபவமிக்க வயதில் முதிர்ந்த கால்நடை மூலிகை வைத்தியர்களின் வைத்திய அனுபவங்களை தொகுத்து வந்துள்ளது. இந்த அனுபவங்களை இளையதலைமுறையினருக்கும், விவசாயிகளுக்கும் எடுத்துக் கூறி இதன் மூலம் செம்மறி ஆடு தொழில் நட்டம் ஏற்படாமல் குறிப்பாக திடீரென செம்மறி ஆடுகளுக்கு இறப்பு ஏற்படாமல் இருக்க ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டது. இதன் படி செம்மறி ஆடு பராமரிப்பில் குடற்பழு மருந்து கொடுத்தல், மசாலா உருண்டை கொடுத்தல்,



நீலநாக்கு நோய்க்கு மருந்து கொடுத்தல் இவைகளில் உண்டான அனுபவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

### குடற்புழு மருந்து கொடுத்தல்

ஈரோடு மாவட்டத்தில் நல்லாம்பாளையம் கிராமத்திலும், மதுரை மாவட்டத்தில் கச்சக்கட்டி கிராமத்திலும், தூத்துக்குடி மாவட்டத்தில் வெம்பூர், மெட்டில்பட்டி, கீழக்கரந்தை, மேலக்கரந்தை, பட்டிதேவன்பட்டி, மாவிலிப்பட்டி கிராமங்களில் 72 விவசாயிகள் அல்லது ஆடு பராமரித்து வரும் நபர்களைத் தேர்வு செய்தோம். இவர்களிடம் 2385 செம்மறி ஆடுகள் உள்ளன. மொத்தம் 2385 செம்மறி ஆடுகளுக்கு மாதம் ஒருமுறை மூலிகை திரவ மருந்தும், அடுத்த மாதம் மசாலா உருண்டை என்ற முறையில் மாறி மாறி கொடுத்து வந்தோம்.

### மருந்து கொடுத்த முறை

1முதல் மாதம் (எப்ரல் 08) – குடற்புழு மூலிகை மருந்து கொடுத்தல்

2 வது மாதம் (மே 08) – மசாலா உருண்டை அளித்தல்

3 வது மாதம் (ஜுன் 08 ) – குடற்புழு மூலிகை மருந்து அளித்தல்

4 வது மாதம் (ஜுலை 08 ) –மசாலா உருண்டை அளித்தல்

5 வது மாதம் (ஆகஸ்ட் 08)– குடற்புழு மூலிகை மருந்து கொடுத்தல்

6 வது மாதம் (செப்டம்பர் 08) – மசாலா உருண்டை அளித்தல்

## குடற்புழு மருந்து தயார் செய்தல்

குடற்புழு மருந்தை ஈரோடு மாவட்டம் கருக்கம்பாளையம் கிராமத்திலுள்ள திரு. செல்லமுத்து அவர்களிடமிருந்து கரைசலாகப் பெற்றுக் கொண்டோம். செல்லமுத்து குடற்புழு மருந்தை கீழ்கண்டவாறு தயாரித்து கொடுக்கிறார்.

| மருந்து பொருட்கள் | அளவு |
|---|---|
| பீநாரி சங்கு செடி | 1 கிலோ |
| எருக்களை | 1 கிலோ |
| வேப்பங்கொட்டை | 1 கிலோ |
| சோற்றுக்கற்றாழை | 1 கிலோ |
| நொச்சி தழை | 1 கிலோ |

ஒவ்வொன்றும் 1 மடங்கு என்ற விகித்தில் எடுத்து சேர்த்து ஆட்டி சாறு எடுத்து வடிகட்டி வைத்துக் கொள்கிறார். இந்த மூலிகை கரைசலை ஆடு, மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தாகக் கொடுக்கப்படுகிறது. செம்மறி ஆடுகளுக்கு (வளர்ந்த ஆடு) 30 மி.லி., குட்டிகளுக்கு 10 மி.லி. என்ற அளவில் காலையில் வெறும் வயிற்றில் ஊற்ற வெண்டும்.

சில ஆடுகளுக்கு ஆங்கில மருந்தான "பென்பண்டோசல" மட்டும் ( ஒரு ஆட்டிற்கு 10 மி.லி. விகிதம்) கொடுக்கப்பட்டது. சில ஆடுகளுக்கு எந்த வித மருந்தும் கொடுக்கப்படவில்லை.

மேற்கூறப்பட்ட 3 வகை பிரிவு ஆடுகளிலிருந்தும் சாணம் மாதிரி பெறப்பட்டு சாணியில் புழுக்கள் உள்ளனவா என்று சோதனை செய்யப்பட்டது. ஆடுகள் மேய்ப்புத்தன்மையயும், போடும் புழுக்கையும் பார்க்கப்பட்டது. பின்னர் சோதனை முடிவு கீழ்க்கண்டவாறு இருந்தது.



| மருந்து கொடுத்த முறை | சாணத்தில் புழு குறைந்த சதவீதம் | |
|---|---|---|
| | நல்லாம்பாளையம் | வெம்பூர் |
| மூலிகை மருந்து கொடுக்கப்பட்ட ஆடு | 73. 65% | 88.64% |
| 'பென்பண்டோசல்' கொடுக்கப்பட்ட ஆடு | 94.18% | 78. 87% |

## ஆடுகளுக்கு மசாலா உருண்டை அளித்த விவரம்

சேவா களப்பணியாளர்கள் மூலம் ஆடுகளுக்கு பெருநெல்லிக்காய் அளவு மசால் உருண்டைகள் தயார் செய்யப்பட்டு ஓர் ஆட்டுக்கு ஓர் உருண்டை என அடுத்தடுத்த மாதம் ( 2 மாதங்களுக்கு ஒரு முறை) போடப்பட்டது.

## மசால் உருண்டை தயார் செய்யும் விதம்

கண்டங்கத்திரி, சிறுதும்பை, குப்பைமேனி, வீலி, பெருந்தும்பை, உசிலை, துளசி, ஆவாரம்பூ விராலி, மூங்கில் இலை, புளியம்பிரண்டை, துத்தி, முசுமுசுக்கை, கொளுஞ்சி, மஞ்சணத்தி, வேலிப்பருத்தி, நிலவேம்பு, கொய்யா கொழுந்து இலை, வெற்றிலை ஆகியவற்றில் வகைக்கு 50 கிராம் (ஒரு கைப்பிடி அளவு) எடுத்துக் கொண்டு நன்றாக இடிக்க வேண்டும். திப்பிலி, சீரகம், சோம்பு, பெருங்காயம், வால் மிளகு, சுக்கு, மிளகு, மிளகாய்வற்றல், கசகசா, இலவங்கம், வெந்தயம், ஓமம், மல்லி, மாவிலங்கம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 10 கிராம் எடுத்து இடிக்க வேண்டும். இவைகளுடன் வாழைப்பு 1, கல் அத்திக்காய் 100 கிராம், சோற்று கற்றாழை ½ கிலோ, பிரண்டை ½ கிலோ, சிறுவெங்காயம் ¼ கிலோ, தேங்காய் 1, வெள்ளைபூண்டு 100 கிராம், கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம், வெல்லம் 100 கிராம் இவைகளை நீர் ஊற்றாமல்

மொத்தமாக ஆட்டி உருண்டைகளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உருண்டைகள் ஒவ்வொன்றும் சுமார் 100 கிராம் அளவு இருக்குமாறு பிடிக்க வேண்டும். ஆடுகளுக்கும், கன்றுகளுக்கும் 50 கிராம் அளவு உருண்டைகளாக பிடித்து வைத்துக் கொள்ளலாம். இந்த உருண்டைகளை மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும். இதனை 4 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கலாம். கால்நடைகளுக்கு காலை மாலை 3 நாட்கள் வரை கொடுத்து வரலாம். இது மாடுகளின் இளைப்பு, அடைப்பான், வயிற்றுக் கிருமி ஆகியவற்றை நீக்கப் பயன்படும். மசால் உருண்டை கொடுத்த பின்பு குடிநீர் போதுமான அளவு குடிக்கக் கொடுக்க வேண்டும். குடிநீர் குடித்த பின்பும் மேலும் நீர் குடிக்க நாக்கில் சோத்து உப்பை தேய்த்து விட வேண்டும். இங்ஙனம் 2-3 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். (மசால் உருண்டை தயாரிக்கும் முறையை மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா, மேல உரப்பனூர் கிராமத்திலுள்ள வைத்தியர் மூக்கன் அவர்களிடமிருந்து பழகிக் கொண்டோம். இம்முறையை கடைபிடித்து இதுவரை சுமார் 15,000-த்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளுக்கு கொடுத்து நல்ல பலன் பெற்றதை நாங்கள் பார்த்து வருகின்றோம். சேவா மூலம் கொடுத்த பயிற்சியில் பல மாணவர்களுக்கு இதனை கற்றுக்கொடுத்து அவர்களும் தங்கள் இடங்களில் கொடுத்து பார்த்ததில் நல்ல பலன் கிடைத்ததை தெரிவித்துள்ளனர்).

**மசால் உருண்டை தரப்பட்ட ஆடுகளின் வளர்ச்சியைக் கண்டறிதல்**

சாத்தூரில் உள்ள அரசு ஆட்டுப் பண்ணையில் 3 - 4 மாத செம்மறி ஆட்டுக் குட்டிகளுக்கு மசாலா உருண்டை தரப்பட்டது (ஜுலை - ஆகஸ்ட் 08). மசால் உருண்டை தரப்பட்ட ஆடுகளில் உடல் எடை சற்று கூடுதலாக இருந்தது கண்டறியப்பட்டது. ஓர் ஆட்டிற்கு சீமைக்கருவேல் விதைகளை அளவிற்கதிகமாக தின்று விட்டதால் வயிறு ஊதிவிட்டது. இந்த ஆட்டிற்கு 3 மசாலா உருண்டை தர 1



மணி நேரத்தில் வயிறு ஊதல் சரியாகிவிட்டது.

**முடிவுரை**

மூலிகை குடற்புழு நீக்க மருந்தும், மசாலா உருண்டையும் 2385 செம்மறி ஆடுகளுக்கு 6 மாதங்கள் மாறி மாறி மாதந்தோறும் கொடுக்கப்பட்டது. இதற்கு 72 செம்மறி ஆடு வளர்க்கும் விவசாயிகள் அல்லது கிடைக்காரர்கள் ஒத்துழைப்பை நல்கினர். இந்த ஆராய்ச்சி ஈரோடு மாவட்டத்திலுள்ள தாராபுரம் பகுதி நல்லாம்பாளையம் கிராமத்திலும், தூத்துக்குடி மாவட்டத்தில் புதூர் வட்டம் வெம்பூர் பகுதியிலும் ஏப்ரல் 08 முதல் செப்டம்பர் 08 வரை நடத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சியின்படி கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்து காட்டியுள்ளோம்.

- மூலிகை மருந்து , மசாலா உருண்டை தரப்பட்ட ஆடுகள் நன்றாக மேய்ச்சலை எடுத்தன, சுறுசுறுப்பாகக் காணப்பட்டன, பெருஞ்சாணி போட்டு கழியாமல் புழுக்கை போட்டன.
- மருந்து கொடுக்கப்பட்ட ஆடுகளில் நீலநாக்கு நோய், தரை கழிச்சல் , வெக்கை நோய், துள்ளுமாரி, ஆட்டம்மை, கால்காணை, வாய்க்காணை நோய் போன்ற நோய் எதுவும் தாக்கப்படவில்லை.

0 குடற்புழு மருந்தை எளிதில் விவசாயிகள் அல்லது ஆட்டுக்காரர்களே தயாரிக்கலாம். நொச்சி, வேம்பு, எருக்களை, சோற்றுக்கற்றாழை, பீநாரிச்சங்கு ஒவ்வொன்றும் சமபங்கு எடுத்து ஆட்டி வடிகட்டி வைத்துக் கொள்ளலாம்.

0 ஆங்கில மருந்தை குடற்புழு நீக்கத்திற்காக தரும் சமயம் வெய்யில் காலங்களில் மயக்க நிலையை உண்டாக்கும். மருந்தின் அளவு அதிகரித்துக் கொடுத்து விட்டால் இறப்பு உண்டாகும் வாய்ப்புண்டு. இத்தகைய விபரீதம் மூலிகை மருந்திற்கு உண்டாகாது.

0 ஆங்கில மருந்து பயன்படுத்தும் சமயம் செம்மறி ஆட்டு மாமிசத்தில் ரசாயனப்பொருள் தேங்கும் வாய்ப்புண்டு. இது இறைச்சி உண்பவர் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும். இது போன்ற நிலைமை மூலிகை மருந்தை உபயோகப்படுத்தும் சமயம் ஏற்படாது.

0 ஆங்கில மருந்தான அல்பென்டசோல், பென்பண்டசோல் பொன்றவற்றை தொடர்ந்து கொடுத்துவர குடற்பழுக்களுக்கு எதிர்ப்பு சக்தியை அளித்து மருந்து பயனில்லாமல் போய்விடும். ஆனால் மூலிகை மருந்துகளுக்கு இதுவரை எதிர்ப்பு சக்தி உண்டாகிய நிலைமை ஏற்பட்டதில்லை.

**நன்றி**

இந்த ஆராய்ச்சிக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள 'கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மை துறை' உதவி செய்தது. இதற்கான ஆராய்ச்சி நிதி உதவியை மதுரை **''டாடாதான் அகாடமி''** வழங்கி ஆய்வு மேற்கொள்ள மூல காராணமாயிருந்தது.



# VII. மாடு சினைபிடித்ததை எளிய முறையில் கண்டறிதல்

சாதாரணமாக ஒரு பசு அல்லது எருமையை சினைக்கு ஊசி அல்லது காளைக்கு போட்ட பின்னர் சினை பிடித்துள்ளதா என்பதை கண்டுகொள்ள ஆர்வமாய் காத்திருப்போம். நடைமுறையில் ஒரு கால்நடை மருத்துவரை அல்லது உதவியாளரை அணுகி கைவிட்டு பார்க்கச் சொல்கிறோம். இதற்கு பதிலாக கர்பப்பைக்குள் கைவிட்டு பார்க்காமலேயெ எங்ஙனம் சோதிக்கலாம் என்ற எண்ணத்தில் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்த திருமதி வீணா என்ற பெண்மணி தான் வெற்றிகரமக சோதனை செய்ததைக் கூறுகிறார்.

எகிப்து நாட்டில் இயேசு பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு உள்ள பிரமிடுகளில் பிளிண்டர்ஸ் பீட்டரி என்பவர் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஓலைச் சுவடியில் பெண்கள் கருவுற்றிருப்பதை எங்ஙனம் கண்டறிவது என்ற விவரத்தை திருமதி. வீணா காண நேரிட்டது. இதன்படி கருவுற்ற பெண்மணியின் சிறுநீரை பார்லி, கோதுமை விதைகளில் தெளித்து முளைக்கவிட வேண்டும். விதை முளைப்புத் திறன் மற்றும் நாற்று உயரமாக நன்கு வளர்ச்சியடைந்தால் கருவுற்றிருக்கிறார் என்றும், பார்லி நாற்று சற்று வளர்ச்சி கூடுதலாக காணப்பட்டால் பெண் சிசுவாகவும், கோதுமை நாற்று கூடுதலான வளர்ச்சியுடன் காணப்பட்டால் ஆண் சிசுவாகவும் இருக்குமாம். இதே முறையை பயன்படுத்தி மாடுகளில் சினை பிடித்திருப்பதைக் காணவே வீணா ஆராய்ச்சி மேற்கொண்டார். மாடுகளில் சினைபிடித்திருப்பதைக் கடைபிடிக்க கீழ்க்கண்டவாறு சோதனை செய்தல் வேண்டும். சினைக்குப் போட்ட 25 – 30 நாட்கள் கழித்து மாட்டின் சிறுநீர் (கோமியம்) பிடித்து இதை 4 பங்கு நீரில் கலந்து ஒரு கண்ணாடி குவளையில் உள்ள கோதுமை அல்லது சோளம் அல்லது பாசிப்பயறு விதைகளில் ஊற்றி முளைக்க வைக்க

வேண்டும். மற்றொரு கண்ணாடி குவளையில் வெறும் தண்ணீர் மட்டும் தெளித்து முளைக்க விட வேண்டும். 3வது குவளையில் சினை பிடிக்காத மாட்டின் கோமியம் எடுத்து 4 மடங்கு நீர் சேர்த்து விதைக்காக வைக்கப்பட்டுள்ள விதைகளில் தெளித்து முளைக்கவிட வேண்டும். சுமார் 3–5 நாட்கள் கழித்து விதையின் முளைப்புத் திறன் மற்றும் நாற்றின் வளர்ச்சி அதாவது உயரம் இவைகளைக் கொண்டு சினை அடைந்ததை நிர்ணயம் செய்யலாம்.

சினை பிடித்த மாட்டின் கோமியத்தில் முளைப்புத் திறன் ஓரளவு குறைந்தும், நாற்றின் வளர்ச்சி குன்றியும் இருக்கும். வெறும் தண்ணீரில் வளர்க்கப்பட்ட விதைகளின் முளைப்புதிறன் கூடுதலாகவும் (80%) நாற்று வளர்ச்சியும் கூடுதலாகவும் இருக்கும். சினைபிடிக்காத மாட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட கோமியத்தில் வளர்க்கப்பட்ட நாற்றுக்கள் சுமாரான நடுத்தர முளைப்புத் திறனும் (50%) நடுத்தர வளர்ச்சியுடனும் காணப்படும்.

இந்த சோதனையை நான் சுமார் 200 சினை மாடுகளுக்கு சோதித்துப் பார்த்து உறுதி செய்துள்ளேன். இந்த முறையைப் பயன்படுத்தி எருமை, ஆடுகளிலும் சினைபிடித்ததை உறுதி செய்ய முடியும்.

**Address:Smt . Veena, Dept. Veterinary Biochemistry,**
**Veterinary College, Hebbal, Bangalore - 560 024**
**Ph: (R) 080- 23636412 ; (o) 55345278 (Extn.206)**
**veenahabilis@rediffmail.com**